BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

1 கொரிந்தியர்

கொரிந்து, அத்தேனே பட்டணங்கள் அகாயா பகுதியில் அமைந்துள்ளன. கொரிந்து கி.மு.146-இல் இடிக்கப்பட்டு, ரோமரால் கி.மு. 44-இல் மீண்டும் கட்டப்பட்டது. அகாயாப் பிராந்தியத்தின் தலைநகர்ப் பட்டணமாகக் கொரிந்து திகழ்ந்தது. இது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் செல்வச் சிறப்புற்றிருந்தது. விக்கிரக ஆராதனையும், துர்நடத்தையும் இங்கு குடிகொண்டிருந்தன. இந்தப் பட்டணவாசிகள் பல தெய்வங்களை வணங்கினர். ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைக்கு இவர்கள் பேர் பெற்றிருந்தனர்.

முதலாம் கொரிந்தியரின் பின்னணியும், பொருளடக்கமும்

ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகக் கொரிந்துவில் பவுல் ஊழியஞ்செய்தார் (அப்போஸ்தலர் 18:1-18). இந்தச் சமயத்தில்தான் கொரிந்து சபை ஸ்தாபிக்கப்பட்டது. பிற்பாடு பவுல் அந்தியோகியா சென்றார். இதன்பின் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தை அவர் மேற்கொண்டார். (அப்போஸ்தலர் 18:23).

தனது மூன்றாம் பிரயாணத்தில் பவுல் எபேசு சென்று, அங்கே இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தங்கியிருந்தார் (அப்போஸ்தலர் 19:8-10). அவர் அங்கிருந்தபொழுது, கொரிந்து சபையைப் பற்றிய அறிக்கைகளையும் (1கொரிந்தியர் 1:11; 5:1; 11:18), கேள்விகள் பல அடங்கிய கடிதத்தையும் (1கொரிந்தியர் 7:1,25; 8:1; 12:1; 16:1,12) பெற்றுக்கொண்டிருக்கிறார். அவர் முந்தி பெற்றிருந்த அறிக்கையொன்றுக்குப் பதில் கூறும் வகையில் ஓர் கடிதத்தை எழுதியிருக்கக் கூடும் என்பதை 1கொரிந்தியர் 5:9 மூலம் அறிகிறோம். இவ்விதம் அவர் பெற்ற அறிக்கைகளும், மறுமொழியாக அவர் எழுதிய கடிதமும், சன்மார்க்கத் தராதரங்கள் மற்றும் கிறிஸ்தவக் கோட்பாடுகள் சம்பந்தப்பட்டப் போதனை கொரிந்தியர்களுக்கு மிகவும் தேவையாக இருந்ததென்பதை வெளிப்படுத்தின. அறிக்கைகளில் எழுப்பப்பட்டப் பிரச்சினை ஒவ்வொன்றுக்கும் பதில் அளித்து, அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கி முதலாம் கொரிந்தியரைப் பவுல் எழுதினார்.

முதலாம் கொரிந்தியரின் பொருளடக்கத்தை இரண்டு அடிப்படைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்:-

1. அதிகாரங்கள் 1-6: "குலோவேயாளின் வீட்டாரால்" பவுலிடம் கொண்டு வரப்பட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்த பிரச்சினைகள் (1கொரிந்தியர் 1:11). அவையாவன:-

    அ. சபையிலிருந்தப் பிரிவினைகள் (1:10-4:21).

    ஆ. சபையிலிருந்த சன்மார்க்க நன்னெறி ஒழுக்கக் கேடுகள் (அதிகாரங்கள் 5,6).

2. அதிகாரங்கள் 7-16. கொரிந்தியரால் பவுலுக்கு எழுதப்பட்டதோர் கடிதத்தில், எழுப்பப்பட்டிருந்த கேள்விகள். அவை கீழ்க்கண்ட பொருளைப் பற்றியதாகும்.

    அ. விவாகம் (அதிகாரம் 7).

    ஆ. கேள்விக்குரிய நடைமுறைகள் (8:1-11:1).

    இ. பொது ஆராதனை (11:2-14:40).

1 கொரிந்தியர்

ஆராதனை சம்பந்தப்பட்ட சபையின் இரு பெரும் முக்கிய விஷயங்களைப் பற்றிய நீள விவாதம் இப்பிரிவில் அடங்கும். 1. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்பொழுது நடந்துகொள்ள வேண்டிய விதம், 2. ஆவிக்குரிய வரங்கள் (வரங்களின் உறைவிடச் சோதனை, வரங்களின் பட்டியல், விசுவாசிகளுடைய வரங்களில் வித்தியாசம், வரங்களைப் பயன்படுத்துவது பற்றிய விதிமுறைகள்.

ஈ. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் (அதிகாரம் 15). இந்த அத்தியாயம் 1தெசலோனிக்கேயர் 4:13-5:11, 2தெசலோனிக்கேயர் 2:1-12 ஆகியவற்றுடன் நேரிடையாகச் சம்பந்தப்பட்டதாகும்.

உ. நடைமுறை மற்றும் தனிப்பட்ட விஷயங்கள் (அதிகாரம் 16).

இந்த நிருபம் முறைப்படி அமையாத கடித வகையைச் சார்ந்ததாகும். பவுல் கொரிந்தியரோடு நேருக்கு நேர் பேசும் சம்பாஷணையைப் போல் இது அமைந்துள்ளது. அவர் அவர்களிடம் கேள்விகளைக் கேட்கிறார். (1:20; 4:7). அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறார் (4:14-16) அவர்களை எச்சரிக்கிறார். (4:18-21). அவர்களைக் கடிந்து கொண்டு (5:2,6), போதிக்கிறார். (12:1-6). இவை அனைத்திலும், கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்துவே ஆண்டவராக இருக்க வேண்டுமென்ற உண்மையைப் பவுல் வலியுறுத்துகிறார்.

1கொரிந்தியர் கிறிஸ்தவ நடத்தையில் கோட்பாடுகள்

1. அறிமுகம் (1:1-9).
2. பிரிவினைகளுக்கானத் தீர்வு (1:10-4:21).
3. ஒழுக்கத்திற்கானத் தேவை (5:1-6:20)
4. விவாகத்தைப் பற்றிய ஆலோசனை (7:1-40).
5. சுயாதீனத்தைத் தகுதியாகப் பயன் படுத்துதல் (8:1-10:33).
6. பொதுவான ஆராதனை ஒழுங்கு (11:1-14:40)
7. சுவிசேஷமும், அதன் பலமும் (15:1-58)
8. முடிவானக் குறிப்புகள் (16:1-24).

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. அகாயா பிராந்தியத்தின் தலைநகராகக் கொரிந்து நிகழ்ந்தது. இது செல்வச் செழிப்புடன் விளங்கியது. இருப்பினும், இப்பட்டணவாசிகள் பல தெய்வ வணக்கமுடையவர்களும், பெரிதும் நெறி கெட்டவர்களுமாயிருந்தார்கள்.

2. தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தில் 1கொரிந்தியரைப் பவுல் எழுதினார். அவர் எபேசுவில் 2 ஆண்டுகள் தங்கியிருந்தார். இக்காலத்தில், கொரிந்து சபையிலிருந்து தனிப்பட்ட அறிக்கைகளையும், கடிதங்களையும் பெற்றார். அவர் 1 கொரிந்தியரை எழுதுவதற்கு இது தூண்டுதலாயிருந்தது.

1 கொரிந்தியர்

3. 1 கொரிந்தியரின் பொருளடக்கத்தை இவ்விதம் பிரிக்கலாம். 1) "குலோவேயாளின் வீட்டாரால்" எழுதப்பட்டத் தனிப்பட்ட அறிக்கைகளில் அடங்கியிருந்தப் பிரச்சினைகள், 2) கொரியந்தியரால் பவுலுக்கு எழுதப்பட்டக் கடிதங்களில் அடங்கியிருந்தக் கேள்விகள்.

பெரும் பிரச்சினைகளும், கேள்விகளும் இவற்றுடன் சம்பந்தப்பட்டவை: (அ) சபையில் பிரிவினைகள், (ஆ) சன்மார்க்க, நன்நெறி ஒழுக்கக் கேடுகள், (இ) விவாகம், (ஈ) பொது ஆராதனை, (உ) மரித்தோரின் உயிர்த்தெழுதல்.

கிறிஸ்துவின் சிலுவையும் மனித ஞானமும்

1 கொரிந்தியர் 1:18-2:5

முகவுரை

அ. கொரிந்துவில் இருந்த சபையில் பல பிரிவுகள் இருந்திருக்கலாம். ஆனால் பிரதான பிரிவானது கொரிந்து சபைக்கும், அதின் ஸ்தாபகர் பவுலுக்கும் இடையில் இருந்தது. பவுல் சென்ற பின் அவருடைய போதனையை மறுக்க சபையில் சிலர் முயற்சித்துக் கொண்டிருந்தனர்! அவர்கள் இவ்விதமாய் சொல்லிக் கொண்டிருந்தனர் - 'பவுலின் ஞானமானது (அவர் பிரசங்கித்துக் கொண்டிருக்கிற கிறிஸ்துவின் சிலுவை) கிரேக்க அறிவாளிகள், தத்துவமேதைகள் மற்றும் ஞானிகளின் ஞானத்தை விட தரம் குறைந்த அவருடைய ஞானத்தை அவர் வெளிப்படுத்தும் திறமையும் தரம் குறைந்தது''. இந்த குற்றச்சாட்டிற்கு பவுல் தரும் எதிர்வாதம் தான் இந்த பாடத்தின் தலைப்பாகும்.

1. மனித ஞானத்தைவிட கிறிஸ்துவின் சிலுவை ஞானம் நிறைந்தது

அ. பவுலின் எதிர்வாதம் 17 ஆம் வசனத்தில் தொடங்குகிறது: "கிறிஸ்துவின் சிலுவை வீணாய் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினான்". சுவிசேஷத்தை சொல் வன்மையுள்ள பேச்சினாலும், மனித பகுத்தறிவுத் திறனினாலும் தான் பிரசங்கித்திருந்தால், சுவிசேஷ செய்தியானது தனது வல்லமையை இழந்திருக்கும் என்று பவுல் சொல்கிறார். அவ்வகையான உபதேசம், மனிதர்களை சிலுவையினிடத்திற்கும், கிறிஸ்துவினிடத்திற்கும் இழுப்பது இல்லை.

ஆ. வசனம் 18: சிலுவையின் செய்தியானது, மக்களை பலவிதங்களில் பாதிக்கிறது. 1) அழிந்துக் கொண்டிருப்பவர்கள். (பாதாளத்திற்கும் நரகத்திற்கும் போய்க் கொண்டிருப்பவர்கள்) அது முட்டாள்தனமானது என்று நினைக்கின்றனர் 2) இரட்சிக்கப்பட்டு கொண்டிருப்பவர்கள், (பரலோகத்திற்கும், நித்திய மகிமைக்கும் போய்க் கொண்டிருப்பவர்கள்) அது தேவனுடைய வல்லமை என்று விசுவாசிக்கின்றனர்.

இ. வசனம் 19 இது ஏசாயா 29:14-இன் மேற்கோள் ஆகும். இந்த வேத பகுதியிலே, "தேவனுடைய சமயோசித்தோடு ஒப்பிட முயற்சிக்கக் கூடாது'' என்று இஸ்ரவேல் எச்சரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதை தான் கொரிந்தியர்களும் செய்ய முயற்சிக்கிறார்கள் என்று பவுல் சொல்கிறார். கிறிஸ்துவின் சிலுவையாகிய தேவ ஞானத்திற்கு மனித ஞானமானது எவ்விதத்திலும் ஈடாக முடியாது. வாழ்க்கையின் எல்லா கேள்விகளுக்கும் தங்களிடத்தில் பதில் உண்டு என்று நினைத்த விசுவாசிக்காத தத்துவமேதைகளிடமிருந்தும், அறிவாளிகளிடமிருந்தும், கொரிந்து விசுவாசிகள் தங்கள் மேலான எண்ணங்களை பெற்றுக் கொண்டிருந்தனர்.

ஈ. வசனங்கள் 20-24. ஞானிகள், படிப்பாளிகள் மற்றும் தத்துவ மேதைகள் (விவாதிப்பவர்கள்) ஆகியோரின் ஞானமானது, தேவ ஞானத்தோடு ஒப்பிடும் போது ஒன்றுமில்லை. தன்னுடைய எல்லா ஞானத்தோடும், இந்த உலகத்தால் கிறிஸ்துவை கண்டடைய முடியவில்லை. சிலுவையின் உபதேசத்தின் மூலமாக மட்டுமே (தேவ ஞானம்), மனிதர்கள் கிறிஸ்துவை கண்டடைய முடிகிறது. ஆகவே தான் "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே" பிரசங்கிக்கிறேன்.

கிறிஸ்துவின் சிலுவையும் மனித ஞானமும்

1 கொரிந்தியர் 1:18-2:5

உ. சாதாரண சுவிசேஷ செய்தியானது: 1) தாங்கள் விசுவாசிப்பதற்கு முன் அற்புதமான அடையாளங்களைக் கேட்கும் யூதர்களுக்கு தடைக்கல்லாக இருக்கிறது; 2) மனித ஞானத்தின் வார்த்தைகளை கேட்கும் புறஜாதியாரின் முட்டாள்தனமாக இருக்கிறது. சாதாரண சுவிசேஷ செய்தியை கேட்டு விசுவாசிக்கும் யூதர்களும், கிரேக்கர்களுமோ, அது உண்மையில் தேவனுடைய வல்லமை மற்றும் தேவனுடைய ஞானம் ஆகியவற்றின் வெளிப்பாடு என்பதை கண்டடைகின்றனர்.

ஊ. வசனம் 25 வசனங்கள் 18-24 ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட, அனைத்தும் கொண்ட ஒரு கூற்றாகும்.

1. தேவனுடைய ஞானமானது (சிலுவையின்) மனித ஞானத்திலும் ஞானமுள்ளதாக மாறுகிறது.

2. தேவ ஞானமானது (சிலுவையின்) மனித ஞானமும், பெலமும் சாதிக்க முடியாததை சாதிக்கும். பாவத்தின் அழிவும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் உள்ள பிசாசின் ஆதிக்கமும்).

எ. சீனாவிலுள்ள என்னுடைய ஒரு பயணத்தின் போது, ஒரு வீட்டுச் சபையை சந்தித்தேன். அங்கு சில அவிசுவாசிகள் இருந்தனர். பெருமையும், கர்வமுமுள்ள எண்ணங்கொண்ட ஒரு வாலிபன் என்னிடத்தில் சொன்னான் "சீனாவின் பெரிய ஞானிகள் மற்றும் தத்துவ மேதைகளைப்பற்றி உமக்கு தெரியுமா? அவர்களுடைய ஞானம், தேவனுடையதும், கிறிஸ்துவினுடையதுமான ஞானத்தைப் போன்றே சிறந்தது என்று நீங்கள் நினைக்கவில்லையா?". அந்த மனிதனோடு நான் தர்க்கம் செய்யவில்லை. என்னுடைய ஒரே நோக்கம், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவனுக்கு அளிப்பது. பவுலைப் போல, நானும் சிலுவையின் ஞானத்தையும், இரட்சிப்பதற்கு அதற்கு உண்டான வல்லமையையும் அவன் அனுபவிக்க வேண்டும் என்று விரும்பினேன் - சீனாவின் எல்லா சிறந்த ஞானிகளின் மற்றும் தத்துவமேதைகளின் ஞானமும் வல்லமையும் செய்ய முடியாததொன்று!

2. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதலானது, மனித ஞானத்திற்கு பதிலாக கிறிஸ்துவின் சிலுவையை பிரசங்கிப்பதினால் உண்டாகிறது.

அ. வசனம் 26. இவ்வுலகத்தில் மிகக்குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவர்களுக்கு சுவிசேஷ செய்தியில் விசேஷ அழைப்பு இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் முன்பு அநேக கொரிந்தியர்கள் அவ்வண்ணம் தானிருந்தனர். நம்மில் அநேகரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் முன்பு அப்படித்தான் இருந்தோம். ஆகவே, ஒருவேளை நீங்கள் எவ்வளவு ஞானத்தோடும், பெலத்தோடும் இருப்பதை குறித்து பெருமையாய் பேசுவீர்களானால், கிறிஸ்துவை விசுவாசிக்கும் முன் நீங்கள் என்னவாக இருந்தீர்களென நீங்கள் நினைவு கூரவேண்டும்!

ஆ. தனிப்பட்ட விதத்தில் சாட்சியை நாம் பகரும்போது, மிஷனெரிகளை அனுப்பும் போது, ஆத்தும ஆதாயம் செய்யும்படி திட்டமிடும் போது, நாம் இவைகளை நினைவுகூர வேண்டும் என்று நான்நினைக்கிறேன்.அறுப்பிற்குஆயத்தமாயுள்ள நிலங்கள் (ஜனங்கள்) யாரெனில் இவ்வுலகில் மூடத்தனமான,பெலவீனமான,அற்பமாய் எண்ணப்பட்ட (தாழ்வான சூழ்நிலைகளிலோ அல்லது சிறுபான்மையானவரோ) மக்களே!. இவ்வுலகில் தங்களை ஞானமுள்ளவரெனவும், பெலமுள்ளவரெனவும்கருதுகின்றவர்கள். பொதுவாக சுவிசேஷத்தை புறக்கணிப்பர்.

கிறிஸ்துவின் சிலுவையும் மனித ஞானமும்

1 கொரிந்தியர் 1:18-2:5

ஈ. வசனம் 28. பெலவீனமான, தாழ்மையான மற்றும் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை தெரிந்துக் கொள்வதின் மூலம், தேவன் "உள்ளவைகளை அவமாக்குகிறார்". இதனுடைய அர்த்தம், என்னவென்றால், எல்லா ஞானமும், வல்லமையும், புகழும், இவ்வுலகில் மதிப்பிடப்படக்கூடிய பொருட்களும் பிரயோஜனமற்றவையும் கடந்து போகிறவைகளுமாய் இருக்கின்றன என்பதே. அவைகள் வெளியே கடந்து போய்க் கொண்டிருக்கின்றன! சில செய்தியை ஏற்றுக்கொண்டவர்களையும், இவ்வுலகில் முக்கியத்துவம் அற்றவர்களையும் தன்னில் கொண்ட ராஜ்யமே இன்று உள்ளே வந்துக் கொண்டிருக்கிறது!

உ. யாராலும், குறிப்பாக மனித ஞானத்தையும், பேச்சுத்திறமை வாய்ந்த மனிதர்களை தேடிக் கொண்டிருக்கும் கொரிந்தியர்களாலும் தேவனுக்கு முன்பாக நின்று, "நான் செய்தேன், என் சுய பெலத்தாலும் ஞானத்தாலும் இரட்சிக்கப்பட்டேன்! "இதிலே மேன்மை பாராட்டுகிறேன்", என்று சொல்ல முடியாது. எபேசியர் 2:8-9இல் பவுல் இவ்வாறு பதிலளிக்கிறார்: "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல".

ஊ. வசனம் 30. "கிறிஸ்து இயேசுவே தேவனால் நமக்கு ஞானமானார் - நம்முடைய நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்"

இதனுடைய அர்த்தம் என்னவென்றால், உண்மையான ஞானத்தை கிறிஸ்துவில் மட்டுமே காணமுடியும், அவரிலுள்ள விசுவாசத்தின் மூலம் நாம் மீட்கப்பட்டு, தேவனுடைய பார்வையில் நீதிமானாக தீர்க்கப்படுகிறோம். அவரில் மட்டுமே மேன்மை பாராட்டுகிறோம்.

எ. வசனம் 31. இந்தக் குறிப்பை விளக்கும்படி, பவுல் எரேமியா 9:24ஐ பயன்படுத்துகிறார். "மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்".

ஏ. ஆண்டவருடைய தயவினால் தான் நாம் அவரை அறிகிறோம். அவருடைய இரக்கத்தினாலே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். இதை தேவ ஞானம் மாத்திரமே (கிறிஸ்துவின் சிலுவை) நம் ஒவ்வொருவருக்கும் சாதித்திருக்கிறது. இது மனித ஞானத்தாலும் பெலத்தாலும் செய்ய முடியாததாகும்!

3. மனித ஞானத்திற்கு பதிலாக கிறிஸ்துவின் சிலுவையை பிரசங்கி (2:1-5)

அ. வசனம் 1. "பேச்சுத்திறமை அல்லது மேம்பட்ட ஞானம்! சுவிசேஷத்தை பேச்சுத்திறமையோடு பவுல் பிரசங்கிக்கவுமில்லை, அவரது செய்தியானது உலகின் சிறந்த ஞானமும் அல்ல.

ஆ. "தேவனைப் பற்றிய சாட்சியை" தான் பறைசாற்றியதாக சொல்லும் போது, மனித வர்க்கத்திற்கு, கிறிஸ்துவின் மூலமாய் தேவன் செய்ததையே பறைசாற்றுவதாக பவுல் கூறுகிறார். இந்த செய்தியை அவர் பிரசங்கித்தபோது அதை பேச்சுத்திறமையோடாவது, உலகத்திலிருந்து சம்பாதித்த மேன்மையான ஞானத்தோடாவது அவர் பிரசங்கிக்கவில்லை.

கிறிஸ்துவின் சிலுவையும் மனித ஞானமும்

1 கொரிந்தியர் 1:18-2:5

இ. வசனம் 2. சுவிசேஷ செய்தியின் எளிமையான தோற்றம் என்னவென்றால் "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே". பவுல் பிரசங்கித்த ஒவ்வொரு பட்டணத்திலும் அவர் செய்ததிலிருந்து இதில் எவ்வித வேறுபாடும் இல்லை. வேதத்திலிருந்து இதே செய்தியைத்தான் அவர் கலாத்தியருக்கு பிரசங்கித்தார் என்பதை நாம் அறிவோம். "இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே" (கலாத்தியர் 3:1).

ஈ. வசனம் 3 கொரிந்தியர்களிடம் தான் "பெலவீனத்தோடும், பயத்தோடும், நடுக்கத்தோடும்" வந்ததாக பவுல் கூறுகிறார். கொரிந்துவை போன்று பெரிதும், பொல்லாததுமான பட்டணத்தை சுவிசேஷமாக்கும் வேலை செய்வதற்கு, தன்னை தகுதியற்றவராகவும், பிரம்ப்பு அடைந்தவராகவும் பவுல் கூறினார்.

உ. வசனம் 4! பவுலின் பிரசங்கமானது "ஆவியின் வல்லமையின் வெளிப்பட்டோடு" இருந்தது. எளிய சுவிசேஷ செய்தியை பவுல் பிரசங்கித்த போது ஜனங்கள் தங்கள் பாவங்களை குறித்து உணர்த்தப்பட்டனர். இது பவுலின் பேச்சுத்திறமையாலோ, பகுத்தறிவின் வல்லமையாலோ ஏற்பட்டதல்ல. ஆனால் கேட்பவரின் மனச்சாட்சிக்கு சுவிசேஷ செய்தியை ஏற்புற செய்த பரிசுத்த ஆவியின் வல்லமையாலே ஆனது. மனித ஞானத்தை சார்ந்த விசுவாசமானது, விசுவாசமேயல்ல. பரிசுத்த ஆவியின் உணர்த்துகின்ற வல்லமையினாலே ஏற்படும் கிறிஸ்துவிலுள்ள விசுவாசமே, தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது.

ஊ. அநேக கிறிஸ்தவர்கள், தங்கள் குடும்பம் அல்லது கிராமம், சமுதாயம், மாகாணம், தேசம் ஆகியவற்றை சுவிசேஷ மேயாக்கும். வேலையாலே பிரம்ப்படைகின்றனர். அது ஒரு பெரியவேலை. ஆனால், அப்போஸ்தலர் பவுலைப்போன்று எளிய சுவிசேஷ செய்தியை கொடுப்பார்களானால், அநேக அத்துமாக்களை அவர்கள் ஆதாயப்படுத்துவார்கள். இந்த எளிய செய்தியை எடுத்து, அநேகரை இயேசுவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய தமது வல்லமையை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துவார்.

முடிவுரை

அ. இந்த செய்தியின் முக்கிய சாராம்சம்:-

1. மனித ஞானத்தை விட, கிறிஸ்துவின் சிலுவை ஞானமுடையது.

2. மனித ஞானத்திற்கு பதிலாக, கிறிஸ்துவின் சிலுவை பிரசங்கிக்கப்படுவதினால் கிறிஸ்து ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

3. மனித ஞானத்திற்கு பதிலாக, கிறிஸ்துவின் சிலுவையை பிரசங்கி.

ஆ. நாம் பவுலின் இந்த வார்த்தைகளை நினைவுகூரவேண்டிய சமயம்:

1. நாம் நம்முடைய வாழ்க்கையை கர்த்தருக்கும், உலகத்துக்கும் முன்பாக வாழும்போது, நாம் கர்த்தரில் மட்டுமே மேன்மை பாராட்ட வேண்டும்.

2. தனிப்பட்ட நபர்களை ஆத்தும ஆதாயம் செய்யும்போது, மனித ஞானத்தைச் சாராமல், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பிரசங்கி.

கிறிஸ்துவின் சிலுவையும் மனித ஞானமும்

1 கொரிந்தியர் 1:18-2:5

3. நம்முடைய சமுதாயத்தை சுவிசேஷ மயமாக்கும்போது முட்டாள்கள், பெலவீனர், எளியவர் என்று கருதப்படுபவர்களின் நடுவில் அதை செய்.

4. மிஷனெரிகளை அனுப்பி, அவர்களை தாங்கும்போது உலகத்தால் முட்டாள்கள், பெலவீனர், எளியவர் என்று கருதப்படும் அநேக ஜனங்களிருக்கும் நாடுகளுக்கு அவர்களை அனுப்பு.

ஈ. எளிய சுவிசேஷ செய்தியை ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கு நான் அளிக்கும்போது, கீழ்க்கண்டவை சொல்லப்படுகின்றனவா என்று நான் எப்பொழுதும் நிச்சயித்துக் கொள்வதுண்டு:

1. "எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்" (ரோமர் *3:23*). இதனுடைய அர்த்தம், ஒவ்வொரு நபரும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறார்கள் என்பதே.

2. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் *6:23*). இதனுடைய அர்த்தம், நம்முடைய பாவம் நமக்கு ஒரு சம்பளத்தை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது என்பதே. அந்த சம்பளம் தான் மரணமும், நித்தியகாலமாக தேவனிடத்திடத்திலிருந்து பிரிவுமாகும்.

3. "நமது பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்திற்கும் நம்மை நீங்கலாக்கி, விடுவிப்பதற்கு அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் (1யோவான் *1:9*). இதனுடைய அர்த்தம், நாம் பாவிகளென்றும், ஒரு இரட்சகர் நமக்கு தேவையென்றும், நாம் அவரிடத்தில் அறிக்கையிடுவோமென்றால், இயேசு நமது பாவங்களை மன்னிக்க வாக்கு பண்ணுகிறார் என்பதே. பூலோகத்திலே, பாவங்களை மன்னிக்க, இயேசுவுக்கு மட்டுமே அதிகாரமுண்டு.

4. தேவனுடைய கிருபை வரமே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் *6:23*). இதன் அர்த்தம், நாம் பாவிகளாயிருக்கையிலேயே தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதே. அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவரும், இரட்சகருமாய் ஏற்றுக்கொள்வோமானால், நமக்கு நித்திய ஜீவனாகிய இலவச ஈவை அவர் அளிக்கிறார்.

சபையில் பிரிவு
1 கொரிந்தியர் 3:1-23

முகவுரை

அ. தங்களை சந்தித்த பல்வேறு அப்போஸ்தலருடைய போதனைகளை தாங்கள் கைக்கொள்வதாக, பல்வேறு உறுப்பினர்கள் கூறியதால், கொரிந்து சபையில் பிரிவினைகள் ஏற்பட்டிருந்தன. சிலர் தங்கள் ஸ்தாபகரான பவுலையும், வேறு சிலர் அப்போல்லோவையும், பேதுருவையும், ஒரு கூட்டம் கிறிஸ்துவையும் தாங்கள் பின்பற்றுவதாக கூறினர்.

ஆ. பவுல் எபேசுவிலிருந்தபோது, குலோவேயாளின் வீட்டாரில் சிலர் இந்த பிரச்சனையைப் பற்றி அவனிடம் கூறினர். முதல் கொரிந்தியரின் இந்த பகுதியை பவுல் எழுதுவதற்கு இதுவே காரணம்.

1. ஒரு குறிப்பிட்ட அப்போஸ்தலருடைய போதனையை கைக்கொள்வதாகச் சொல்லும் கிறிஸ்தவ மேன்மை பாராட்டுதல், உள்ளூர் சபையில் பிரிவினைகளை ஏற்படுத்தும் (3:18-23).

அ. வசனம் 18-20 கொரிந்து சபையின் பல்வேறு பிரிவுகள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் சதி செய்து, தங்களுக்கு மேலான ஞானம் உள்ளதுபோல நடந்துக் கொண்டிருந்தார்கள். பவுல் இதை பெலத்திற்கு பதிலாக, பெலவீனமாகக் காண்கிறார். "இவ்வுலக தரத்தின்படி, தங்களை ஞானிகளாக நினைக்கின்ற உள்ளூர் சபையின் நபரோ அல்லது நபர்களோ, உண்மையில் தேவனுடைய பார்வையில் முட்டாள்கள்".

ஆ. வேதம் தெளிவாக சொல்கிறது:

1. "அவர் (தேவன்) ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்" (மற்றவர்கள் தரக்குறைவாக காணப்படும்படி திட்டம் தீட்டும் திறன்) (யோபு 5:13).

2. "ஞானிகளுடைய (உலகத்தின்) யோசனைகள் வீணென்று கர்த்தர் அறிந்திருக்கிறார் (உதவாத, பயனற்றவை) (சங்கீதம் 94:11).

கொரிந்துவின் பல்வேறு குழுக்களும் கர்த்தரால் கவனிக்கப்பட்டார்கள். அவர்களுடைய திட்டங்களையும், மேலான ஞானத்தின் எண்ணங்களையும் அவர் அறிந்திருந்தார்.

இ. வசனம் 21 "மனிதர்களைக் குறித்து இனி மேன்மை பாராட்டல் இல்லை!"

உங்களில் ஒரு குழு, "நான் பவுலைச் சேர்ந்தவன்" என்றும், இன்னொரு குழு, "நான் அப்பொல்லோவை அல்லது பேதுருவை சேர்ந்தவன்" என்றும், மற்றொரு குழு "நான் கிறிஸ்துவை சேர்ந்தவன்" என்றும் மேன்மை பாராட்டி, சண்டையிட்டு, சபையிலே பிரிவுகளை உண்டுப்பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள், (1:11-12ஐயும் பார்க்கவும்). எபேசுவிற்கு பவுல் வந்தபோது, குலோவேயாளின் வீட்டார், இதை தான் அவனிடம் கூறினார்கள்.

ஈ. வசனம் 21-23 ஒரு குறிப்பிட்ட அப்போஸ்தலரின் சீஷன் நான் என்று கூறி இவ்வுலக மக்களைப்போல சிந்திப்பதை நிறுத்துங்கள். பவுலோ, அப்பொல்லோவோ, பேதுருவோ அல்லது வேறு எந்த அப்போஸ்தலரானாலும், எல்லாருமே உங்கள் நன்மைக்காக, சபைக்காக ஈவாக கொடுக்கப்பட்டிருக்கின்றனர் (எபேசியர் 4:8,11).

சபையில் பிரிவு

1 கொரிந்தியர் 3:1-23

மேலும், நீங்கள் கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருக்கிறீர்கள்; கிறிஸ்து தேவனோடு ஐக்கியமாயிருக்கிறார். இதினாலே தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கிற யாவுமே உங்கள் நன்மைக்கே: உலகம், வாழ்க்கை, மரணம், நிகழ்காலம், எதிர்க்காலம்.

உ. உலகின் சில நாடுகளில், கிறிஸ்தவ அப்போஸ்தலர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள், தேசிய வானொலி மற்றும் தொலைக் காட்சிகளில் எப்பொழுதும் போதித்தும், பிரசங்கித்தும் கொண்டிருக்கிறார்கள். உள்ளூர் சபைகளிலுள்ள சில குழுக்கள் இப்படிப்பட்ட ஒரு பிரசங்கியாரிடத்திலோ அல்லது போதகரிடத்தலோ தங்களைச் சேர்த்துக் கொண்டு, தங்களுக்கு மேலான ஞானம் இருப்பதாக உரிமை கொண்டாடுகிறார்கள்.

ஊ. மற்ற கிறிஸ்தவர்கள், திட்டமிட்டு உள்ளூர் சபைகளில் பிரிவுகளை ஏற்படுத்தி, சண்டையிட்டு, பேதங்களை உண்டுப்பண்ணுகிறார்கள். தங்களின் "புதிதாக கண்டெடுக்கப்பட்ட ஞானத்தினால்", இவர்களில் சில பிரிவுகள் மேய்ப்பர்களின் போதனைகளை எதிர்க்கக் கூட முயற்சிக்கின்றனர். கொரிந்து சபையில் இருந்ததை விட, இப்பொழுது காரியங்கள் அவ்வளவாக மாறவில்லை. இந்த குழுக்களை, தேவன் அவர்களுடைய திட்டங்களிலும், தந்திரங்களிலும், பிடிப்பார். அவர்கள் செய்கிறது, பயனற்றதும், வீணானதுமாயிருக்கின்றதென்று அவர் அறிந்திருக்கிறார். உண்மையிலே அது அழிக்கக்கூடியதாகும்! அதற்கு அவர் ஒரு முடிவு கட்டுவார்!

2. சபையை கட்டுவதில் ஒவ்வொரு கிறிஸ்தவ தலைவருக்கும் குறிப்பிட்ட வேலையுண்டு (3:1-9).

அ. 3:1-4. கொரிந்தியர்கள் கிறிஸ்தவர்களெனக்கூடிய தங்கள் தோற்றத்தை இழந்துவிட்டார்கள் என்றே பவுல் அவர்களிடம் கூறுகிறார். அவர்களுடைய பொறாமை, மற்றும் சண்டைகள் (பூசல்கள்) அவர்கள் குழுக்களாக பிரிவதற்குக் காரணமாயிற்று. அவர்கள், ஆவிக்குரிய பக்குவமடையாதவர்களாய் இருக்கிறார்கள் என்ற உண்மையை அவர்கள் சொல்லும்படி, அவர் பலவந்தம் பண்ணப்படுகிறார்.

1. உங்களுக்கு தெரியாது; ஆனால் நான் உங்களோடு இருக்கும்போது, கிறிஸ்துவுக்குள் நீங்கள் குழந்தைகளாக இருப்பதுபோல், அதாவது உலக வழிகளிலிருந்து தூரம் செல்லாத கிறிஸ்தவர்களாக எண்ணி உங்களிடம் பேசினேன்.

2. உங்களோடிருக்கும் போது உங்களுக்கு பாலை போஜனமாகக் கொடுத்தேன். (எளிதில் விளங்கக்கூடிய கிறிஸ்துவின் காரியங்கள்) அவைகள் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையான உண்மைகள். நீங்கள் பலமான ஆகாரத்திற்கு ஆயத்தமாக இல்லை (நீதியைக் குறித்த போதனைகளும், நன்மையையும், தீமையையும் வேறுபடுத்துவதும்) (எபிரெயர் 5:12-14),

3. நீங்கள் ஆவியானவரைப் பெற்றிருந்தும், உலக மக்களைப் போல வாழ்கிறீர்கள். பொறாமைகள், சண்டைகள், பிரிவினைகள் ஆகியவை உலகப்பிரகாரமானவைகளும், பழையவைகளோடு தொடர்புடையவைகளும் தோற்றத்திலிருந்து மறைந்துக் கொண்டிருக்கிறவைகளுமாகும். நீங்கள் நினைப்பது போல, உண்மையில் நீங்கள் ஆவிக்குரியவர்களானால் இக்காலத்தின் முடிவில் தோன்றப்போகின்ற காரியங்களின் புதிய ஒழுங்கை நீங்கள் எடுத்துக்காட்டுகிறவர்களாய் இருப்பீர்கள்.

சபையில் பிரிவு
1 கொரிந்தியர் 3:1-23

ஆ. இதை திருத்துவதற்கு, பவுல் இவ்விதமாய் சொல்லுவார், "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள் (வாழுங்கள்), அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (கலாத்தியர் 5:16). கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது, நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வரும்! ஆகவே, வளருங்கள்; பூசல்களை நிறுத்துங்கள்! உலக மக்களை போல வாழ்ந்துக்கொண்டு, தொடர்ந்து ஒரு கிறிஸ்தவனாக உன்னால் இருக்க முடியாது! (கலாத்தியர் 5:19-21).

இ. வசனம் 3-4 "நீங்கள் உலகத்தாரல்லவா.... சாதாரண மனிதர்களைப் போல நீங்கள் நடக்கவில்லையா?" பவுல் உண்மையில் சொல்லுகிறார்: "உங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணி, "நான் பவுலைப் பின்பற்றுகிறேன், அல்லது "அப்போல்லோவை பின்பற்றுகிறேன்" என்று சொல்லும்போது கிறிஸ்து அற்ற உலக மக்களைப்போல நீங்கள் நடக்கவில்லையா? தேவனுடைய ஆவியினால் பிறவாமல், பிசாசினால் கட்டப்பட்ட, ஆதிக்கம் செய்யப்பட்ட ஜீவியமுடைய மனிதர்களைப் போல நீங்கள் நடக்கவில்லையா" (1யோவான் 3:8).

ஈ. அவர்கள் அவ்விதம்தான் இருக்கிறார்கள் என்பது தான் பதில்! அவர்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி, பிசாசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. இயேசு கற்பித்ததுபோல அவர்கள் ஜெபிப்பது அவசியம். "தீமைக்காரனிடமிருந்து எங்களை இரட்சித்துக் கொள்ளும்" (மத்தேயு 6:13) பிசாசோடு நாம் கொண்டிருக்கிற ஐக்கியத்தையும், கட்டுகளையும் அழியுங்கள்!

உ. வசனம் 5-6,8. ஜனங்கள், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, நீதியிலும், தேவ குமாரனைப் பற்றும் அறிவிலும் பயிற்றுவிக்கப்படவே, எல்லா அப்போஸ்தலர்களும், பவுலானாலும், அப்போல்லோவானாலும் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார்கள், (எபேசியர் 4:11-14).

1. பவுலின் மூலமாய், நீங்கள் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய காரியங்களில் அடிப்படையானவற்றை கற்றுக்கொடுக்கப்பட்டீர்கள் (நாட்டப்பட்டீர்கள்)

2. அப்போல்லோவின் மூலமாய் நீங்கள் சீஷராக்கப்பட்டு, உங்கள் விசுவாசத்திலும், கிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும் வளர ஆரம்பித்தீர்கள் (நீர்ப்பாய்ச்சப்பட்டீர்கள்). சபை வளர்ச்சியிலும், சீஷத்துவத்திலும், ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் குறிக்கப்பட்ட வேலையுண்டு. தங்கள் வேலையை எவ்விதம் செய்கிறார்களோ, அதற்கேற்ப அவர்கள் பலனளிக்கப்படுவார்கள்.

உ. வசனம் 7,9 உண்மையில் நடைபெறுவது, கொரிந்து சபையில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்த பவுலைபோ, அப்போல்லோவைபோ, பேதுருவைபோ விட பெரியது. இதன் பின்னால் தேவன் இருக்கிறார்!

நீங்கள் தேவனோடு யுத்தம் செய்கிறீர்கள்! அவரே

1. கொரிந்துவில் மக்களை கிறிஸ்துவிடம் இழுக்கிறவர்

2. கொரிந்துவில் சீஷர்களை பயிற்றுவிக்கிறவர்

3. கொரிந்துவில் அப்போஸ்தலரின் வேலையை நிர்வகிக்கிறவர்

4. கொரிந்துவில் அறுவடை நிலத்தை உடையவர்

5. கொரிந்துவில் சபையைக் கட்டிக் கொண்டிருப்பவர்

சபையில் பிரிவு
1 கொரிந்தியர் 3:1-23

உங்கள் நடுவில் வேலைச்செய்துக் கொண்டிருப்பவர் தேவன் உங்களிடத்தில் அனுப்பப்பட்ட சபை தலைவர்களின் மூலமாய் அவர் சாதிக்க நினைக்கிற வேலையை உங்கள் பொறாமைகளும், வாக்குவாதங்களும் தடை செய்துக் கொண்டிருக்கின்றன, என்பதை நீங்கள் உணர வேண்டும்.

3. சபையில் வேலை செய்யும்போது, நல்ல கட்டிட சாதனங்களைப் பயன்படுத்த கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் (3:10-17)

அ. வசனம் 10-11. சபையை ஸ்தாபிக்கும் அப்போஸ்தல பணியானது, பவுலுக்கு கிறிஸ்துவினிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட ஈவாகும். ஆகவே தான் கொரிந்து சபையின் அஸ்திபாரத்தை, பவுல் ஒரு நல்ல கட்டிட நிபுணராக (ஞானமுள்ள) போட்டார். (கொரிந்து சபையின் பிரிவுகளின் உலக ஞானத்தோடு ஒப்பிட்டு பார்க்கும் போது) அவர் தான் ஸ்தாபகர். "சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவே" அஸ்திபாரம். கொரிந்துவின் பல்வேறு பிரிவுகள் இந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி சபையை கட்டுகிறோம் என்பதைப் பற்றி அவர்கள் இன்னும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்!

ஆ. வசனம் 12 "ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்" பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்கள் அழியாத பொருட்கள்.

அவைகள் "சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து" என்னும் அஸ்திபாரத்திற்கு ஒப்பானவை1. பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்களை, கட்டிட சாதனங்களாக சொல்லும்போது, ஒரு வேளை பவுல், சாலமோனின் தேவாலயத்தின் அழகைப்பற்றி யோசிக்கிறார் போலும் (1 நாளாகமம் 29:1-2) புதிய எருசலேமைக் கட்ட இந்த கட்டிட சாதனங்களையே கிறிஸ்து பயன்படுத்துகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:9-21).

2. மறுபுறத்திலே, மரம், புல் அல்லது வைக்கோல் ஆகியவை அழியக்கூடிய பொருட்கள். கடந்து போகக்கூடிய இவ்வுலக ஞானத்தையும், அதின் இடத்தில் வரக்கூடிய கிறிஸ்துவின் கீழுள்ள காரியங்களின் புதிய ஒழுங்கையும் அவைகள் குறிக்கின்றன. கொரிந்து சபையைக் கட்டுவதற்கு பல்வேறு பிரிவுகள் பயன்படுத்துகின்ற கட்டிட சாதனங்கள் இவைகளே. காற்று அடித்து, மழை வரும்போது முன்னும் பின்னும் அலைக்கழிக்கப்பட்டு (எபேசியர் 4:14) அவர்கள் வீடானது, பயங்கரமான ஒலியோடு விழும் (மத்தேயு 7:27).

இ. வசனம் 13-15 "நாளானது அதை விளங்கப்பண்ணும்" "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாள் வருகிறது. கொரிந்து சபையை கட்டுவதற்கு எத்தகைய கட்டிட சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பது வெளியாக்கப்படும். கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பு கொழுந்து விட்டு எரிகிற அக்கினியைப் போலிருக்கும் (2கொரிந்தியர் 5:10).

1. கர்த்தருடைய ஞானத்தோடு கட்டுகிறவர்கள் (சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை - பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்) தங்கள் வேலைப்பாடு நியாயத்தீர்ப்பில் நிற்கிறதை கண்டு, பலனடைவார்கள்.

சபையில் பிரிவு
1 கொரிந்தியர் 3:1-23

2. இவ்வுலக ஞானத்தோடு கட்டுகிறவர்கள் (மரம், புல், வைக்கோல்) தங்கள் வேலைப்பாடு நியாயத்தீர்ப்பின் அக்கினியில் பட்சிக்கப்படுவதைப் காண்பார்கள். தங்கள் இரட்சிப்பை அவர்கள் இழக்கமாட்டார்கள். ஆனால் தங்கள் வேலைப்பாட்டிற்கான பலன் நிச்சயம் அவர்களுக்கு கொடுக்கப்படாது. பல்வேறு சபைகளில் தாம் சாதிக்க முயன்றுக்கொண்டிருக்கிற வேலையை அழிக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு, தேவன் பலனளிப்பதில்லை.

ஈ. வசனம் 16-18 "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா:" தங்களது பொறாமைகள், சண்டைகள், பேதங்கள் ஆகியவற்றின் நடுவில், தாங்கள் யாரென்பதை கொரிந்தியர்கள் மறந்துவிட்டனர். கொரிந்துவிலுள்ள சபையானது தேவனுடைய ஆலயம். தேவன் அந்த ஆலயத்தில் வாசம் செய்கிறார். தேவன் அவர்கள் நடுவில் கிரியை செய்கிறார். சபையின் வெளிப்புற ஊழியத்தின் மூலம், மற்றவர்களை இரட்சிக்க அவர் கிரியை செய்துக்கொண்டிருக்கிறார்.

உ. வசனம் 17 "தேவனுடைய ஆலயத்தை அழிக்கிறவர்களை தேவன் அழிப்பார்!" கிறிஸ்துவின் நியாயாசனத்தில் பலனைப் பெற்றுக் கொள்வதற்கும், பெறாமலிருப்பதற்கும் பின்னாக இவ்வாக்கியம் சொல்கிறது. பொறாமைகள், சண்டைகள், பேதங்கள் மூலமாக, சபையை அழித்துக்கொண்டிருக்கிற,தங்களை கிறிஸ்தவர்கள்என்றுசொல்லிக் கொள்கிறவர்கள், உண்மையிலே,அப்படிப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் தேவனுடையஇராஜ்ஜியத்தைசுதந்தரிக்க மாட்டார்கள் (கலாத்தியர் 5:21). புழுக்கள் அவியாமலிருக்கிறதும், அழுகையும் பற்கடிப்பும் உண்டானதுமான நரகத்தில் அவர்கள் தள்ளப்படுவார்கள்.

முடிவுரை

அ. உள்ளூர் சபையில் பிரிவுகள், பேதங்கள், பொறாமைகள், பூசல்கள் மற்றும் சண்டைகள் உண்டு பண்ணுகிறவர்களின் பலன், நித்திய ஆக்கினையும், தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாமல் போவதுமாகும். ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும், அப்போஸ்தலருடைய எச்சரிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆ. ஒரு மனிதன் தன் இருதயத்தில் கொண்டுள்ளது, கிறிஸ்துவின் நியாயாசனத்தில் வெளிப்படுத்தப்படும் என்று வேதம் சொல்லுகிறது. பரிசுத்த ஆவியானவரும், ஒவ்வொரு நாளும் நம் இருதயத்திலுள்ளதை நம் ஒவ்வொருவருக்கும் வெளிப்படுத்துகிறார். சபையிலுள்ள பிரிவுகள், பொறாமைகள், பூசல்கள் மற்றும் சண்டைகளில் நீங்கள் பங்காளியாய் இருப்பதாக பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்தியிருப்பாரானால், நீங்கள் மனந்திரும்ப வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினால், தேவன் உங்கள் மேல் இரக்கமாயிருப்பார். அப்படி செய்யவில்லையென்றால், நீங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலே நிற்கவேண்டும்!

இ. இந்த எச்சரிப்பானது, உடன் மேய்ப்பர்கள், ஓய்வுநாள் பள்ளி தலைவர்கள், அலுவலக ஊழியர்கள் அல்லது உள்ளூர் சபையைச் சார்ந்த வேறு எந்த தலைவருக்கோ, விசுவாசிக்கோ உரியதாகும்.

விசுவாசிகளிடையில் வழக்குகள்

1 கொரிந்தியர் 6:1-11

முகவுரை

அ. ஐந்தாம் அதிகாரத்தை இந்த கூற்றோடு பவுல் முடிக்கிறார்: "புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச் செய்வார். நீங்களோ உள்ளே இருக்கிறவர்களைக் குறித்து நியாயந்தீர்க்க வேண்டியவர்கள்" கொரிந்து சபை விசுவாசிகள் எவ்விதம் தவறு செய்கிற மனிதனை நியாயந்தீர்க்க வேண்டுமோ, அவ்விதமே சபையில் இரண்டு விசுவாசிகளுக்கிடையில் உருவான வழக்கை நியாயந்தீர்க்க வேண்டும். வெளிப்படையாக தோன்றுவது என்னவென்றால், ஒரு சகோதரன் இன்னொருவனை ஏதோ ஒரு விதத்தில் வஞ்சித்திருக்கிறான் (ஏமாற்றியிருக்கிறான்). இந்த வழக்கை சபையில் தலைவர்களிடத்தில் எடுத்துச் செல்வதற்கு பதிலாக, வஞ்சிக்கப்பட்ட சகோதரன் தன்னுடைய புகாரை, குடிமக்களின் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்கிறான்.

ஆ. ஒருவருக்கு விரோதமாக ஒருவரின் புகார்களை சபைக்கு புறம்பே எடுத்துச் செல்வதன் மூலம், சபைக்கு அவமானத்தை கொரிந்து சபை விசுவாசிகள் ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவிற்கே அவமானத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர் தன்னுடைய ஆவியானவர் மூலமாய் சபையின் நடுவில் வாசம் பண்ணுகிறார். ஆகவே இந்த நடத்தையானது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது! பின் ஒரு நாளிலே உலகத்தை நியாயந்தீர்க்கப்போகிற பரிசுத்தவான்கள் இப்பொழுது அவிசுவாசிகளுக்கு முன் நின்று அவர்களை தங்கள் நியாயாதிபதியாக இருக்கும்படி கேட்கிறார்கள்!

1. விசுவாசிகளுக்குள்ள வழக்குகள் உள்ளூர் சபையில் தீர்க்கப்பட வேண்டும் (6:1-6)

அ. வசனம் 1 "வழக்கு உண்டு" என்ற பதத்தின் அர்த்தம் "சட்ட வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை" "நியாயந்தீர்ப்பு" என்ற வார்த்தையின் அர்த்தம் "நீதிமன்றங்களுக்கு முன்பாக ஏதோ ஒன்றைக் கொண்டு வருவது". "தேவபக்தியற்றவர்கள்", நியாயக்காரர் அல்ல. அவர்கள் தேவனுடைய பார்வையில் அநீதியுள்ளவர்கள்; அவிசுவாசிகள்! தன்னுடைய புகாரைக் குறித்து நியாயந்தீர்க்கும்படி ஒரு கொரிந்து சபை விசுவாசி (தேவனுக்கு முன்பாக நீதிமான்) அவிசுவாசிகளிடம் (ஆகவே அநீதியுள்ளவர்கள்) தன் வழக்கை எடுத்துச் செல்கிறான். இந்த காரியம் பவுலுக்கு நம்பமுடியாததாயிருந்தது!

ஆ. வசனம் 2-3 "பரிசுத்தவான்கள்" பின் ஒரு நாளிலே உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். அவர்கள் தேவதூதரைக்கூட நியாயந்தீர்ப்பார்கள். ஆனாலும்கூட, தாங்கள் பின் ஒரு நாளிலே நியாயந்தீர்க்கப்போகிறவர்களுக்கு முன்பாக தங்கள் வழக்குகளை சகோதர, சகோதரிகள் எடுத்துச் செல்லுமாறு கொரிந்து சபையிலுள்ள தேவ மனிதர்கள் அனுமதிக்கின்றனர்!

இ. "அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" விசுவாசிகளுக்கு மத்தியில் தீர்ப்பு செய்யுமிடம் உள்ளூர் சபைதான். உலகத்தையும், தேவதூதரையும் நியாயந்தீர்க்க போகிறவர்கள், இந்த ஜீவனுக்கேற்றவர்களையும் நியாயந்தீர்க்க கூடியவர்கள் தான்.

விசுவாசிகளிடையில் வழக்குகள்

1 கொரிந்தியர் 6:1-11

ஈ. "தீர்ப்புச் செய்கிறதற்கு சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக் கொள்ளுங்கள்!" இந்த வசனத்தின் அர்த்தம் என்னவென்றால் "உங்களுக்குள்ளே வியாபார வழக்குகள் உண்டானால், சபைக்கு ஒரு பொருட்டாக இல்லாத புறம்பே இருக்கிறவர்களிடம் அந்த தீர்ப்பை ஒப்புக்கொடுக்காதீர்கள்". புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக வழக்கை கொண்டு செல்ல அனுமதிப்பது சபைக்கு அவமானத்தை வரவழைத்திருக்கிறது. காரியத்தை நியாயந்தீர்க்க (தீர்ப்புச் செய்ய) உங்களால் முடியாமல் இருப்பதும் சபைக்கு அவமானத்தைக் கொண்டு வரும்.

உ. வசனம் 5 "விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா?" தேவ ஞானத்திலும் (சிலுவையின் 3:18-21) மனித ஞானம் பெரியது என்று சொன்ன கொரிந்தியர்கள், இப்பொழுது பவுலினால் ஒரு கேலியான நினைவு சின்னம் கொடுக்கப்படுகின்றனர். கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கு உண்மையில் எவ்வளவு குறைவான ஆவிக்குரிய ஞானமிருக்கிறது என்பதை இச்சம்பவம் வெளிப்படுத்துகிறது/.

ஊ. வசனம் 6 "இது அவிசுவாசிகளுக்கு முன்பாக நடக்கிறது!" காரியத்தை குடிமக்களின் அதிகாரிகளுக்குமுன் கொண்டு வருவதை அனுமதித்தோடில்லாமல் சபையானது தனது அழுக்கடைந்த துணிகளை, பொது கருத்தரங்கில் பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவியின் ஆலயமாகிய சபையானது பாவத்திலிருக்கிறது; அதை முழு உலகிற்கும் வெளிப்படுத்திக் கொண்டும் இருக்கிறது.

எ. சபையிலுள்ள விசுவாசிகளுக்கிடையிலுள்ள விவாதங்களை தீர்ப்பது எப்படி? (மத்தேயு 18:15-18)?

1. உங்களுக்கு விரோதமாக பாவம் செய்த மனிதனை அணுகி, உங்களுக்குள் காரியத்தை தீர்த்துக்கொள்ளுங்கள்

2. இது பயனில்லையானால், யாருக்கு விரோதமாக பாவம் செய்யப்பட்டதோ, அந்த மனிதன், உள்ளூர் சபையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு விசுவாசிகளை அழைத்துக்கொண்டு, மறுபடியும் அந்த நபரை அணுக வேண்டும்.

3. இது பயனில்லையானால், முழு சபையின் மக்களிடம் (தலைவர்கள்) காரியத்தை கொண்டு செல்லுங்கள்.

4.இதன்பிறகும்காரியத்தைதீர்த்துக்கொள்ள அவன்மறுத்தால், விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து அந்தநபரை தள்ளி வையுங்கள்! தேவைப்பட்டால்,இதன்பின்,காரியமானது குடிமக்களின்அதிகாரிகளிடத்தில்கொண்டு செல்லப்படலாம்.

ஏ.ஒரு அவிசுவாசியால் நஷ்டப்படுத்தப்பட்ட கிறிஸ்தவனின் நிலை என்ன?

காரியத்தை தீர்க்க கிறிஸ்தவ முறைகள் உண்டு:

1.உங்களுக்குள்ளே காரியத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

2. உங்களுக்குள் காரியத்தை தீர்த்துக் கொள்ள, உங்களால் ஆனதை கொடுங்கள். இந்த நடவடிக்கைகள் தோல்வியடையுமானால், குடிமக்களின்அதிகாரிகளிடத்தில் நியாயத்திற்காக புகாரைக்கொண்டுசெல்வதுதான் உங்களுக்குள்ள ஒரே வழி.

விசுவாசிகளிடையில் வழக்குகள்

1 கொரிந்தியர் 6:1-11

ஐ. விசுவாசிகளுக்கிடையில் அநேக வழக்குகள் ஏன் இன்று சபையில் தீர்க்கப்படுகிறதில்லை?

1. சபையில் மற்றவர்களுக்கு தெரிவிக்க முடியாத அளவிற்கு, இவ்வுலகில் அதிகமாக முதலீடு செய்திருக்கிற, அதிகமான விசுவாசிகள் இவ்வுலகில் இருக்கிறார்கள்.

2. வரப்போகின்ற உலகினைப் பார்க்கிலும், தற்காலிக உலகில் நாம் அதிக கவனமுள்ள மக்கள் என்பதை இது சொல்கிறது.

3. நம்மிடத்தில் உள்ளதை தேவ ராஜ்யத்தில் முதலீடு செய்ய நம்மில் உள்ள பொறுப்பற்ற நிலையை இது எடுத்துக்காட்டுகிறது.

4. நம்முடைய சில "உரிமைகளை"யும், "சொத்திற்காக அலைதலையும் நாம் விட்டுக் கொடுக்காவிட்டால், சபைக்கு பவுல் கொடுத்த எச்சரிப்பு ஒரு நாளும் முக்கியமானதாய் எடுத்துக்கொள்ளப்படாது! பொது நீதிமன்றங்களில் நம்முடைய "அழுக்கடைந்த துணிகளை" பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொண்டிருப்போம்!

2.விசுவாசிகளுக்கிடையிலுள்ள வழக்குகள், அநீதியான தீர்ப்பினாலும், சொத்துக்களை இழப்பதினாலும் தீர்த்துக் கொள்ளப்படலாம் (6:7-11)

அ. வசனம் 7 "நீங்கள் ஏற்கனவே முற்றிலுமாய் தோற்கடிப்பட்டீர்கள்" பவுல் முழு சபையின் சரீரத்தையும் பார்த்துப் பேசுகிறார்.

வழக்கின் தீர்வு என்னவாகயிருந்தாலும், தங்கள் அங்கத்தினர் ஒருவருக்கு விரோதமாய் இன்னொருவர் குடிமக்களின் வழக்குகளை கொண்டு வரும்போது, சபையானது தோல்வியை அனுபவிக்கிறது. நடைமுறைக்கான அடிப்படையை கிறிஸ்தவ கோட்பாடுகளை செயல்படுத்துவதில் கிறிஸ்துவின்சரீரமாகியசமுதாயத்தின் சபையானதுவெற்றிபோடில்லை. அதன் ஆண்டவராகிய இயேசுவின் வழிகளுக்கும், போதனைகளுக்கும் அதினால் சாட்சியாய் இருக்க முடியவில்லை.

ஆ. வசனம்7 "நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை". கிறிஸ்துவின் போதனைகளுக்கேற்பஒருசபையின் அங்கத்தினர்கள் புறஜாதி சமுதாயத்திற்கு முன் வாழும் போது, தோல்விக்கு பதிலாக அச்சபைக்கு வெற்றி வருகிறது.

1. "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு"

2."உன்னோடுவழக்காடி,உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு"

3. "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" (மத்தேயு 5:39-41).

இ. "அநியாயஞ் செய்யப்படுதல்" என்றால் அநீதியாய்நடத்தப்படுதல்,வேதனைப்படுத்தப்படுதல் ,காயப்படுத்தப்படுதல்என்றுபொருள். "நஷ்டப்படுதல்" என்றால் உனக்கு உரியது கொடுக்கப்படாதிருத்தல்,உனக்கு சொந்தமானதை உனக்குகொடுக்காதிருத்தல்,உனக்கு சொந்தமானதை உன்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளுதல்,அல்லது,அழிக்கப்படுதல். இன்னொரு விசுவாசிக்கிடையில்உள்ளவழக்கை குடிமக்களின் நீதிமன்றங்களுக்குஎடுத்துச்செல்வதைப் பார்க்கிலும்,அநியாயமாய்நடத்தப்படுவதை சகிப்பதும்சொத்தைஇழப்பதும் கிறிஸ்தவர்களுக்கு நல்லது.

விசுவாசிகளிடையில் வழக்குகள்

1 கொரிந்தியர் 6:1-11

ஈ. வசனம் 8-10 "உங்கள் சபையின் (கொரிந்துவின்) மற்ற அங்கத்தினர்களைப் பற்றிய காரியம் என்ன?" என்று பவுல் கேட்கிறார். குடிமக்களின் நீதி வழக்கில் சம்பந்தப்பட்ட இருவரிலும் நீங்கள் எவ்விதத்திலும் மேம்பட்டவர்கள் அல்ல! நீங்கள் ஒருவருக்கு ஒருவர் அநியாயஞ்செய்து, நஷ்டப்படுத்தின சம்பவங்கள் உண்டு. இவைகளிலும் மற்ற வஞ்சகமான வழக்கங்களிலும் தொடர்ந்து ஈடுபட்டிருக்கின்றவர்களால் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது. தொடர்ந்து தீமை செய்துக்கொண்டு, தேவனுடைய இராஜ்ஜியத்தையும் சுதந்தரிக்க முடியும் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் அதைவிட பெரியது என்னவென்றால், அது சபையில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது!

உ. உடலுறவில் ஒழுக்கமின்மையும், (5:1-13; 6:12-20) விக்கிரக ஆராதனையும் (8:1-11:1) சபையில் இருந்தது என்பதை "இவைகளினின்று ஓடு" என்று இந்த நிருபத்தில் பவுல் எச்சரிப்பதிலிருந்து நாம் தெரிந்துக் கொள்கிறோம். அதிகமான பாவம் சபையில் இருந்தது என்பதுபோல தோன்றுகிறது.

1. விபச்சாரம்:- தன் மனைவி அல்லாத பெண்ணோடு ஒரு திருமணமான ஆணிற்கும், தன் கணவன் அல்லாத மனிதனோடு ஒரு திருமணமான பெண்ணிற்கும், உள்ள சட்டத்திற்கு புறம்பான உடலுறவுகள்.

2. ஆண் விபச்சாரக்காரர் - சுபாவத்தில் பெண்மையுள்ளவர்களும், பெண்களைப்போல உடுத்துகிறவர்களும், பெண்களைப்போல உபயோகிக்கப்படுவதற்கு தங்களை அனுமதிக்கும் ஆண்கள்.

3. ஆண்புணர்ச்சிக்காரர் - தங்கள் பாலிலுள்ளவர்களோடு உடலுறவு கொள்ள விரும்புதல்.

4. கள்ளர் - ஒருவருடைய அனுமதி இல்லாமலேயே அவருடைய சொத்துக்களை எடுத்துக்கொண்டு செல்லுதல்.

5. பேராசையுள்ளோர் - ஒருவன் அதிகமாக ஆசைப்பட்டு, மற்றவர்களை ஏமாற்றினாலும் சரி, தான் ஆதாயம் அனுபவிக்கவேண்டும் என்கிற ஒரு விதமான விக்கிரக ஆராதனை.

6. வெறியர் - மதுபானத்திற்கு அடிமைப்படுதல்

7. அவதூறு பேசுபவர்கள் - கோபத்தோடு மற்றவருக்கு விரோதமாகவோ அல்லது மற்றவரிடமோ நிந்தையான பேச்சை பேசுவது.

8. சூறையாடுபவர் - யாரோ ஒருவரைப்போல பாவனைச் செய்தோ அல்லது பலியாளின் நம்பிக்கையை சம்பாதித்தோ இன்னொருவரின் பணத்தையோ, சொத்தையோ ஏமாற்றுவது.

ஊ. வசனம் 11 "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்", இயேசுவின் இரத்தத்தினால், தங்கள் பாவங்களற கொரிந்தியர்கள் சுத்திகரிக்கப்பட்டிருந்தார்கள். இந்த உலகத்தினின்று அவர்கள் தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்டிருந்தார்கள் (பரிசுத்தமாக்கப்பட்டிருந்தார்கள்). அவர்கள் நீதிமானாக்கப்பட்டிருந்தார்கள் (தேவனுடைய பார்வையில் நீதிமானாக தீர்க்கப்பட்டிருந்தார்கள்), ஆனால் அவர்கள் அவ்விதம் ஜீவிக்கவில்லை. பவுல் கொரிந்துவின் விசுவாசிகளுக்கு இவ்வாறு நினைவுப்படுத்துகிறார்.

விசுவாசிகளிடையில் வழக்குகள்

1 கொரிந்தியர் 6:1-11

"உலகத்திலிருப்பர்களிலும் கிறிஸ்து இயேசுவிலுள்ளவர்களோ வித்தியாசமாய் இருக்கவேண்டும். ஆகவே அவ்விதம் வாழுங்கள்! ஏமாற்றுவது, விக்கிரக ஆராதனைச் செய்வது, விபச்சாரம் செய்வது, வேசித்தனம் செய்வது, ஆண்புணர்ச்சி செய்வது, திருடராயிருப்பது போன்றவைகளை நிறுத்துங்கள்!"

ஏ. "ஆவியினால் நடத்தப்படும்". மக்களாய் இருப்பதின் அர்த்தத்தை கொரிந்தியர்கள் புரிந்து கொள்ளவில்லை. பவுல் அதைக் குறித்துப் பேசுவதை கேட்டிருந்தார்கள். ஒருவேளை தங்கள் மதத்தில் அதை அவர்கள் சேர்த்துக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் மாற்றுகின்ற, அதிகாரம் அளிக்கின்ற பரிசுத்த ஆவியின் வேலையானது அவர்களுக்கு ஒவ்வொரு நாளுக்கும் அடுத்த உண்மையாக இல்லை. கிறிஸ்துவின் சாயலாக அவர்கள் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கவில்லை.

இது இல்லாமல், தேவ இராஜ்ஜியத்தில் அவர்களால் பங்கு பெறவும் முடியாது, புதிய எருசலேமின் வீதிகளில் நடக்கவும் முடியாது (வெளிப்படுத்தின விசேஷம் *21:27*).

ஏ. "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புதுச் சிருஷ்டியாய் இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துப்போயின, எல்லாம் புதிதாயின" (2கொரிந்தியர் *5:17*)! "புது சிருஷ்டியே காரியம்" (கலாத்தியர் *6:15*).

முடிவுரை

அ. உங்கள் சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியில் வழக்குகள் உண்டானால், இப்படிப்பட்ட காரியங்களை தீர்த்து வைக்கக் கூடிய முதிர்ந்த தலைவர்களின் கூட்டத்தையும், மற்ற விசுவாசிகளையும் தெரிந்தெடுங்கள். வழக்குகளை ஏற்படுத்தி, அவைகளை தீர்க்க விரும்பாத விசுவாசிகள் இருந்தால், அவர்களை சபையை விட்டு வெளியேற்றுங்கள். எப்படியானாலும், சபைக்கு வெளியே பொது கருத்தரங்கின் முன் இந்த காரியம் கொண்டு வரப்படக் கூடாது. வெளியே உள்ளவர்களிடம் இந்த வழக்குகள் தந்தியாய் கொண்டு வரப்படவும் கூடாது, அவர்களோடு எந்த விசுவாசியாலும் இது விவாதிக்கப்படவும் கூடாது!

ஆ. சமுதாயத்தில், சபையானது கிறிஸ்துவின் ஜீவனுள்ள சரீரமாய் இருக்கிறது. அது "இருளிலே பிரகாசிக்கிற விளக்காக" இருக்க வேண்டும். "இருளின் அந்தகாரம் அதை மேற்கொள்ளக்கூடாது". உங்கள் சமுதாயத்தின் உதவியற்ற, நம்பிக்கையற்ற மக்கள் வந்து தங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் பெறக்கூடிய இடமாயிருக்கவேண்டும். விசுவாசிகள் மத்தியில் வழக்குகள் இருக்கும் பட்சத்திலும் பரிசுத்த ஆவியானவர் தங்கள் வாழ்க்கைகளை கிறிஸ்துவின் சாயலாக மாற்றுவதற்கு விசுவாசிகள் தயாராக இல்லாமல் இருக்கும் பட்சத்திலும் இது நடக்காது, நடக்கவும் முடியாது!

சரீரமும் வேசித்தனமும்

1 கொரிந்தியர் 6:12-20

முகவுரை

அ. சபையில் வேசித்தனம் செய்து கொண்டு இருந்த ஒரு மனிதனின் பிரச்சனையைக் குறித்து, பவுல் ஐந்தாம் அதிகாரத்தில் கூறியிருக்கிறார். பவுல் அவர்களிடம் கூறியதாவது. "இப்படிப்பட்ட மனிதன் உங்கள் நடுவில் இருக்க அனுமதிக்கப்பட்டால், தான் செய்கிறதை மற்றவர்களும் செய்யும்படி உந்தி விடுவான்". ஆகவே சபைக்கு அவருடைய போதனை என்னவென்றால்:

1) "வேசித்தனம் செய்கின்ற, ஆனால் தன்னை ஒரு சகோதரன் என்று சொல்லிக் கொள்ளுகிற எவரோடும் கூட்டுச் சேராதே; 2) இந்த மனிதனை சாத்தானிடம் ஒப்புக் கொடுத்து விடு (பிசாசிடம் அவனை விட்டுவிடு); 3) உங்கள் நடுவிலிருந்து அந்த துன்மார்க்கனை வெளியேற்று". நம்முடைய சரீரம் வேசித்தனம் ஆகியவற்றோடு தொடர்புள்ள பொது நியதிகளை இந்த வேதாகம பகுதியில் பவுல் எடுத்துக் கூறுகிறார். இவை நம்முடைய கிறிஸ்தவ நடத்தைக்கு வழிமுறையாக இருக்கும்.

1. ஒரு விசுவாசியின் சரீரம் தேவனுக்கு உரியது (6:12-14)

அ. வசனம் 12. "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு" என்று பவுல் சொல்லும் போது, ஒரு வேளை கொரிந்து சபையில் ஒரு சிலர் இவ்விதமாய் பெருமையடித்துக் கொண்டதைக் குறித்து குறிப்பிடுகிறார் போலும். "நாங்கள் கிறிஸ்துவுக்குள் சுதந்திரமாய் இருக்கிறோம். இப்பொழுது எல்லாவற்றையும் அனுபவிக்க எங்களுக்கு அதிகாரமுண்டு. நாங்கள் எந்த ஆகாரத்தை வேண்டுமானாலும் புசிக்கலாம், தேவதையின் கோயிலுள்ள வேசிகளோடு நாங்கள் விரும்பினால் பாலுணர்ச்சியில் ஒழுக்கமற்றிருக்கலாம்".

ஆ. வசனம் 13. சில கொரிந்து விசுவாசிகளுக்கு "வயிற்றுக்கு போஜனமும், போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்" என்பது பொது பேச்சாக இருந்தது. சாப்பிடுவதும், ஆகாரத்தை ஜீரணிப்பதுமான சரீரப்பிரகாரமான செய்கைகள், ஒருவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிப்பதில்லை என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இ. கொரிந்து விசுவாசிகளுக்கு பவுல் இவ்விதமாய் பதில் கொடுக்கிறார், "ஒரு கிறிஸ்தவனுக்கு எதை அனுபவிக்க அதிகாரமுண்டு என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அது உங்களுக்கு தகுதியான ஆலோசனையாகவோ, பிரயோஜனமாகவோ இருப்பதில்லை. நீங்கள் அனுபவிக்க அதிகாரமுண்டு என்று நினைக்கிற சில காரியங்கள், உங்கள் எஜமானனாகி உங்களை தங்கள் அடிமையாக்கிவிடும். தனிப்பட்ட விதத்தில் எந்த காரியத்தாலும் நான் மேற்கொள்ளப்பட என்னை அனுமதிக்கமாட்டேன்". தன்னுடைய நிலையை பாதுகாக்க மூன்று வாக்குவாதங்களை பவுல் பயன்படுத்துகிறார்.

1. வசனம் 13. முதலாவதாக, போஜனமும், போஜனத்திற்கான ஆசையும் (வயிறும்) எப்பொழுதுமே முக்கியமாக இருப்பதில்லை. "தேவன் இவ்விரண்டையும் அழித்துப்போடுவார்". உயிர்த்தெழுதலிலே, மனித வாழ்க்கையின் இப்பகுதியானது செயல்படாது. அது உபயோகமற்றதாகும். ஆகவே, கர்த்தர் பயன்படுத்தும்படி உங்கள் சரீரத்தை வேறுபடுத்துங்கள். அதோடு, போஜனத்திற்கான உங்கள் ஆசை உங்களை மேற்கொள்ளக்கூடும் என்பதால் ஜாக்கிரதையாய் இருங்கள்.

சரீரமும் வேசித்தனமும்

1 கொரிந்தியர் 6:12-20

2. வசனம் 13. இரண்டாவதாக, "சரீரமானது வேசித்தனத்திற்கல்ல; கர்த்தருக்கே". கர்த்தர் தமது விருப்பத்தின்படி பயன்படுத்த தக்கதாக ஒரு கிறிஸ்தவனின் சரீரம் (வேறு பிரிக்கப்பட) பரிசுத்தமாக்கப்பட வேண்டும். ரோமரில் பவுல் இதைக்குறித்து அதிகமாகச் சொல்கிறார். "உங்களை... தேவனுக்கு ஒப்புக் கொடுத்து... உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்". (ரோமர் 6:13). "உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்! (ரோமர் 6:19). "உங்கள் சரீரங்களை ... ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள் ..... தேவனுக்கு" (ரோமர் 12:1)3. வசனம் 13. மூன்றாவதாக, "தேவன் சரீரத்திற்கு உரியவர் .... தம்முடைய வல்லமையான செயலின்படியே தேவன் கர்த்தரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். நம்மையும் எழுப்புவார் (நம் சரீரத்தையும்) (பிலிப்பியர் 3:21; ரோமர் 8:11, 1கொரிந்தியர் 15:51-52, 1தெசலோனிக்கேயர் 4:16-17). ஒரு விசுவாசியின் சரீரமானது மகிமைபடையும்படி கொடுக்கப்பட்டுள்ளது, நித்தியமாக கிறிஸ்துவோடு வாழும்படி உயிர்ப்பிக்கப்படுகிறது.

ஈ. அவர்களுடைய சரீரங்களைக் குறித்து கர்த்தர் கரிசனையுள்ளவராய் இருக்கிறார் என்று விசுவாசிகளுக்கு சொல்ல பவுல் முயற்சிக்கிறார். அவைகள் வேசித்தனத்திற்கு பயன்படவேண்டும் என்று அவர் ஒரு நாளும் உத்தேசிக்கவில்லை! அதற்கு மாறாக, அவைகள் நீதிக்குரிய ஆயுதங்களாக பயன்படுத்த விரும்புகிறார். அவர்களை அவர் மகிமைப்படுத்தி, சபையின் இரகசிய வருகையின் போது எழுப்புவார். ஆகவே விசுவாசிகளின் சரீரங்கள், கர்த்தருக்கு மிகவும் முக்கியமானவை.

2. ஒரு விசுவாசியின் சரீரம் கிறிஸ்துவின் அவயவமாயிருக்கிறது. (6:15-17)

அ. வசனம் 15. உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் "ஒவ்வொரு மறுபடியும் பிறந்த விசுவாசியும் இயேசு கிறிஸ்துவின் சபையின் அவயவமாயிருக்கிறார். சபையானது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. ஆகவே விசுவாசிகளின் சரீரங்கள், உண்மையில் கிறிஸ்துவின் சரீரத்தின் (கிறிஸ்துவின் அங்கங்கள்) அவயவங்களாய் (அங்கங்கள்) இருக்கின்றன.

ஆ. கொரிந்தியரின் முதலாம் நிருபத்திலே மற்ற இடங்களிலும் இதைக் குறித்து பவுல் கூறுகிறார். "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" (12:12). "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (12:27) ஆகவே கிறிஸ்தவர்களின் சரீரங்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய வேறு ஒரு சரீரத்தின் அவயவமாய் இருக்கின்றன!

இ. வசனம் 15. "அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை (நாம் மாறியிருக்கிற அவரது சரீரத்தின் அங்கங்கள்), ஒரு வேசியோடு இணைக்கலாமா?" பவுல் கேட்கிறார்: "கிறிஸ்துவின் சரீரத்தோடு ஐக்கியமாயிருக்கிற ஒரு அவயவத்தை பிரித்தெடுத்து ஒரு வேசியோடு இணைப்பது (ஒட்டுவது) சரியென்று நினைக்கிறீர்களா? இல்லை, தேவன் அதை தடைசெய்வாராக, அது ஒரு காலும் இல்லாமல் இருப்பதாக, என் மனதிலிருந்து அந்த எண்ணம் அழிவதாக.

ஈ. வசனம் 16. "வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா?" பாலுணர்வின் உறவிலே இரண்டு சரீரங்களும், ஒரே சரீரமாகும்.

சரீரமும் வேசித்தனமும்

1 கொரிந்தியர் 6:12-20

"புருஷனானவன், தன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதியாகமம் 2:24 மத்தேயு 19:4-5). ஆகவே வேசித்தனம் பண்ணுகிறவர்கள், தாங்கள் கிறிஸ்துவோடு கொண்டுள்ள ஐக்கியத்தை உடைத்து, தாங்கள் வேசித்தனம் செய்கிற வேசியோடு (அல்லது அந்த நபரோடு) ஐக்கியப்படுகிறார்கள். அவர்கள் இருவரும் வேசியின் ஒரே சரீரமாகிறார்கள்.

உ. ஆனால் கர்த்தரோடு ஐக்கியப்பட்டிருக்கிற விசுவாசிகளோ "அவரில் ஆவியில் ஒன்றாயிருக்கிறார்கள்". விசுவாசிகள் கர்த்தரோடு ஒரு ஆவிக்குரிய கட்டுக்குள் நுழைகிறார்கள். அவர்களுக்கு "கிறிஸ்துவின் சிந்தை" உண்டு (1கொரிந்தியர் 2:16) அவர்கள் அவரில் இருக்கின்றார்கள்; அவரும் அவர்களில் இருக்கின்றார் (யோவான் 15:4). அவர்கள் ஆவியில் அவரோடு ஒன்றாயிருக்கிறார்கள்.

3. ஒரு விசுவாசியின் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாய் இருக்கிறது (6:18-20)

அ. வசனம் 18. "வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள்" தொடர்ந்து வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள். வேசித்தனத்திற்கு விலகி ஓடுவதை ஒரு பழக்கமாக மாற்றுங்கள்.

ஆ. "ஓடுங்கள்" என்ற வார்த்தையின் அர்த்தம், ஓடிப்போவது, வெறுத்துத் தள்ளுவது, தப்பித்துக் கொள்வது, ஏதோ ஒரு காரியம் இருக்கும் இடத்திலிருந்து மறைவது என்பதாகும்.

போத்திபாரின் மனைவியால் வேசித்தனத்திற்கு நேராக யோசேப்பு சோதிக்கப்பட்ட போது, அவன் செய்தது இதுதான் (ஆதியாகமம் 39:7-12). "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பாராமலிருக்க யோபும் தன் கண்களோடு ஒரு உடன்படிக்கைப் பண்ணினான். (வேசித்தன இச்சையிலிருந்து ஓடுங்கள்)" (யோபு 31:1)

இ. வசனம் 18-20. ஒரு விசுவாசி வேசித்தனத்திற்கு விலகி ஓடுவதற்கு மூன்று காரணங்கள் உண்டு:

1. கொரிந்தியர்களுக்கு இன்னொரு தவறான அறிக்கையிருந்தது: "மனுஷன் செய்யும் எல்லா பாவங்களும் அவன் சரீரத்திற்கு புறம்பேயுள்ளது". ஆகவே வேசித்தனமாகிய பாவம் ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிப்பதில்லை. இந்த தவறான போதனையை எதிர்த்து பவுல் இவ்விதம் சொல்லுகிறார். "வேசித்தனமாகிய பாவத்தைச் செய்பவன், தன் சொந்த சரீரத்திற்கு விரோதமாக பாவம் செய்கிறான்". வேசித்தனம் பண்ணுகிற ஒரு விசுவாசி தன்னை கிறிஸ்துவின் சரீரத்தை விட்டுப் பிரித்துக் கொள்ளுகிறான். பின்பு அவன் தன் சரீரத்தை எடுத்து ஒரு கோயிலின் வேசியோடு இணைத்துக் கொள்கிறான். இந்த வேசி தன்னை அந்த கோயிலின் தேவதைக்கு அர்ப்பணித்திருக்கிறபடியால், உண்மையில் அந்த வேசி ஆராதிக்கிற அந்த தேவதையோடு ஒரு விசுவாசி தன் சரீரத்தை ஐக்கியப்படுத்துகிறான். உண்மையில் அவன் தன் சொந்த சரீரத்தை தனக்கு அவமானம் உண்டாக பயன்படுத்துகிறான்.

2. "ஒரு விசுவாசியின் சரீரம், பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது" பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசமாயிருக்கிறார். நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது தேவனிடத்திலிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றீர்கள்.

சரீரமும் வேசித்தனமும்

1 கொரிந்தியர் 6:12-20

"(இயேசு சொன்னார்) நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது .....சத்திய ஆவியாகிய .....தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார்" (யோவான் 14:16-17) "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9) "எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1கொரிந்தியர் 12:13) "நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்" (2கொரிந்தியர் 6:16)

3. "நீங்கள் உங்களுடையவர்களல்ல, கிரயத்திற்கு கொள்ளப்பட்டீர்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளு முன் எல்லா மனுஷரும் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் விடுதலையாக்கப்பட வேண்டுமானால் யாரெனும் ஒருவர் அவர்கள் விடுதலைக்கான கிரயத்தைச் செலுத்த வேண்டும். சிலுவையில் தேவனுடைய தியாகமான மரணத்தின் மூலம், நாம் பாவிகளாயிருக்கும்போதே, கிறிஸ்து உரிய கிரயத்தைச் செலுத்தினார். இப்பொழுது நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தம். தன்னுடைய விலைபெறப் பெற்ற இரத்தத்தினாலே அவர் நம்மை மீட்டார் (1பேதுரு 2:9). ஆகவே "உங்கள் சரீரத்தால் அவரை கனப்படுத்துங்கள்". நீங்கள் உங்கள் சரீரத்தைக் கொண்டு செய்யும் காரியத்தின் மூலம் தேவன் உயர்த்தப்படுவாராக; மகிமையாய் காணப்படுவாராக.

ஈ. தேவன் தங்கியிருக்கும் ஸ்தலமாக, வாசஸ்தலமாக இருக்கும் ஒரு விசுவாசியின் சரீரத்திற்கு விரோதமான பாவமாயிருக்கிறபடியால் விசுவாசிகள் வேசித்தனத்திற்கு விலகி ஓட வேண்டும். உங்கள் சரீரமானது, கிறிஸ்து தம்முடைய விலைபெறப் பெற்ற இரத்தத்தினாலே கிரயத்திற்கு கொண்ட சரீரமாக இருக்கிறது. இனி அது உங்கள் சரீரமல்ல. அது கர்த்தருக்குச் சொந்தம். அதை நீதிக்குரிய ஆயுதமாக பயன்படுத்த அவர் விரும்புகிறார். உங்கள் மூலமாய் அவர் மகிமைப்பட விரும்புகிறார்.

உ. இந்த வேதப்பாடத்திலே, பவுல் அப்போஸ்தலர், கொரிந்துவின் தேவதைகளின் கோயில்களிலுள்ள வேசிகளோடு வேசித்தனம் பண்ணும் விசுவாசியைக் குறித்து பேசுகிறார். ஆனால் வேதம், வேசித்தனமென்று வேறு எதையெல்லாம் கூறுகிறது:

1. வேசிமார்க்கமும் விபச்சாரமும்: இது சட்டத்திற்குப் புறம்பான உடலுறவைக் குறிக்கிறது, குறிப்பாக அது தன் மனைவி அல்லாத பெண்ணோடு ஒரு திருமணமான ஆணிற்கும், தன் கணவன் அல்லாத மனிதனோடு ஒரு திருமணமான பெண்ணிற்கும் உள்ள சுய சித்தத்தின்படியானது.

2. வேசித்தனம்: ஒரு ஆணோ, பெண்ணோ பணத்திற்காக உடலுறவில் ஈடுபடுவது.

3. ஆண்புணர்ச்சிக்காரர்: தன் பாலிலுள்ளவர்களோடே உடலுறவில் ஈடுபட விரும்புவது.

4. நெருங்கிய உறவினர்களிடையே உள்ள உடலுறவுகள். தாய் அல்லது தந்தை, சகோதரன் அல்லது சகோதரி, பேரப்பிள்ளை, மாமா அல்லது அத்தை, மருமகள் அல்லது மருமகன் பெற்றோரின் உடன்பிறந்தவரின் பிள்ளை, மற்றும் மகன் அல்லது மகள் (லேவியராகமம் 18:6-18).

ஊ. பழைய ஏற்பாட்டின் போதனையை இன்னும் ஒரு படிமேலே இயேசு எடுத்துச் செல்கிறார் இவ்விதம் சொல்லும்போது: "ஒரு ஸ்திரீயை (அல்லது ஆணை)

சரீரமும் வேசித்தனமும்

1 கொரிந்தியர் 6:12-20

இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே (அவளோடே) விபசாரஞ் செய்தாயிற்று" (மத்தேயு 5:28)

முடிவுரை

அ. ஒரு விசுவாசியின் சரீரமானது: 1) கர்த்தருக்குரியது 2) கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாயிருக்கிறது 3) பரிசுத்த ஆவியின் ஆலயமாய் இருக்கிறது (வாசஸ்தலம்). ஆகவே வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள்! நீதிக்குரிய ஆயுதமாக கர்த்தர் பயன்படுத்தும்படி உங்கள் சரீரத்தை வேறு பிரியுங்கள்!

ஆ. வேசித்தனம் செய்து, விசுவாசத்தை விட்டு வழி விலகிப் போனவர்கள் கிறிஸ்துவினிடத்திற்கு திரும்புவதற்கு இது நல்லதொரு நேரம். அவருடைய இரத்தம் உங்களை எல்லா அநீதியிலிருந்தும் மறுபடியும் உங்களை சுத்திகரிக்கட்டும். நீதிக்குரிய ஆயுதமாக பயன்படும்படியாகவும், பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாகவும் இருக்கும்படி, உங்கள் சரீரத்தை ஜீவ பலியாக அவருக்கு ஒப்புக் கொடுங்கள்.

விவாகம்

1 கொரிந்தியர் 7:1-7, 12-16, 25-38

முகவுரை

அ. பவுல் எபேசுவில் இருந்தார். அங்கே அவர் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருந்து, எபேசுவின் சுற்றுப்புற பட்டணங்களை சுவிசேஷமயமாக்கியிருந்தார். கொரிந்து சபையின் அங்கத்தினராய் இருந்த ஒரு குறிப்பிட்ட குடும்பத்தின் சில அங்கத்தினரால் அவர் சந்திக்கப்பட்டார். அவர்கள் பவுலிடம் இவ்விதம் கூறினார்கள். 1) கொரிந்து சபையில் பிரிவுகள் உண்டாயிருந்தன 2) வேசித்தனத்தின் பயங்கரமான ஒரு சம்பவம் இருந்தது 3) தங்களுக்குள் சர்ச்சைகள் உள்ள சபையின் அங்கத்தினர் புறஜாதிகளின் நீதிமன்றங்களில் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் வழக்குகளை தொடுத்துக்கொண்டிருந்தனர்.

ஆ. கொரிந்து சபையிலிருந்து இக்காரியங்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனை தரும்படி பவுல் ஒரு கடிதத்தைப் பெற்றிருந்தார். 1) விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட ஆகாரம் 2) விவாகம் மற்றும் விவாகரத்து 3) கர்த்தருடைய பந்தி 4) ஆவிக்குரிய வரங்களை சபையில் செயல்படுத்துவது 5) எருசலேமின் விசுவாசிகளுக்கென்று செய்யப்பட்டுக் கொண்டிருந்த காணிக்கை வாங்குதல். விவாகத்துக்கடுத்த காரியங்களை குறித்து பவுலின் பதில் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

1. உடலுறவுகள் விவாகத்தின் தொடர்ச்சியான பங்காயிருக்கிறது. (7:1-7)

அ. "விவாகம் செய்யாமலிருப்பது மனுஷனுக்கு நல்லது" என்ற கூற்று கொரிந்து சபையிலிருந்து பவுல் பெற்ற கடிதத்திலிருந்த ஒரு கூற்றாகும். இந்த கூற்று இவ்விதமாகவும் பொருள்படுகிறது. "ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயோடு உடலுறவு கொள்ளாமலிருப்பது நல்லது".

ஆ. கீழ்க்கண்ட விதமாய் விசுவாசித்த ஒரு குழு கொரிந்து சபையிலிருந்தது:

1. ஆவி முற்றிலுமாய் நல்லது. உலகின் பொருள் முற்றிலுமாய் பொல்லாதது.

2. ஆகவே மனித சரீரமானது, உலகின் பொருளாய் இருப்பதனால், அது முற்றிலும் பொல்லாதது.

3. சரீரம் பொல்லாததாய் இருப்பதால், அது கடினமாய் நடத்தப்பட வேண்டும்.

4. இதை செய்வதற்கு ஒரு வழி தான், திருமணமான தம்பதியரிடம் சுபாவ உடலுறவு செய்கையை அனுமதிக்காமல் இருப்பது.

இ. இந்த கூற்றுக்கு பவுல் இவ்விதம் கூறி பதிலளிக்கிறார். "அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். பவுல் கொரிந்தியர்களுக்கு உண்மையில் இவ்விதம் கூறுகிறார். "திருமணமான தம்பதியர் ஒருவருக்கொருவர் உடலுறவை அனுமதியாமல் இருப்பது தவறு. ஒவ்வொரு மனுஷனும் தன் மனைவியோடு தொடர்ந்து உடலுறவு கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஸ்திரீயும் தன் புருஷனோடு தொடர்ந்து உடலுறவு கொள்ள வேண்டும்.

ஈ. புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் தாம்பத்திய கடமைகளை நிறைவேற்றவேண்டும். உடலுறவு சம்பந்தப்பட்ட தொடர்ச்சியான தீர்க்கப்படவேண்டிய கடன் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதன் காரணங்கள் இதோ:

விவாகம்

1 கொரிந்தியர் 7:1-7, 12-16, 25-38

1. வசனம் 2. "இவ்வளவு வேசித்தனம் இருக்கிறது". கொரிந்துவிலே கோயிலிலே மட்டும், ஒரு சமயம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில் வேசிகள் இருந்தார்கள். வீட்டிலே இயல்பான உடலுறவு அவர்களுக்கு கிடைக்காததினால், உடலுறவுக்காக சபையிலுள்ள ஆண்கள் கோயில் வேசிகளிடம் சென்று கொண்டிருந்தனர்.

2. திருமணமான ஒருவர் தன் சரீரத்தைக் குறித்த தனக்கே உரிய உரிமையை விட்டுக் கொடுக்கிறார். தன்னுடைய வாழ்க்கைத் துணையின் சரீரத்தின்மேல் ஒரு திருமணமானவருக்கு சில உரிமைகள் உண்டு. ஆகவே எவரேனும் ஒரு விரதத்துவத்தை கட்டாயப்படுத்துவாரானால் அவர்கள் மற்றவரின் உரிமையை திருடுகின்றனர்.

3. வசனம் 5. "உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால், சாத்தான் உங்களைத் தூண்டி விடாதபடிக்கு". சுபாவ ஆசைகள் நிறைவேறாமல் போனால் திருமணமான ஒருவர் பிசாசு கொண்டு வரும் உடலுறவு சோதனைகளால் மேற்கொள்ளப்படக்கூடும்.

உ. வசனம் 6. "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், போசனையாகச் சொல்கிறேன்". இந்த கட்டளையானது தாம்பத்திய கடமைகளை திருமணமான தம்பதியர் ஒருவருக்கொருவர் செய்வதற்காகும். தனிப்பட்ட ஜெபத்திலே ஒருவரோ அல்லது இருவருமோ சில காலத்தை செலவிடும்படிக்கு, தற்காலிகமாக மட்டும் உடலுறவை விலக்கி வைக்க ஒரு சலுகையும் உண்டு. ஆனால் அது கண்டிப்பாக இருவருடைய சம்மதத்தினாலே இருக்க வேண்டும்.

ஊ. வசனம்7. "அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு" விவாகம் பண்ணி பிள்ளைகள் பெறுவது என்பது பவுலைப் போல பிரம்மச்சாரியாய் இருக்கும் வரத்தைப் போல ஒரு வரம் தான்.

எ. இன்றைக்கு ஒருவேளை கோயில் வேசிகளிடத்தில் உடலுறவுக்காக மனுஷர்கள் போகாமல் இருக்கலாம். ஆனால் விவாகமானவர்கள், விவாகத்திற்கு புறம்பானவர்களிடம் உடலுறவைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். கொரிந்துவில் இருந்ததை விட காரணங்கள் வித்தியாசமாய் இருக்கலாம். ஆனால் பட்டணங்களிலும், வீடுகளிலும், பள்ளிகளிலும், சமூக சேவை நிறுவனங்களிலும் உடலுறவுகளில் ஒழுக்கமற்ற நிலை கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது. பவுலின் ஆலோசனை இன்றும் நமக்கு அர்த்தமுடையதாய் இருக்கிறது!

2. அவிசுவாசியான கணவன் அல்லது மனைவியோடு விவாகத்தில் நிலைத்திருங்கள் (7:12-16)

அ. வசனம் 12. "மற்றவர்களைக்குறித்து பவுல் ஏற்கனவே விவாகமானவர்களுக்கு (வசனம் 1-7,10-11), மனைவியை இழந்தோர் (விவாகம் இல்லாதோர்) மற்றும் கைம்பெண்களுக்கு (வசனம் 8-9) ஏற்கனவே ஆலோசனை கொடுத்துவிட்டார். இப்பொழுது தாங்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினதினால் கடினமான சூழ்நிலையிலுள்ளவர்களுக்கு நேராக தனது கவனத்தைத் திருப்புகிறார். அவர்கள் விசுவாசிகளாய் மாறிவிட்டார்கள். ஆனால் அவர்கள் உடனிருப்பவர்கள் இன்னும் அவிசுவாசிகளாய் இருக்கிறார்கள்.

ஆ. வசனம் 12. "கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது" 10 மற்றும் 11 வசனங்களில் சூழ்நிலைக்கேற்றதான கிறிஸ்துவின் கட்டளையை பவுலால் சொல்ல முடிந்தது.

விவாகம்

1 கொரிந்தியர் 7:1-7, 12-16, 25-38

இந்த சூழ்நிலையில் அவரிடம் அப்படிப்பட்ட கட்டளை ஒன்றுமில்லை. ஆனாலும், பரிசுத்த ஆவியின் உள்ளுணர்வோடும், வழிநடத்துதலோடும் எழுதுகிறார் என்பது தெளிவாகிறது. (வசனம் 40; 1தெசலோனிக்கேயர் 2:13 ஆகியவற்றை பார்க்கவும்).

இ. கொரிந்து சபையினர் ஒருவேளை பவுலை இந்த கேள்வியைக் கேட்டிருக்கக் கூடும். "அவிசுவாசியானவர் விவாகத்தை அசுசிப்படுத்தி அதை அசுத்தமாக மாற்றுவதில்லையா?" பவுல் பதில் சொல்கிறார். "இல்லை, அவிசுவாசியானவர் (புருஷன்/மனைவி) விசுவாசியோடு வாசமாயிருக்க சம்மதமிருந்தால், முன் போல அந்த விவாகம் தொடர்ந்து இருக்கட்டும். அவிசுவாசி விவாகத்தை அசுசிப்படுத்துவதற்குப் பதிலாக, விசுவாசி குடும்பத்தில் எல்லா அங்கத்தினர்களையும் பரிசுத்தப்படுத்துகிறான்". ஆனால் இவைகளை நோக்குவதற்கு குறைந்தப்பட்சம் நான்கு காரணங்கள் உண்டு.

1. வசனம் 15. "சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்" புறஜாதியான ஒருவர் முடிவுக்கட்ட நினைக்கிற தன் திருமணத்தை மற்றவர் பற்றிக் கொண்டிருப்பது, ஏமாற்றம், பதட்டம் மற்றும் வருஷக் கணக்கில் அடிபடுவது போன்றவைகளைத் தான் விளைவிக்கும். இந்த சூழ்நிலையில் ஒரு வழிக்காட்டும் நியதியானது "குடும்பத்தில் சமாதானம்" ஆகும்.

2. வசனம் 16. அவிசுவாசியானவன் கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவளாகிய கணவன் அல்லது மனைவியோடு வாசமாயிருக்க சம்மதித்தால்

"ஒருவேளை விசுவாசி, அவிசுவாசியான புருஷன்/மனைவியின் இரட்சிப்புக்கு உதவ முடியும்". கலப்பு விவாகத்திற்கு மிஷனெரி ஊழியத்தின் சாத்தியமுண்டு. அவிசுவாசியோடு வாழ்கிறவர்கள் மட்டுமே இந்த தீர்ப்பை கூற முடியும்! காலத்திற்குக் காலம் இந்த சூழ்நிலை மாறக் கூடும்!

3. வசனம் 14. "அவிசுவாசியான புருஷன்/மனைவி விசுவாசியான தன் மனைவி/புருஷனால், பரிசுத்தமாக்கப்படுகிறார்" பரிசுத்தமாக்கப்படுவது என்பதின் அர்த்தம், புனிதமாக்கப்படுவது அல்லது சுத்திகரிக்கப்படுவது. விசுவாசியான புருஷன்/மனைவி "பரிசுத்தமாயிருந்தால்", அவளுடைய அவிசுவாசியான மனைவி/புருஷனும் பரிசுத்தமாக்கப்படுவார். அப்படியென்றால், அவர்களுடைய இரட்சிப்புக்கு நேராக நடத்தப்படக்கூடிய விசேஷ விதத்தில் வேறுபிரிக்கப்படுவதாகும்.

4. வசனம் 14. (பெற்றோரின் ஒருவர் கிறிஸ்தவராய் இராவிட்டால்) "உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்கும். இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன". அவிசுவாசியான புருஷன்/மனைவியைப் போல, பெற்றோரில் ஒருவர் அல்லது இருவருமே கிறிஸ்தவராய் இருக்கிற குடும்பத்தின் பிள்ளைகள் பரிசுத்தமாய் கருதப்படுகிறார்கள். அவர்களும் இரட்சிப்புக்கு நேராய் நடத்தப்படக்கூடிய விசேஷ விதத்தில் வேறு பிரிக்கப்படுகிறார்கள்.

ஈ. இந்த நம்முடைய தற்கால உலக சமுதாயத்தில், அவிசுவாசியான புருஷன் மனைவியோடு வாழ நினைக்கும் புதிய விசுவாசிகள் அநேக காரியங்களை சிந்திக்க வேண்டியதாயிருக்கிறது:

விவாகம்

1 கொரிந்தியர் 7:1-7, 12-16, 25-38

1. சபையிலும், உலகில் அதினுடைய வேலையிலும், நான் பங்காயிருக்க என்னை அனுமதித்து, என்னோடு வாழ்வதில் என்னுடைய புருஷன்/மனைவி திருப்தியாய் இருப்பாரா?

2. அவிசுவாசியான என்னுடைய புருஷன்/மனைவியை கிறிஸ்துவண்டை என்னால் நடத்த முடியுமா? அல்லது அவரோடு/அவளோடு வாழ்வதனால் நான் சபையை விட்டு விலகி விடுவேனா?

3. என்னுடைய நடத்தையிலுள்ள மாறுதல், பதட்ட நிலையையும், சண்டைகளையும் உண்டாக்குமா?

4. பிள்ளைகளைக் குறித்தும், அவர்களிடத்திலுள்ள என்னுடைய புதிய எதிர்பார்ப்புகளையும் குறித்து என்ன?

5. அவரோ/அவளோ என்னுடன் தொடர்ந்து வாழ விரும்பாவிட்டால், பிரிவினைக்கும், விவாகரத்துக்கும் உண்டான "குடிமக்களுக்குரிய சட்டங்கள்" என்ன?

3. கன்னிகைகள் விவாகம் செய்வது பாவமல்ல (7:25-38)

அ. கன்னிகைகளுக்கு பவுல் கொடுக்கும் ஆலோசனை கர்த்தருடைய கட்டளை அல்ல. அவர் எப்பொழுதும் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுதுகிறபடியால், அவர் சொல்வது உண்மையிலே தேவனிடத்திலிருந்து வருவதாகும். கொரிந்து சபையிலிருந்து பெற்றுக் கொண்ட கடிதத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட கூற்றுக்கு பவுல் பதில் கொடுக்கிறார். "கன்னிகைகள் விவாகம் பண்ணாமலிருப்பது நல்லது".

ஆ. வசனம் 28,36. இந்த தவற்றை எதிர்த்து பவுல் கூறுகிறார். "கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல... ஆகிலும் ஒருவன் தனக்கு நிச்சயிக்கப்பட்டவளின் கன்னிகைப் பருவம் கடந்து போனதினாலே, அவள் விவாகம் பண்ணாமலிருப்பது அவளுக்குத் தகுதியல்லவென்றும், அவர்கள் விவாகம் பண்ணிக்கொள்ளட்டும்... அது பாவமல்ல".

இ. "கன்னிகை விவாகம் பண்ணாமலிருப்பது அவளுக்குத் தகுதியல்ல" ஒரு கன்னிகையை நிரந்தரமாக நிச்சயிப்பட்டவளாய் வைத்துக்கொண்டு, ஒரு மனைவியாகவும் தாயாகவும் இருக்கின்ற பாக்கியத்தை அவளுக்கு கொடாமலிருப்பது, அநியாயமானது என்று ஒருவன் நினைக்கலாம். காரியம் இப்படி இருக்குமானால், "கன்னிகைப் பருவம் கடந்து போகுமானால் அவர்கள் விவாகம் செய்துக் கொள்ள வேண்டும்! இதனுடைய உண்மையான அர்த்தம் என்னவென்றால் "இளமையின் செழுமையை அந்த கன்னிகை கடந்து போவாளானாள்", அவர்கள் விவாகம் செய்துக் கொள்ள வேண்டும்!

ஈ. ஆனால், நிச்சயிக்கப்பட்ட தம்பதியர், விவாகம் செய்து கொள்ளுமுன் சிந்திக்க வேண்டிய மற்ற காரியங்களுமுண்டு.

1. வசனம் 26. பவுல் சொல்கிறார், "இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம், நீ (கன்னிகை) இருக்கிறபடியே இருப்பது (விவாகமல்லாமல்) நல்லதென்று எண்ணுகிறேன்". சபையின் மேல் பெரிய துன்பம் வந்து கொண்டிருந்தது. சபையிலே தனியே இருந்தவர்களை விட, குடும்பங்கள் உள்ள தம்பதியர்களுக்கு அதிக பிரச்சனைகள் இருக்கும். இது இன்றும் உண்மையாய் இருக்கிறது!

2. வசனம் 29. பவுல் சொல்கிறார் "இனி காலம் குறுகினது". கர்த்தரின் "இரண்டாம் வருகையை",

விவாகம்

1 கொரிந்தியர் 7:1-7, 12-16, 25-38

பவுல் எப்பொழுதும் தன் மனதிற்கு முன்னால் வைத்திருந்தார். ஆகவே கர்த்தருடைய வேலையைக் குறித்து ஒரு விசுவாசியின் விருப்பத்தையும், அர்ப்பணிப்பையும் குறைக்கக்கூடிய எதுவாயிருந்தாலும், அது தவிர்க்கப்பட வேண்டும். இந்தக் காரியத்தையே விவாகம் செய்யும்! விவாகமான ஸ்திரீயானவள் இரு பிரிவாயிருக்கிறாள். கணவனிடத்திலும் அவள் தன்னை அர்ப்பணிக்கிறாள் கர்த்தரிடத்திலும் தன்னை அர்ப்பணிக்கிறாள். (வசனம் 34-35)

உ. உலகத்தின் பல சமுதாயங்களில் இன்றைக்கு, ஒரு கன்னிகையின் விவாகம், அந்த கன்னிகையாலும், அவள் நிச்சயிக்கப்பட்டிருக்கும் மனிதனாலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனாலும் அவர்கள் ஆதி சபையின் நாட்களில் செய்தது போல, பவுலின் எச்சரிப்புகளைக் குறித்து சிந்திக்க வேண்டும்:

1. இந்த காலத்தின் இறுதியை நாம் நெருங்க, நெருங்க, இவ்வுலகத்தின் எல்லா நாடுகளிலும் இன்னும் கடினமாகிவிடும்.

2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சமீபமாய் இருக்கிறது. கர்த்தருக்கென்று தனிப்பட்ட கவனம் செலுத்தி நாம் வேலை செய்யக்கூடிய நேரம் குறைவாகயிருக்கிறது! ஆனாலும் தனியே இருக்கின்ற சபையின் தனிப்பட்ட நபர்கள், இதை கர்த்தரிடத்திலிருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட ஈவாக நிச்சயித்துக் கொள்ள வேண்டும்!

முடிவுரை

அ. உங்கள் சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் அல்லது உலகில் நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், விவாகம் உங்களில் அநேகருக்கான தேவ திட்டத்தின் பங்காயிருக்கிறது என்பதை நன்றாய் தெரிந்துக்கொள்ளலாம். இது ஏற்கெனவே விவாகமானவர்களுக்கும் பொருந்தும். அவிசுவாசியான புருஷன்/ மனைவி, மனைவியை இழந்தோர், கைம்பெண்கள் மற்றும் கன்னிகைகளும் இதில் அடங்குவர். ஆனாலும் தங்கள் காலமெல்லாம் விவாகமில்லாமலோ அல்லது மனைவியை இழந்தப் பின்னர் அல்லது கைம்பெண்ணான பின்னர் விவாகமில்லாமல் இருப்பதோ அப்படியிருக்கும்படி தேவனிடத்திலிருந்து ஈவை பெற்றிருக்கிறார்கள். இந்தக் கூட்டம் முற்றிலுமாய் தங்களை கர்த்தருடைய வேலைக்கென அர்ப்பணிக்கும் பாத்தியம் பெற்றுள்ளனர்.

ஆ. நம்மில் அநேகரோ, நம் பெற்றோரையும் அவர்களது பாதுகாப்பான பராமரிப்பை விட்டும் பிரிந்து சென்று ஒரு மனைவி/கணவனோடு இணைந்து, ஆதியிலே தேவன் நிறுவின புதிய மனுஷன் - மனுஷி ஐக்கியத்தை ஸ்தாபிக்கிறோம் (ஆதியாகமம் 2:24). இது சரியானது; நல்லதும் கூட! ஆனால் கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் நாம் மற்ற விசுவாசிகளை மட்டுமே விவாகம் பண்ணும்படி எச்சரிக்கப்படுகிறோம். விவாகமானபின், உடலுறவு என்பது, விவாக கடமைகளின் தொடர்ச்சியான பங்கு என்பதை ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும்.

தாங்கள் சோதிக்கப்படும்போது, கிறிஸ்துவை விட்டு விழக்கூடிய சாத்தியக்கூற்றைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கக் கூடாது.

1 கொரிந்தியர் 10:1-13

முகவுரை

சோதிக்கப்படும்போது, கிறிஸ்துவை விட்டு விலகக் கூடிய சாத்தியக் கூற்றைக் குறித்து கிறிஸ்தவர்களை எச்சரிக்கும்படி, இஸ்ரவேலின் சரித்திரத்தை பவுல் அப்போஸ்தலர் இந்த வேத பகுதியில் பயன்படுத்துகிறார். இது ஒரு உண்மையான சாத்தியக் கூற்று. அதை அவர்கள் அறிந்துக் கொள்ளும்படி அப்போஸ்தலர் விரும்புகிறார்.

ஆ. சிவந்த சமுத்திரத்தை கடந்த போது இஸ்ரவேல் தேசமானது தேவனுடைய தலைமைக் கீழும், வழி நடத்துதலுக்கு (மேகம்) கீழும் இருந்தது. நாம் கிறிஸ்துவுக்கு எப்படி கீழ்படிகிறோமோ, (தண்ணீர் ஞானஸ்நானம் நமது கீழ்ப்படிதலை விளக்குகிறது) அதே போல் அவர்கள் மோசேக்கு கீழ்ப்படிந்தார்கள். இன்று அவர் செய்வது போல, இயேசு வனாந்தரத்திலே அவர்களுக்கு ஆவிக்குரிய (இயற்கைக்கு அப்பாற்பட்ட) உணவை கொடுத்தார். ஆனால் அவர்களில் அநேகரைக் குறித்து தேவன் திருப்தியடையவில்லை. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அவர்கள் அடையுமுன் அவர்களில் அநேகருடைய சரீரங்கள் வனாந்தரத்தில் சிதறடிக்கப்பட்டன. சோதிக்கப்பட்டபோது, அவர்களில் அநேகர் விழுந்தனர்.

1. சோதிக்கப்பட்டபோது விழுந்தவர்களின் திருஷ்டாந்தகளை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார் (10:6-11)

அ. வசனம் 6-10. இந்த வசனங்களில் "அவர்கள் செய்தது போல" "அவர்களில் சிலர் இருந்தார்கள்", "அவர்களில் சிலர் செய்தார்கள்" என்று பவுல் சொல்லுகிறார். பவுல் இஸ்ரவேலரைக் குறித்துப் பேசுகிறார்; தற்கால இஸ்ரவேலரின் முற்பிதாக்கள் (வசனம் 1-5ஐ பார்க்கவும்) வனாந்தரத்திலே சோதிக்கப்பட்டபோது இஸ்ரவேலர் விழுந்தனர்.

ஆ. வனாந்தரத்திலே, இஸ்ரவேலரில் சிலர் விக்கிரக ஆராதனைக்காரராய் இருந்தார்கள். சீனாய் மலையிலே பத்து கற்பனைகளை மோசே பெற்றுக் கொண்டிருந்தபோது, அவர்கள் பொற்கன்றுக்குட்டியை வணங்கினார்கள். (யாத்திராகமம் 32:1-6). விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட ஆகாரத்தையும் சாப்பிட்டார்கள்.

இ. போவாபியருடைய தெய்வத்தின் வழிப்பாட்டில் இஸ்ரவேலர்கள் கலந்து கொண்டார்கள். பாகாலை ஆராதித்த விபச்சார கன்னிகைகளோடு உடலுறவும் கொண்டார்கள் (எண்ணாகமம் 25:1-9). இஸ்ரவேலின் எல்லைகளாக இருந்த தேசங்களிலுள்ள மக்களின் ஆராதனையின் ஒரு பகுதி, விக்கிரக ஆராதனையும், வேசித்தனமும் இக்காரியங்களைச் செய்ய இங்கே தான் கற்றுக் கொண்டார்கள்.

ஈ. தேவன் அவர்களுக்கு அளித்த ஆகாரம், தண்ணீர் ஆகியவற்றால் அவர்கள் திருப்தியாகவில்லை. ஆகவே அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, தேவனுக்கு விரோதமாக பேசி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நுழைவதற்கு காத்திருக்கவேண்டியதைக் குறித்து கோபத்தை வெளிப்படுத்தினார்கள் (எண்ணாகமம் 21:5-6)

தாங்கள் சோதிக்கப்படும்போது, கிறிஸ்துவை விட்டு விழக்கூடிய சாத்தியக்கூற்றைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கக் கூடாது.

1 கொரிந்தியர் 10:1-13

உ. மோசே, ஆரோன் ஆகியவர்களின் தலைமையைக் குறித்தும் கூட இஸ்ரவேலர் முறுமுறுத்திருந்தார்கள். தங்கள் சொந்த கடமைகளை செய்வதோடு, பிரதான ஆசாரியனான ஆரோனின் வேலையையும் செய்ய விரும்பின கோராகுவோடும், மற்ற லேவியரோடும் அது ஆரம்பமாயிற்று. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்களான மோசே மற்றும் ஆரோனை, முழு இஸ்ரவேல் சமுதாயமும் எதிர்ப்பதில் முடிந்தது.

ஊ. தேவன் இஸ்ரவேலரை அவர்களுடைய விக்கிரக ஆராதனை, வேசித்தனம், தமக்கு விரோதமான குறைகூறுதல், மற்றும் தம்மால் தெரிந்துக் கொள்ளப்பட்ட தலைவர்களுக்கு விரோதமான பேச்சு ஆகியவற்றிற்காக நியாயந்தீர்த்தார். அவர்கள் பெற்ற தண்டனைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாக இருக்கின்றன. நமக்கு எச்சரிப்பாக அவைகள் எழுதப்பட்டன. (வசனம் 11). பொல்லாங்கான காரியங்களில் நம் இருதயத்தை வைக்காதபடிக்கு திருஷ்டாந்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (வசனம் 6). ஒரே நாளில் 23 ஆயிரம் பேர் மரித்தார்கள். மற்றும் சிலர் சர்ப்பங்களால் கொல்லப்பட்டார்கள். இன்னும் சிலர் சங்கார தூதனால் கொல்லப்பட்டார்கள்.

எ. விக்கிரகங்களை ஆராதிப்பது, விக்கிரகங்களுக்கு பலியிடும் போது அல்லது விக்கிரக விருந்துகளின் போது அவைகளில் கலந்து கொள்ளுதல், வேசித்தனம் செய்தல், தேவன் நமக்கு கொடுப்பவற்றைக் குறித்து குறை சொல்லுதல் பொல்லாங்கான காரியங்களை செய்தல் போன்றவற்றை நாம் செய்ய எத்தனிக்கும் போது, இக்காரியங்களைச் செய்வதற்காக தேவன் தம்முடைய ஜனங்களை தண்டிக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வேதத்திலே கூறப்பட்டுள்ள எச்சரிப்புக்கு நாம் செவி கொடுத்து, இந்த பொல்லாங்கான காரியங்களை செய்யும்படி நம்முடைய இருதயங்களை செலுத்த மறுக்க வேண்டும்.

ஏ. அநேக விசுவாசிகளுக்கு விக்கிரக ஆராதனையின் பின்னணி உண்டு. அநேகர் விக்கிரக ஆராதனைக்காரராக, வேசித்தனம் செய்பவர்களாக குறை சொல்கிறவர்களாக இருந்திருக்கின்றனர். ஆகவே அவர்களுக்கு இவைகள் பலமான சோதனைகள். எப்படியாகிலும் ஒதுக்க வேண்டிய சோதனையின் இடங்கள் இவை. இவைகள் செய்யப்படும் இடங்களுக்கு போகாதிருங்கள். இவைகளை செய்பவர்களோடு சம்பந்தம் கலக்காதீர்கள்.

2. நாம் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி, தேவன் இந்த திருஷ்டாந்தங்களை நமக்கு கொடுத்திருக்கிறார். (10:12).

அ. விக்கிரக ஆராதனை செய்தல், வேசித்தனம் பண்ணுதல், தேவன் அளித்தவற்றைக் குறை சொல்லுதல், ஆவிக்குரிய தலைவர்களுக்கு விரோதமாக பேசுதல் ஆகியவற்றைச் செய்தாலும், தங்களுக்கு ஒன்றும் நடக்காது என்று இஸ்ரவேலர் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்பட்டார்கள். இதேவிதமாக, பாவம் செய்தும், பொல்லாங்கான கிரியையை நடப்பித்தும் கூட கர்த்தரில் தங்களால் திடமாய் நிற்க முடியும் என்று நம்பின கொரிந்தியர்கள்

தாங்கள் சோதிக்கப்படும்போது, கிறிஸ்துவை விட்டு விழக்கூடிய சாத்தியக்கூற்றைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கக் கூடாது.

1 கொரிந்தியர் 10:1-13

இப்படிப்பட்ட தவறான எண்ணங்களை பரிதபிக்கப்படத்தக்க விதத்தில் பெற்றிருந்தார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிற இன்றைய விசுவாசிகளும் கூட நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்படுவார்கள்.

ஆ. "நிற்கிறேன் என்று நீங்கள் எண்ணினால்". கர்த்தருடைய பந்தியிலே (நற்கருணையிலே) பங்கு பெறுவதினால், தங்கள் கிறிஸ்துவுக்குள் பாதுகாப்பாக இருப்பதாக கொரிந்து சபையிலுள்ள சிலர் எண்ணினார்கள். ஆனால், அதே சமயத்திலே அவர்கள் விக்கிரகங்களோடுள்ள பண்டிகைகளிலே பங்கு பெற்றுக் கொண்டிருந்தார்கள். இதனால்தான், "கர்த்தரில் திடமாய் நீங்கள் நிற்கிறதாய் எண்ண வேண்டாம்" என்று பவுல் அவர்களிடம் கூறுகிறார் (1கொரிந்தியர் 20-21ஐ பார்க்கவும்)

இ. பவுல் கொரிந்தியர்களிடம் "விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்" என்றும் சொல்கிறார். கர்த்தருக்குள் நீங்கள் எவ்வளவு உறுதியாயிருக்கிறீர்கள் என்பதைக் குறித்து நீங்கள் மேட்டிமைபோடு சிந்தித்து, பெருமையடித்துக் கொண்டிருந்து, அதே சமயத்தில் விக்கிரக ஆராதனை செய்து விக்கிரக பண்டிகைகளை ஆசரிப்பீர்களானால், எச்சரிக்கையாயிருங்கள்! "அழிவுக்கு முன்னானது அகந்தை" (நீதிமொழிகள் 16:18) "மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்" *(29:23)*

ஈ. கூரையிலிருந்து பத்சேபாள் குளிப்பதை தாவீது பார்த்தப்போது, கர்த்தருக்குள் தான் உறுதியாயிருப்பதாக நினைத்திருப்பான் என்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன் (2சாமுவேல் 11). ஒரு சில நாட்களுக்குள் அவளோடு உடலுறவு கொண்டு, அவளுடைய புருஷனை கொலை செய்வித்தான்.

உ. பிசாசானவன் யாரையாகிலும், விசேஷமான மேட்டிமையான கிறிஸ்தவர்களை அழிக்கும்படி, பூமியெங்கும் சுற்றி உலாவிவந்து கொண்டிருக்கிறபடியால், நாம் ஜாக்கிரதையோடும், விழிப்போடும் இருக்க வேண்டும். ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளும் போது, மத பெருமையைக் குறித்தும், பெருமையடித்துக்கொள்ளும் நோக்கைக் குறித்தும் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் கொள்ளும் அதே சமயத்தில், தீமையான, பொல்லாங்கான காரியங்களை செய்துகொண்டிருப்போமானால், நாம் அதைக் குறித்து உண்மையாய் ஒப்புக்கொண்டு, மனந்திரும்பவேண்டும்.

3. நாம் சோதிக்கப்படும்போது, நமக்கு உதவி செய்ய தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார். (10:13).

அ. "சோதனை" என்ற பதமானது, விபச்சாரம், திருடு, விக்கிரக ஆராதனை, வெறி போன்ற பாவங்களை செய்யும்படியான சோதனை என்று பொருள்படுகிறது அதனுடைய இன்னொரு அர்த்தம் "ஆய்வு செய்யப்படுதல்". இது எல்லாவிதமான சோதனைகளையும் குறிக்கிறது. இஸ்ரவேலருக்கு, விக்கிரக ஆராதனை, வேசித்தனம், தேவன் அளித்தவற்றை குறை கூறுதல், தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட தலைவர்களுக்கு விரோதமாக முறுமுறுத்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. இவைகள் உங்களுக்கு சோதனைகளாக இராவிட்டால், வேறு சிலவை இருக்கும்.

தாங்கள் சோதிக்கப்படும்போது, கிறிஸ்துவை விட்டு விழக்கூடிய சாத்தியக்கூற்றைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கக் கூடாது.

1 கொரிந்தியர் 10:1-13

ஆ. "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை". நீங்கள் அனுபவிக்கிற சோதனைகளும் போராட்டங்களும் எல்லா மனிதரும் அனுபவிப்பதே. ஆகவே இந்தப் போராட்டத்தில் நீங்கள் தனியாய் இருப்பதாக நினைக்காதீர்கள். உங்களைப் போலவே, அதேபோன்ற அநேக சோதனைகளால், கிறிஸ்துவுக்குள் உள்ள ஒவ்வொரு சகோதரனும் சகோதரியும் சோதிக்கப்படுகிறார்கள். வனாந்தரத்திலே இஸ்ரவேலர் சோதிக்கப்பட்டு, போராட்டத்தில் இருந்தது போல, நாமும் இருப்போம்!

இ. ஆனால், தேவன் உண்மையுள்ளவர். அவர் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். அவர் என்ன செய்வதாக சொல்கிறாரோ அதை அவர் செய்வாரென்று நாம் நம்ப முடியும். நீங்கள் அவரைச்சார முடியும். "உன் தேவனாகிய கர்த்தரே தேவன்; அவர் உண்மையுள்ள தேவன்" (உபாகமம் 7:9). சோதிக்கப்படுபவர்களுக்கு இரண்டு காரியங்களைச் செய்ய தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்: 1. உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு (பிசாசினால்) அவர் இடங்கொடுக்க மாட்டார். மற்றும் (2) நீங்கள் சோதிக்கப்படும்போது, சோதனையைத் தாங்கத்தக்கதாக, அதற்கு தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (அதற்கு முடிவு கட்டுவார்).

உ. நமக்கு இயேசு செய்யச் சொன்ன காரியத்தின் நிமித்தமாக பிதாவானவர் நமது வாழ்க்கையின் சோதனைகளையும், போராட்டங்களையும் கட்டுக்குள் வைக்கிறார் "பரிசுத்த பிதாவே ... நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் ... நீர் எனக்குத் தந்த நாமம் ... தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவான் 17:11,15) நம்மில் ஒருவரும் பிசாசினிடத்தில் கெட்டுப்போவதை இயேசு விரும்பவில்லை (யோவான் 17:27).

ஊ. இந்த வசனமானது, மலைகளுக்கு நடுவே சிக்கிக் கொண்ட சேனையை படம் பிடித்துக் காட்டுகிறது. சத்துரு சுற்றிலும் அவர்களை சூழ்ந்து உள்ளான். சூழ்நிலை நம்பிக்கையற்றதாய் தோன்றுகிறது. தப்பிக் கொள்ள, வெளியேற ஒரு வழியும் இல்லை! பின்பு, திடீரென, படைத்தலைவர் மலைகளுக்கிடையில் தப்பிக்கும்படியான ஒரு வழியைப் பார்க்கிறார். சத்துருவின் சேனைக்கு தெரியாதவாறு அவர்கள் தப்பித்துக் கொள்ளும்படியான ஒரு வழி. நீங்கள் ஒவ்வொருவரும் சோதிக்கப்பட்டு, தப்பிக் கொள்ள ஒரு வழியையும் காணாமல் இருக்கும்போது, தேவன் இதை உங்களுக்கு செய்வார். ஏதோ ஒரு வழியில் உங்கள் சோதனைகளுக்கும், போராட்டங்களுக்கும் ஒரு முடிவு கட்டுவார்.

முடிவுரை

அ. கிறிஸ்துவை விட்டு நாம் விழுவதற்கு உண்டான சாத்திய கூற்றைக் குறித்து நாம் அறியாதிருக்க கர்த்தர் விரும்பவில்லை. கிறிஸ்துவின் பாதுகாப்பிலும், வழிநடத்துதலுக்குள்ளும் இருந்தும்கூட விழுந்துப் போனவர்களின் உதாரணங்களை அதினால் தான் அவர் நமக்குக் கொடுக்கிறார். அவருடைய பாதுகாப்பான மூடுதலிலிருந்து வெளியே வந்து, பாவம், முரட்டாட்டம் (விக்கிரக ஆராதனை, வேசித்தனம்) ஆகிய செயல்களைச் செய்தனர்.

தாங்கள் சோதிக்கப்படும்போது, கிறிஸ்துவை விட்டு விழக்கூடிய சாத்தியக்கூற்றைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கக் கூடாது.

1 கொரிந்தியர் 10:1-13

ஆ. இங்கே ஒருவேளை பாவம் செய்யும்படியாக சோதிக்கப்படுவதாகவோ, இனிமேலும் தாங்கக்கூடாத அளவிற்கு போராட்டங்களை சந்திப்பதாகவோ நினைத்துக் கொள்ளும் ஒருசிலர் இருக்கலாம். இரண்டு மலைகளுக்கிடையில் சிக்கி, தப்பிக்கொள்ள வழியும் இல்லாததுபோல நீங்கள் உணரலாம். பிசாசினால் உங்களுக்குமுன் வைக்கப்படும் சோதனைகளை நீங்கள் தாங்கும்படியாக அதிலிருந்து தப்பிக்கொள்ளும்படியான போக்கை தேவன் உண்டுபண்ணும்படி நாங்கள் விரும்புகிறோம். உங்கள் வாழ்வில் எழும்பியுள்ள ஆவிக்குரிய யுத்தத்தை நீங்கள் ஜெயிக்கும்படி விரும்புகிறோம்! உங்களை கர்த்தர் பெலப்படுத்த விரும்புகிறோம். மலைகளின் வழியே தப்பிக்கொள்ளும் மார்க்கத்தை அவர் உங்களுக்கு உண்டாக்க விரும்புகிறோம். தேவன் உண்மையுள்ளவர்! நீங்கள் கேட்பீர்களானால் உங்களுக்கு இதைச் செய்வார்!

விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்

1 கொரிந்தியர் 10:14-11:1

முகவுரை

அ. 1 கொரிந்தியர் 10:1-13இல், விக்கிரக ஆராதனை, வேசித்தனம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்களுக்கு விரோதமாக முறுமுறுத்தல் ஆகிய பாவங்களைச் செய்ய சோதிக்கப்படுவதைக் குறித்து, பவுல் கொரிந்தியர்களை எச்சரிக்கிறார். இப்பாவங்களின் விளைவுகளை, பழைய ஏற்பாட்டின் உதாரங்களைச் சொல்லி வெளிப்படுத்துகிறார்: ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் மடிந்தார்கள், சிலர் பாம்புகளினால் கொல்லப்பட்டார்கள், வேறு சிலர் சங்கார தூதனால் கொல்லப்பட்டார்கள்.

ஆ. பாவத்திலிருந்து நம்மை விலக்கவே இக்காரியங்கள் நடந்தன; உதாரணங்களாகவும் எழுதப்பட்டன என்று பவுல் கூறுகிறார். நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதற்கு தேவன் இடங்கொடுக்க மாட்டார். சோதனையிலும் நாம் எழும்பி நிற்க, நமக்கு தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். அதன்பின்னர், "ஆகையால் எனக்கு பிரியமானவர்களே, விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள்" என்று சொல்லி "விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்" என்ற கலந்தாலோசனையை துவக்குகிறார்.

1. கிறிஸ்தவர்கள் விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள் (10:14-15)

அ. "ஓடுங்கள்" என்று பவுல் கூறும்போது ஓடிப்போவது, தவிர்ப்பது, விக்கிரக ஆராதனையின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிப்பது விக்கிரக ஆராதனை செய்யும் இடத்தை விட்டு மறைவது, போன்றவற்றைக் குறிக்கிறார்.

ஆ. நவீன கால சீனா, ஹாங்காங், மற்றும் கிழக்கத்திய நாடுகளில் தற்போது உள்ள சூழ்நிலையைப் போன்று தான் கொரிந்துவிலிருந்த பிரச்சனையும் இருந்தது. மிகச்சிறிய கிராமத்திலுள்ள மிகச் சிறிய வீட்டிலிருந்து, மிகப்பெரிய பட்டணத்தின் மையம் வரைக்கும் பரவியுள்ள ஒரு விஸ்தாரமான விக்கிரக ஆராதனை முறை உள்ளது.

1. வீட்டாரின் செய்கைகளை "பரலோக மன்னருக்கு", எடுத்துரைக்கும் "சமையலறையின் தெய்வமும்" விசேஷ சலுகைகளை அளிக்கக்கூடிய "குரங்கு தெய்வமும்" அநேக வீடுகளில் உண்டு. மற்றும், வீட்டையும், வீட்டாரையும் தீங்கிலிருந்து பாதுகாக்கும் "வாசல் தெய்வங்களும்" உண்டு.

2. கிராமங்களின் குறுக்கு சந்திகளில், "எல்லை தெய்வங்கள்" என்றும் "பூமி தெய்வங்கள்" என்றும் அழைக்கப்படுபவைகளை நீங்கள் காண்பீர்கள். தங்கள் எல்லைகளுக்குள் வாழும் எல்லா ஜனங்களையும் மேற்பார்வையிட்டு, காப்பதுதான் அவர்கள் வேலை. "எல்லை தெய்வங்களுக்கும்" படிகள் உண்டு. பெரிய எல்லைகளுள்ளவைகள், சிறிய எல்லைகளுள்ளவைகளைவிட மேம்பட்டவைகள். எல்லா "எல்லை தெய்வங்களும்", தங்களுடைய பாதுகாப்பின் கீழ் உள்ள மக்களின் செய்கைகளை "பட்டண தெய்வத்திடம்" சொல்லும். உதாரணமாக, ஹாங்காங்கின் "பட்டண தெய்வமாக" இருப்பது "ஷிங்வாங்". அவன் பட்டணத்திலுள்ள மூன்று பெரிய கோவில்களில் இருக்கிறான்.

விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்

1 கொரிந்தியர் 10:14-11:1

3. "அக்கினி தெய்வங்கள்", "கடல் தெய்வங்கள்", மின்னல், காற்று மற்றும் இடிமுழக்கங்களின் தெய்வங்கள்", "மண் மற்றும் தானிய தெய்வங்கள்" ஆகியவையும் உண்டு. கிராமங்களில் உள்ள குன்றுகளின் மேலுச்சிகளில் நீங்கள் பார்ப்பீர்களானால், "மழையின் தெய்வத்தை" குறிக்கும் பெரிய கற்களைக் காண்பீர்கள்.

இ. சீனா, ஹாங்காங், மற்றும் கிழக்கத்திய நாடுகளின் பெரும்பகுதியிலுள்ள வீடுகள், சந்திவழிகள், எல்லைகள் மற்றும் பட்டணங்களில் வசிப்பவர்கள், ஒவ்வொரு நாளும், இந்த பொய்யான தெய்வங்களை திருப்திபடுத்த, தவறாமல் இவைகளைச் செய்கிறார்கள்;

1. நறுமணப்புகை ஏற்றி, அவைகளுக்கு போஜனபலிகளை செலுத்துவது.

2. அவைகளை ஆராதித்து, வழிநடத்துதலும், ஆலோசனையையும் அவைகளிடத்தில் கேட்பது.

3. தங்களைக் குறித்தும், தங்கள் குடும்பங்களைக் குறித்துமான எல்லா முக்கிய நிகழ்ச்சிகளைச் சொல்லுவது.

ஈ. வசனம் 14-15 பவுல் கொரிந்தியர்களிடம் எனக்குப் பிரியமானவர்களே என்று பேசுகிறார். அது தனக்கு பிரியமான நண்பர்கள், சரியான அடியை எடுத்து வைத்து "விக்கிரக ஆராதனைக்கு" விலகி ஓடும்படியான ஒரு உணர்ச்சி வசப்பட்ட ஒரு வேண்டுகோளாகும்.

உங்களை புத்திமான்கள் என்று எண்ணிப் பேசுகிறேன் தேவன் உங்களுக்கு கொடுத்த ஞானத்தையும், புத்தியையும் பயன்படுத்தி நான் உண்மையைத் தான் பேசுகிறேன் என்று உணர்ந்து கொள்ளுங்கள்; விக்கிரக ஆராதனை செய்யும் இடங்களை விட்டு நீங்கள் ஓடுவதும், அதை தவிர்ப்பதும், தப்பித்துக் கொள்ளுவதும், மறைவதும் உங்களுக்கு அத்தியாவசியமாகும்!

2. பேய்களோடுள்ள ஐக்கியத்தினால் கர்த்தருடைய கோபத்தை கிறிஸ்தவர்கள் கிளப்பக்கூடாது (10:16-22)

அ. வசனம் 16-17 விசுவாசிகள் கர்த்தருடைய பந்தியில் பாத்திரத்திலும் அப்பத்திலும் பங்கெடுக்கும்போது, அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்திலும், சரீரத்திலும் பங்கெடுக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறார். அவர் கூறுவதின் அர்த்தம் அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போது, கிறிஸ்துவில் பங்கெடுக்கிறார்கள்; ஐக்கியம் கொள்ளுகிறார்கள்; பிணைக்கப்படுகிறார்கள்; இணைக்கப்படுகிறார்கள்.

ஆ. வசனம் 18 "பலிபீடத்தில் படைக்கும் படைப்புகளை புசிக்கும் இஸ்ரவேலின் ஜனங்கள்" பழைய ஏற்பாட்டில், பலிபீடத்தில் படைக்கப்பட்ட பலியின் ஒரு பகுதியை இஸ்ரவேலின் ஜனங்கள் புசிப்பார்கள். பலியை அவர்கள் புசிக்கும் போது, அது தேவனுடைய பலிபீடமாய் இருக்கிறபடியால் அவர்கள் தேவனோடு பங்கு கொண்டு ஐக்கியப்பட்டு, இணைக்கப்பட்டு, ஒன்றாகிறார்கள்.

இ. வசனம் 19 விக்கிரகங்கள் ஒன்றுமல்ல. அவைகள் உண்மையான தெய்வங்கள் அல்ல. இப்படிப்பட்ட விக்கிரகங்களுக்கு படைக்கப்படும் படைப்பும் ஒன்றுமல்ல. ஆனாலும் ஒரு பெரிய பிரச்சனை உண்டு.

விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்

1 கொரிந்தியர் 10:14-11:1

விக்கிரகங்களை ஆராதிக்க மனிதர்களிடம் உள்ள தயார் நிலையை பேய்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. ஒரு விக்கிரகத்திற்கு அவர்கள் படைக்கும்போது, உண்மையில் அப்படைப்பை செய்யும்படி, அவர்களை அது பலவந்தப்படுத்துகிறது. அது பேயின் பலிபீடமாய் இருக்கிறபடியால், பலியை படைக்கும் மனிதன் உண்மையில் ஒரு பேயோடு பங்கு கொண்டு, ஐக்கியப்பட்டு, இணைக்கப்பட்டு, ஒன்றாகிறான்.

ஈ. விக்கிரக ஆராதனையிலும், போஜனம் விக்கிரங்களுக்கு படைக்கப்பட்ட இடங்களிலே உள்ள பந்திகளிலும் கோவில்களிலும் அநேக கொரிந்திய விசுவாசிகள் பங்கு பெற்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் கர்த்தருடைய பந்தியிலும் பங்கு பெற்றுக் கொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் கர்த்தருடைய பந்தியிலும், பேய்களின் பந்தியிலும் போஜனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இவ்விரண்டையும் அவர்கள் தொடர்ந்து செய்தால், அவர்கள் கர்த்தருடைய எரிச்சலை கிளப்பிவிடுவார்கள்.

உ. வசனம் *22* "கிளப்புதல்" என்றால், கிண்டுதல், தேவனை உங்களுக்கு எதிராய் மாறும்படி அசைத்தல் என்று பொருள். "எரிச்சல்" என்பது கொதித்து எழுதல், மற்றவர்களுக்கு விரோதமாக வைராக்கியமாகுதல் என்று அர்த்தமாகும். விக்கிரகங்களை தொடர்ந்து வழிப்படுவோர் தேவனுக்கு போட்டியாளனாக, எதிராளியாக மாறி, அவரது வைராக்கியமான, கொதித்து எழும்புகிற கோபத்திற்கு உள்ளாகிறார்கள். சர்வவல்லவரின் கோபத்தை கிண்டுதல் முற்றிலும் மடத்தனமானதாகும்.

3. விக்கிரகங்களுக்கு அறிந்தும் படைக்கப்பட்ட போஜனத்தை கிறிஸ்தவர்கள் புசிக்கக்கூடாது (10:23-11:1)

அ. வசனம் *23-24.* கிறிஸ்தவ நடத்தையின் அடிப்படை கொள்கையானது மற்றவர்களின் பிரயோஜனம். ஆகவே கிறிஸ்தவர்கள் அனுபவிக்க அதிகாரமுடைய காரியங்களானாலும் கூட, இந்த கொள்கையை அவைகள் மீறுவர்களானால், அவைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆ. சில கொரிந்தியர்கள் இவ்விதம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். "கிறிஸ்துவில் எங்களுக்கு விடுதலை உண்டு. எல்லாவற்றையும் சாப்பிட அதிகாரமுண்டு. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவையும் கூட". இதற்கு பவுலின் பதில் இவ்விதம் இருக்கும். "ஆம், எல்லாவற்றையும் சாப்பிட அதிகாரமுண்டு, ஏனெனில் பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது" (சங்கீதம் *24:1*) ஆனால் சில பொருட்களை சாப்பிடுவது உங்களுக்கு நல்லதில்லை; சபையிலுள்ள மற்றவர்களை கட்டி எழுப்பவும் உதவுவதும் இல்லை.

இ. விக்கிரகங்களுக்கு படைக்கின்ற சில விக்கிரக ஆராதனைக்காரர்கள் மீதமுள்ள போஜனத்தை போஜன சந்தையிலுள்ள வியாபாரியிடம் விற்று விடுகிறார்கள். இவை விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டனவா என்ற உணர்வின்றி கிறிஸ்தவர்கள் இந்த இறைச்சியில் கொஞ்சம் வாங்கி புசிப்பார்கள். சொல்லப்பட்டாலொழிய ஒரு துண்டு போஜனம் ஒரு விக்கிரகத்திற்கு படைக்கப்பட்டதா என்பதை அறிவது கிட்டத்தட்ட அசாத்தியமானதாகும்.

ஈ. வசனம் *27* "அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள்;

விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்

1 கொரிந்தியர் 10:14-11:1

ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று அறிந்தால், இரண்டு காரணங்களுக்காக அவைகளை புசியாதிருங்கள்:

1. எச்சரிப்பிற்கு பின்னும் அந்த போஜனத்தை நீங்கள் புசித்தால், ஒரு அவிசுவாசியோ அல்லது ஒரு விசுவாசியோ, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவற்றை போஜனத்தை சாப்பிடுவதை நீங்கள் ஆமோதிக்கிறீர்கள் என்று நினைக்க ஏதுவுண்டு. விக்கிரக வழிப்பாட்டில் நீங்கள் பங்கு பெறுகிறவர் என்று அவன் நினைக்க ஏதுவுண்டு

2. எச்சரிப்பிற்கு பின்னும் நீங்கள் அந்த போஜனத்தை புசித்தால் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனத்தை புசிப்பதும், விக்கிரகங்களுக்கு படைக்கப்படும் வழிப்பாட்டில் கலந்துக் கொள்வதும் சரிதான் என்று ஒரு அவிசுவாசியோ அல்லது இன்னொரு விசுவாசியோ நினைக்க சாத்தியமுண்டு.

உ. 1கொரிந்தியர் 8:7, 9-13இல் உள்ள பவுலின் கூற்றுக்கு இது ஏற்புடையதாயிருக்கிறது. ஒரு போஜனமானது விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டது என்று அறிந்தும் அதை சாப்பிட்டு, அதினால் மற்ற கிறிஸ்தவர்களுக்கு இடறல் உண்டாக்கி, கிறிஸ்துவோடு கூடிய அவர்களது நடையில் தடுமாற செய்யாதபடிக்கு நாம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

நம்முடைய மனச்சாட்சியை ஒருவேளை அது பாதிக்காமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய மனச்சாட்சியை அது பாதிக்கும்.

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனத்தை சாப்பிடுவதினால் தாங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக பாவம் செய்வதாக அவர்கள் நினைக்கலாம். இதினாலே நாமும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனத்தை அசுத்தமாய் எண்ணவேண்டும்.

ஊ. ரோமர் 14:14-15இலும், நம்முடைய போஜனத்தினால் நம் சகோதரர்களை நாம் வேதனைப்படுத்தக்கூடாது என்ற கொள்கையை பவுல் வலியுறுத்துகிறார். எருசலேமின் நியாயஸ்தலம், புறஜாதியான விசுவாசிகளுக்கு கொடுக்கும் போதனைக்கு இது ஒத்ததாய் இருக்கிறது.(அப்போஸ்தலருடைய நடபடிகள் 15:20,29) விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டது என்று தெரிந்த போஜனத்தை, புறஜாதிகள் புசிக்கக்கூடாது. அது யூத விசுவாசிகளை கோபப்படுத்தும்!

எ. வசனம் 31-33 தன்னுடைய விவாதத்தை பவுல் இவ்விதம் முடிக்கிறார், "கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரு விசுவாசியின் சுதந்தரம் மூன்று கருத்துக்களால் கணிக்கப்படுகிறது" அது

1. தேவனுக்கு மகிமையை கொண்டு வருகிறதா?

2. மற்ற விசுவாசிகளைக் கட்டி எழுப்புகிறதா?

3. இரட்சிக்கப்படாதவர்களை, கிறிஸ்துவை இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்படி உற்சாகப்படுத்துகிறதா?

நம் மத்தியில் கிறிஸ்து நடந்தபோது, கிறிஸ்து இந்த மாதிரியை நமக்கு முன் வைத்தார். கிறிஸ்துவின் மாதிரியை தான் பின்பற்றினதாக பவுல் கூறினார். அவர் கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றினதுபோல, எல்லா விசுவாசிகளும் தன்னுடைய மாதிரியை பின்பற்றும்படி அவர் உற்சாகப்படுத்துகிறார் (11:1).

விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்

1 கொரிந்தியர் 10:14-11:1

ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று அறிந்தால், இரண்டு காரணங்களுக்காக அவைகளை புசியாதிருங்கள்:

1. எச்சரிப்பிற்கு பின்னும் அந்த போஜனத்தை நீங்கள் புசித்தால், ஒரு அவிசுவாசியோ அல்லது ஒரு விசுவாசியோ, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவற்றை போஜனத்தை சாப்பிடுவதை நீங்கள் ஆமோதிக்கிறீர்கள் என்று நினைக்க ஏதுவுண்டு. விக்கிரக வழிப்பாட்டில் நீங்கள் பங்கு பெறுகிறவர் என்று அவன் நினைக்க ஏதுவுண்டு

2. எச்சரிப்பிற்கு பின்னும் நீங்கள் அந்த போஜனத்தை புசித்தால் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனத்தை புசிப்பதும், விக்கிரகங்களுக்கு படைக்கப்படும் வழிப்பாட்டில் கலந்துக் கொள்வதும் சரிதான் என்று ஒரு அவிசுவாசியோ அல்லது இன்னொரு விசுவாசியோ நினைக்க சாத்தியமுண்டு.

உ. 1கொரிந்தியர் 8:7, 9-13இல் உள்ள பவுலின் கூற்றுக்கு இது ஏற்புடையதாயிருக்கிறது. ஒரு போஜனமானது விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டது என்று அறிந்தும் அதை சாப்பிட்டு, அதினால் மற்ற கிறிஸ்தவர்களுக்கு இடறல் உண்டாக்கி, கிறிஸ்துவோடு கூடிய அவர்களது நடையில் தடுமாற செய்யாதபடிக்கு நாம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

நம்முடைய மனச்சாட்சியை ஒருவேளை அது பாதிக்காமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய மனச்சாட்சியை அது பாதிக்கும்.

எ நாம் வேதனைப்படுத்தக்கூடாது என்ற கொள்கையை பவுல் வலியுறுத்துகிறார். எருசலேமின் நியாயஸ்தலம், புறஜாதியான விசுவாசிகளுக்கு கொடுக்கும் போதனைக்கு இது ஒத்ததாய் இருக்கிறது.(அப்போஸ்தலருடைய நடபடிகள் 15:20,29) விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டது என்று தெரிந்த போஜனத்தை, புறஜாதிகள் புசிக்கக்கூடாது. அது யூத விசுவாசிகளை கோபப்படுத்தும்!

எ. வசனம் 31-33 தன்னுடைய விவாதத்தை பவுல் இவ்விதம் முடிக்கிறார், "கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரு விசுவாசியின் சுதந்தரம் மூன்று கருத்துக்களால் கணிக்கப்படுகிறது" அது

1. தேவனுக்கு மகிமையை கொண்டு வருகிறதா?

2. மற்ற விசுவாசிகளைக் கட்டி எழுப்புகிறதா?

3. இரட்சிக்கப்படாதவர்களை, கிறிஸ்துவை இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்படி உற்சாகப்படுத்துகிறதா?

நம் மத்தியில் கிறிஸ்து நடந்தபோது, கிறிஸ்து இந்த மாதிரியை நமக்கு முன் வைத்தார். கிறிஸ்துவின் மாதிரியை தான் பின்பற்றினதாக பவுல் கூறினார். அவர் கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றினதுபோல, எல்லா விசுவாசிகளும் தன்னுடைய மாதிரியை பின்பற்றும்படி அவர் உற்சாகப்படுத்துகிறார் (11:1).

விக்கிரக ஆராதனையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட போஜனமும்

1 கொரிந்தியர் 10:14-11:1

முடிவுரை

1. "விக்கிரகங்களுக்கு விலகி ஓடுங்கள்" தேவனுடைய எரிச்சலை கிளப்பாதீர்கள்.

2. கர்த்தருடைய பந்தி பரிமாறப்படும்போது, அதில் கலந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒன்றாக இணைக்கப்படுவதையும், கர்த்தராகிய இயேசுவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ஐக்கியப்பட்டிருப்பதையும், கர்த்தருடைய பந்தியில் நீங்கள் போஜனம் பண்ணுவதையும் இது காட்டுகிறது.

3. விக்கிரகங்களுக்கு பலிகளைப் படைத்து அதினால் பேய்களோடு பங்கு கொள்ளாதீர்கள்.

4. அறிந்தும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட இறைச்சியையும் மற்ற போஜனங்களையும் போஜனம் பண்ணுவதால், தடுமாறி விழாதீர்கள்; கர்த்தருக்குள் உள்ள ஒரு சகோதரனையாவது, சகோதரியையாவது தடுமாற வைக்காதீர்கள்.

5. நீங்கள் விக்கிரகங்களுக்கு பலிகளைச் செலுத்தி மற்றும் அல்லது பேய்களின் பந்தியிலே போஜனம் பண்ணுவீர்களானால், உங்கள் செய்கைகளுக்காக மனந்திரும்பி, அவர் தமது கோபாக்கினையை உங்கள் மேல் ஊற்றும் முன்னர், கர்த்தரிடத்தில் மன்னிப்பு கேளுங்கள்.

பொது ஆராதனையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்ளுதல்

1 கொரிந்தியர் 11:2-16

முகவுரை

அ. கொரிந்துவிலே சபையை ஸ்தாபித்தபோது, பெண்கள் "பொது ஆராதனையின் போது" முக்காடிட்டுக் கொள்ளவேண்டும் என்பதை சந்தேகமின்றி போதித்திருந்தார். ஆதி சபைகளிலே இந்த போதனையானது ஒரு பாரம்பரியமானது (வசனம் 2) ஆனால், முக்காடிட்டுக் கொள்வதை விட்டொழித்த சில "விடுதலை பெற்ற" கொரிந்திய பெண்கள் சிலர் இருந்தனர். தன்னுடைய எல்லா விவாதத்திலும், இந்த பெண்கள் தங்களை தலை முக்காட்டுகளை போட்டுக்கொள்ளும்படி பவுல் நம்பவைக்க முயற்சி செய்கிறார்.

1. பொது ஆராதனையில் தலையை மூடிக்கொள்ளாமல் ஜெபம் பண்ணுகிற அல்லது தீர்க்கதரிசனம் சொல்லுகிற எந்த ஸ்திரீயும் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள் (11:3-6)

அ. வசனம் 3-4 "தலை" என்ற பதமானது உண்மையில் "ஆதாரம்" அல்லது "பிறப்பிடம்" என்று பொருள்படும். ஆகவே உண்மையில் பவுல் இவ்விதமாய் கூறுகிறார்:

1. ஒவ்வொரு மனிதனின் ஆதாரம் கிறிஸ்துவே. காரணம் அவரே சர்வ சிருஷ்டியின் தோற்றத்தின் காரணரான இயற்கைச் சக்தி (கொரிந்தியர் 1:16).

2. ஸ்திரீயின் ஆதாரம் மனிதன். ஏனென்றால் தேவகுமாரன் என்ற முறையில் கிறிஸ்து, பிதாவாகிய தேவனிடத்திலிருந்து வந்தார் (1கொரிந்தியர் 3:23).

ஆ. வசனம் 4 "ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன்தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்" ஆதி புறஜாதி சபைகளிலே ஒரு புருஷன் தன் தலையை மூடிக்கொள்ளாமல் ஆராதிக்கிறான். தன் தலையை மூடிக்கொண்டு அவன் ஜெபித்தாலோ அல்லது தீர்க்கதரிசனஞ் சொன்னாலோ அவன் தான் இருப்பதற்கு காரணராகிய கிறிஸ்துவிற்கு (தன் தலைக்கு) சரியான கனத்தை கொடுக்க தவறுகிறான்.

இ. வசனம் 5 "ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்". ஆதி புறஜாதி சபைகளிலே தன் தலையை மூடிக்கொள்ளாமல், ஆராதனையில் கலந்துகொள்வது (ஜெபிப்பது அல்லது தீர்க்கதரிசனஞ் சொல்வது) ஒரு ஸ்திரீக்கு கனவீனமாகும். அவள் தன் தலையை மூடிக்கொள்ளாமல் இருந்தால், தான் இருப்பதற்கு காரணராகிய புருஷனுக்கு (தன் தலைக்கு) சரியான கனத்தைக் கொடுக்க தவறுகிறாள்.

ஈ. வசனம் 5-6 "அது அவளுக்கு தலை சிரைக்கப்பட்டது போலிருக்கும்" ஒரு ஆராதனை வேளையில் தன் தலையை மூடிக்கொள்ளாவிட்டால், அவள் தலைமயிர் கத்தரிக்கப்படவேண்டும்! ஒரு ஸ்திரீ தன் தலை மயிரை கத்தரிப்பது எவ்வளவு கனவீனமோ அவ்வளவு கனவீனம் அவள் ஒரு ஆராதனையில் தன் தலையை மூடிக்கொள்ளாமல் இருப்பது. ஏனென்றால் மயிர் கத்தரிக்கப்படுவதினால் அவள் ஆணா பெண்ணா என்று சொல்ல முடியாமல் போய்விடுகிறது!

பொது ஆராதனையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்ளுதல்

1 கொரிந்தியர் 11:2-16

உ. ஆதி சபையிலே ஸ்தாபிக்கப்பட்ட பாரம்பரியங்களை உடைக்கின்ற கொரிந்துவின் ஸ்திரீகள், தங்கள் தலைமுக்காட்டை மறுபடியும் போட்டு, தங்களுக்கும் தாங்கள் இருப்பதற்கு காரணராகிய புருஷனுக்கும் கனவீனத்தைக் கொண்டு வருவதை நிறுத்தவேண்டும்.

ஊ. ஆராதனையின் போது ஸ்திரீகள் தங்கள் தலைகளை மூடிக்கொள்ளுகிற காரியமானது, ஆதி சபையிலே இருந்த கலாச்சாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும் இணைக்கப்பட்டிருந்தது. ஒருவருக்கொருவர் சரியான கனத்தை செலுத்தும் காரியமோ, எல்லா தலைமுறையிலுள்ள சபைக்கும் முக்கியமான ஒரு காரியமாய் இருக்கும். கலாச்சாரத்தாலோ அல்லது பாரம்பரியத்தாலோ, இன்னொரு கிறிஸ்தவனுக்கோ (ஆணோ, அல்லது பெண்ணோ, புருஷனோ அல்லது மனைவியோ) அல்லது பொதுவில் சபைக்கோ கனவீனத்தைக் கொண்டுவருமானால், நாம் அதை செய்வதை நிறுத்தவேண்டும்.

2. பொது ஆராதனையிலே, தன் தலைமேல் ஒரு ஸ்திரீ அதிகாரத்திற்கான அடையாளத்தை கொண்டிருக்க வேண்டும் (11:7-12).

அ. வசனம் 7 "புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை"

ஆராதனை வேளையிலே புருஷர் ஏன் தலையை மூடிக்கொள்ளக்கூடாது என்றும் ஸ்திரீகள் ஏன் மூடிக்கொள்ளவேண்டும் என்பதைக் குறித்தும், பவுல் தொடர்ந்து விளக்குகிறார். மனுஷனை தனது "சாயலின்படியேயும், ரூபத்தின்படியேயும்" (ஆதியாகமம் 1:26-27) தேவன் படைத்ததினால், அவன் தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியையிலே உச்சக்கட்டமாய் இருக்கிறான். தேவன் அவனை "மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டி", மீதி சிருஷ்டியின்மேல் "ஆளுகை செய்கிறவனாக்கினார்" (சங்கீதம் 8:5-8). ஆகவே வேறு எதுவும் செய்வதைப் பார்க்கிலும் மனுஷன் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறான். மனுஷன் தேவனை ஆராதிக்கும்போது, அந்த மகிமையை மூடத்தக்கதாய் அவன் தலையில் எதுவும் இருக்கக்கூடாது.

ஆ. வசனம் 7 "ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்". ஸ்திரீயானவள் மனுஷனிலிருந்து உண்டாக்கப்பட்டபடியால், "அவனுக்கு ஏற்ற துணையாய் இருக்கும்படி" (ஆதியாகமம் 2:18,20) அவனுக்காக உண்டாக்கப்பட்டபடியால், அவள் மனுஷனுடைய மகிமையின் சாயலாய் இருக்கிறாள். ஆராதனையின்போது ஒரு ஸ்திரீ தன் தலைக்கு முக்காடிட்டுக் கொள்வதற்கு இது இன்னொரு காரணமாகும். மனுஷனின் சாயலை வெளிப்படுத்தும் அவள், அவனுக்கு ஏற்ற துணையாயிருப்பதற்கு அது அடையாளமாய் இருக்கிறது.

இ. வசனம் 8-10 ஆராதனையின்போது ஸ்திரீகள் தங்கள் தலைகளுக்கு முக்காடிட்டுக் கொள்ளும்படி பவுல் விரும்புவதின் காரணங்களின் தொகுப்பை இப்பொழுது நமக்கு கொடுக்கிறார்:-

1. "புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல". மனுஷன் ஸ்திரீகளின் தோற்றத்தின் ஆதாரம்.

பொது ஆராதனையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்ளுதல்

1 கொரிந்தியர் 11:2-16

2. "ஸ்திரீ மனுஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டாள்" மனுஷனுக்கு துணையாய் இருக்கும்படி ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டாள்.

3. "தூதர்களினிமித்தம்" இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். (எபிரெயர் 1:14). அவர்கள் எப்பொழுதும் நம்முடனே கூட இருக்கிறார்கள், விசேஷமாக ஆராதனையின்போது (1கொரிந்தியர் 4:9). முக்காடிட்டுக் கொள்ளாத பெண்களின் கேவலமான நடத்தையை அவர்களும் கவனிப்பார்கள் (எண்ணுவார்கள்) (1தீமோத்தேயு 5:21).

ஈ. வசனம் 11-12 "கர்த்தருக்குள்" மனுஷனோ, ஸ்திரீயோ ஒருவருக்கொருவர் கீழானவர்கள் அல்ல என்று பவுல் தெளிவுப்படுத்துகிறார். அவர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கிறார்கள். ஸ்திரீ எப்படி மனுஷனிலிருந்து தோன்றினாளோ, அதேபோல மனுஷர்களும் ஸ்திரீகளுக்கு பிறக்கிறார்கள். உண்மையிலே, மனுஷன், ஸ்திரீ இருவருமே தேவனை தங்கள் ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள்.

உ. தன்னுடைய விவாதங்களின் நடுவில், ஆராதனையிலும் கர்த்தருக்கடுத்த காரியங்களிலும் மனுஷருக்கு, ஸ்திரீகளை பவுல் கீழானவர்களாகச் செய்கிறார் என்று சில மனுஷர் எண்ணக்கூடும். இது காரியமல்ல என்று தெளிவாக்க அவர் விரும்புகிறார். சிருஷ்டிப்பிலே மட்டும் தான் ஸ்திரீகள் ஆண்களுக்கு கீழானவர்கள். வேதம் தெளிவாகச் சொல்லுகிறது, "உங்கள் குமாரரும், குமாரத்திகளும் (இருவரும்) தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்" (யோவேல் 2:28). புறஜாதிகள் மத்தியில் பவுல் ஸ்தாபித்த சபைகளிலே, ஸ்திரீகளும், புருஷர்களும் தலைவர்களாக இருந்தார்கள் (ரோமர் 16:1-3,12ஐ பார்க்கவும்).

3. பொது ஆராதனையிலே தன் தலையை முக்காடிட்டுக் கொள்ளாமல் ஜெபிப்பது ஒரு ஸ்திரீக்கு சரியல்ல (11:13-16)

அ. வசனம் 13 "ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள்". அவர்களுடைய பதில் "இல்லை" என்று இருக்கும் என்று பவுல் தாமே தீர்மானித்துக் கொண்டார். சமுதாய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான நடத்தைக்கான அளவுகோலாக காலத்திற்கு காலம் மாறலாம். பவுல் நாட்களில், ஆராதனை வேளைக்கென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோலானது, ஒரு பெண் முக்காட்டினால் தன் தலையை மூடிக்கொள்வதாகும். பொது ஆராதனையிலே பெண்கள் முக்காடு இல்லாமல் தொடர்ந்து கலந்துக்கொள்வது, ஒருவேளை விசுவாச சமுதாயத்தின் பொது மரியாதையை நாசப்படுத்தக்கூடும்.

ஆ. வசனம் 14-15 சிருஷ்டிக்கப்பட்டவைகளின் சுபாவமே, பொது ஆராதனையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்வதற்கு காரணமாயிருப்பதை, பவுல் இந்த வசனங்களில் காண்பிக்கிறார். காரியங்கள் சிருஷ்டிக்கப்பட்ட விதத்திலிருந்தே நாம் கீழ்க்கண்டவற்றைக் காணலாம்:

பொது ஆராதனையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்ளுதல்

1 கொரிந்தியர் 11:2-16

1. புருஷன் நீளமாக மயிரை வளர்ப்பது அவனுக்கு கனவீனம் ஆகும். ஏனென்றால் அவனுடைய தோற்றத்தை ஒரு ஸ்திரீயினுடையதைப்போல் அது மாற்றுகிறது.

2. ஒரு ஸ்திரீக்கு இருக்கும் நீளமான மயிரோ அவளை மகிமையுடையவளாய் தோற்றமளிக்கச் செய்கிறது.

இ. வசனம் 15 "நீளமான மயிர் அவளுக்கு (ஒரு ஸ்திரீக்கு) முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது". ஸ்திரீகளின் மயிர் புருஷனின் மயிரை விட நீளமாயிருக்கிறது. இதன் மூலமாக, சிருஷ்டிக்கப்பட்டவைகளின் சுபாவமே, ஒரு ஸ்திரீ தன் தலைக்கு முக்காடிட்டுக் கொள்ளவேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

ஈ. வசனம் 16 "எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லை" வார்த்தைகளில் யுத்தம் செய்து, விசுவாசிகளுக்கு மத்தியில் சர்ச்சைகளை உண்டுபண்ணுவோருக்கும்; ஆராதனை வேளையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக்கொள்ள தேவையில்லை என்று விவாதிப்போருக்கும், பவுல் இவ்விதம் கூறுகிறார்.

1. ஆராதனைகளின் போது ஒரு ஸ்திரீ தன் தலையை முக்காடிட்டுக் கொள்வதைத் தவிர வேறு ஒரு பழக்கத்தை நாங்கள் (பவுலும் அவனுடைய உடன் ஊழியரும்) அங்கீகரிப்பதில்லை.

2. சபைகளும் அவ்விதம் அங்கீகரிப்பதில்லை (இது எருசலேம் சபையையும், புறஜாதிகள் நடுவே பவுலும் அவன் சிநேகிதரும் ஸ்தாபித்த மற்ற சபைகளையும் குறிக்கலாம்)

உ. அநேக சபைகள் சில நல்ல காரணங்களுக்காக, உடைகள் மற்றும் நடைமுறைக்கான விதிகளை கடைபிடிக்கின்றன. அவிசுவாசிகளுக்கு வேதனை உண்டாக்கவும் அவர்கள் விரும்பவில்லை. நல்நடத்தைக்கு புறம்பானதாகவோ, தீமையாய் காணப்படுகின்றனவாகவோ இருக்கிற காரியங்களை அவர்கள் செய்யவும் விரும்பவில்லை. ஆகவே நீங்கள் சேருகின்ற சபை குழுவானது, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு சம்பந்தப்பட்ட பழக்கவழக்கங்களை உடையதாய் இருக்குமாயின், அவைகளை உங்களுக்கு சொந்தமானதாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஊ. எந்த தனிப்பட்ட சபையோ அல்லது சபைக்குள்ளான குழுவோ தங்களுக்கு தாங்களே ஒரு நீதியாக முடியாது. தாங்கள் பங்குள்ளவர்களாயிருக்கிற சபைகளின் நடத்தைக்கான முறைகளுக்கு அவர்கள் ஒத்திருக்கவேண்டும். இது சாத்தியமில்லாதிருக்குமானால், பிரிவினைகளையும், சர்ச்சைகளையும் உண்டு பண்ணுவதற்கு பதிலாக, அதை விட்டு கடந்துப்போய், ஒத்துவருகிற வேறொரு குழுவோடு அவர்கள் ஆராதிக்க வேண்டும்.

முடிவுரை

அ. சபையின் வரலாற்றிலே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான, குறிப்பிட்ட கலாச்சாரத்திற்கான ஒரு சட்டமாக கொரிந்து சபையிலே ஸ்திரீகள் ஆராதனை வேளைகளில் முக்காடிட்டுக் கொள்ளும் பிரச்சனை கருதப்படவேண்டும்.

பொது ஆராதனையில் ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்ளுதல்

1 கொரிந்தியர் 11:2-16

காலவரையறையற்ற, பொதுவான கொள்கையாக இந்த சட்டத்தை வைப்பது சற்று அநியாயமாய் இருக்கும்.

ஆ. ஸ்திரீகள், ஜனங்கள் நடுவே காணப்படும்போதும், பொது ஆராதனையில் கலந்துகொள்ளும்போது முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிற கலாச்சாரங்களும், சபைகளும் உலகத்தில் இன்றும் உண்டு. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிக்கு அவர்கள் ஒத்துப்போக வேண்டும். மாறாக, ஸ்திரீகள், ஜனங்கள் மத்தியிலும், பொது ஆராதனையின் போதும், முக்காடிட்டுக் கொள்வது முட்டாள்தனம் என்று நினைக்கிற கலாச்சாரங்களும், சபைகளும் உண்டு. இது காரியமாயிருக்குமானால், பவுலின் நியதி பொருந்தாது.

இ. ஆனால், தன் தலைக்கு முக்காடிட்டுக் கொள்வது சரியென்று ஒரு ஸ்திரீ நினைப்பாளானால், சபையின் கலாச்சாரத்திற்கோ, பாரம்பரியத்திற்கோ அதற்கு முரணாக ஒன்றும் இல்லையானால், அதை செய்யுங்கள்! முக்கியமான காரியம் என்னவென்றால், ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கு முன்பாக சுத்த மனச்சாட்சியை கொண்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும் சரியானமுறை

1 கொரிந்தியர் 11:17-32

முகவுரை

அ. 1கொரிந்தியர் 11-ஆம் அதிகாரத்தில், ஆராதனை வேளைக்கான சரியான நடத்தையைக் குறித்து பவுல் கலந்தாலோசிக்கிறார். முதலாவதாக, ஆராதனை வேளையிலே கடைப்பிடிக்கவேண்டிய புருஷர்களுக்கும் மனைவிகளுக்குமிடையேயான சரியான சரியான ஒரு உறவு உண்டு என்று அவர் சொல்லுகிறார். அதன் பிறகு கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கவேண்டிய சரியான முறையைக் குறித்து தனது கலந்தாலோசனையை தொடங்குகிறார். இதுவும் ஆராதனையின் ஒரு பகுதியே. அநேக வேத பண்டிதர்கள், 1கொரிந்தியரானது எந்த சுவிசேஷமும் எழுதப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்டது என நினைக்கின்றனர். இது உண்மையாய் இருக்குமானால், கர்த்தருடைய பந்தி நிறுவப்பட்டதின் முதல் விளக்கமாக இது நமக்கு இருக்கிறது.

1. கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போது, கிறிஸ்தவர்கள் பிரிவினைகளைத் தவிர்க்க வேண்டும். (11:17-22).

அ. வசனம் 18,20-21. கொரிந்து விசுவாசிகள் உண்மையில் ஒரு முழு போஜனத்தை (அன்பின் விருந்து) கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுமுன் சாப்பிட்டனர் (அப்போஸ்தலர் 20:7, 2பேதுரு 2:13, யூதா 12). ஆரம்பத்தில் கர்த்தர் இவ்விதம் தான் செய்தார். (லூக்கா22:20).

ஆனால் பணக்கார கொரிந்து விசுவாசிகளின் சமுதாய கூட்டமானது. அதிர்ஷ்டம் குறைந்தவர்கள் வருமுன் சீக்கிரம் வந்து, நன்றாக புசித்து, குடித்துவிடுவார்கள். நிச்சயமாக அடிமைகள் காலதாமதமாகத்தான் வருவார்கள். ஆகவே அவர்களுக்கு புசிக்கவோ, குடிக்கவோ ஒன்றும் மீதமிருக்காது. இது கர்த்தருடைய பந்தியின் நோக்கத்தைக் கெடுத்து, சபையில் பிரிவினைகளையும், சர்ச்சைகளையும் உண்டு பண்ணிக்கொண்டிருந்தது.

ஆ. 1கொரிந்தியர் 1:10-17-இல் பவுல் சொல்வதிலிருந்து, சபையிலே ஏற்கனவே பிரிவினைகள் இருந்தது போல தோன்றுகிறது. சபையிலே ஒரு பிரிவு பவுலையும், இன்னொன்று அப்பொல்லோவையும், இன்னொன்று பேதுருவையும், இன்னுமொன்று தாங்கள் கிறிஸ்துவின் சீஷர்களென்றும் சொல்லிக்கொண்டிருந்தனர்.

இ. சபையிலே பிரிவுகள் உண்டாவதின் காரணங்கள் என்ன? அநேக பிரிவுகள் ஒரு தனிப்பட்ட நபர் அல்லது நபர்களின் குழு ஆகியோரின் பெருமையாலும், அகங்காரத்தாலும் ஏற்படுகின்றன! கொரிந்துவிலே, கர்த்தரின் பந்தியின் சமயத்திலே உண்டான பிரிவுகள் சொத்துக்கள், மற்றும் சமுதாய அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் இருந்தது!.

ஈ. பிரிவுகளை நாம் எவ்வாறு தவிர்க்கலாம், நாம் ஒரே சரீரத்தின் அங்கமென்றும், ஒவ்வொரு அங்கத்திற்கு ஒவ்வொரு வேலையும், சரீரத்தில் ஒரு இடமும் உண்டு என்பதை உணர்வதின் மூலம். (1கொரிந்தியர் 12:14-27; முக்கியமாக வசனம் 24-25) ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் சரீரத்தில் சம மதிப்பும், சம முக்கியத்துவமும் உடையவராய் இருக்கின்றார். அவர்களது சொத்தையோ அல்லது சமுதாய அந்தஸ்த்தையோ பொருத்து அல்ல!.

கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும் சரியானமுறை

1 கொரிந்தியர் 11:17-32

உ. உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகள் ஒரு சரீரமாய் ஒரு அளவாய் இருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் ஒருவரையொருவர் தாங்கி, விசுவாசிகளின் சரீரத்தை ஒன்றாக பிடித்திருக்கிறார்கள் தன்னுடைய பங்கை இந்த சரீரத்தில் செய்வதின் மூலம் ஒவ்வொரு நபரும் வளர்ந்து, தனது விசுவாசத்தில் கட்டப்படுகிறான். (எபேசியர் 4:15-16). எல்லா தோற்றத்தின்படியேயும், இது கொரிந்து சபையிலே குறைவுபட்டது, உலகிலுள்ள அநேக சபைகளிலே இது குறைவுப்படுகிறது!.

2. கர்த்தரின் பந்தியில் பங்குபெறும் போது, கிறிஸ்தவர்கள் இயேசுவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவுகூர வேண்டும் (11:23-27).

அ. வசனம் 23. "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்". கர்த்தரின் பந்தியைக் குறித்த இந்த செய்தியை, இயேசுவினிடத்தில் கேட்ட மற்றவர்களிடமிருந்து ஒரு வேளை பவுல் பெற்றிருக்கக்கூடும். இந்த செய்தியை அவர் கொரிந்து சபைக்கு தெரியப்படுத்தினார். இதை நேரடியாக கர்த்தரிடமிருந்து பவுல் பெற்றிருக்கவும் சாத்தியமுண்டு. (கலாத்தியர் 1:12; 2:2-ஐ பார்க்கவும்).

ஆனாலும், பவுலின் வார்த்தைகளுக்கும் கடைசி இராப்போஜனத்தில் பேசப்பட்டதாக பதிவு செய்யப்பட்ட வார்த்தைகளுக்கும் நெருங்கிய ஒருமைப்பாடு இருக்கிறது (லூக்கா 22:17-20, மத்தேயு 26:26-29, மாற்கு 14:22-25 ஆகியவற்றையும் பார்க்கவும்.

ஆ. வசனம் 24-25. "ஸ்தோத்திரம் பண்ணி". போஜனத்தின் சமயங்களிலே ஸ்தோத்திரம் பண்ணுவது ஒரு யூத பழக்கம். "நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் ஆண்டவரே" என்று சொல்லி ஸ்தோத்திரம் செலுத்துவார்கள். அதன் பிறகு தாங்கள் எந்த காரியங்களுக்காக நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். இதைத்தான் இயேசு கடைசி இராப்போஜனத்தில் செய்தார். இன்றும் கூட போஜன சமயத்தில் ஸ்தோத்திரம் செலுத்துவதை அநேக கிறிஸ்தவர்கள் பழக்கபடுத்தியிருக்கிறார்கள்.

இ. இயேசுவினிடத்தில் கர்த்தரின் பந்தியைக் குறித்து தான் பெற்றுக்கொண்ட செய்திகளை ஸ்தோத்திரம்பண்ணி, கூறுகிறார்.

1. இயேசு அப்பத்தைக் பிட்டு, "இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். பிட்கப்பட்ட அப்பமானது, நம்முடைய பாவங்களுக்காகக் கொடுக்கப்பட்ட இயேசுவின் சரீரத்தின் அடையாளமாயிருக்கிறது.

2. இயேசு தொடர்ந்து கூறினார், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" கர்த்தரின் பந்தி ஒரு ஞாபகார்த்த பந்தியாகும். ஒவ்வொரு முறை நாம் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறும்போது கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை நினைவு கூரவேண்டும். "இதை செய்யுங்கள்" என்றால் "இதை செய்துக் கொண்டே இருங்கள்" என்று அர்த்தமாகும்.

கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும் சரியானமுறை

1 கொரிந்தியர் 11:17-32

சபையின் இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலில், இயேசு மீண்டும் வரும்வரைக்கும், இதை தொடர்ந்து நாம் செய்யவேண்டும். நாம் எத்தனை முறை கர்த்தரின் பந்தியைக் கடைபிடிக்கவேண்டும். என்று வேதம் சொல்லுகிறதில்லை. ஆனால், இயேசு மீண்டும் வரும் வரைக்கும் தொடர்ந்து அதை செய்ய வேண்டும் என்று மட்டும் கூறுகிறது. (வசனம் 26ஐயும் பார்க்கவும்).

ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கக்கூடாது

1கொரிந்தியர் 12:1-20, 27-29.

முகவுரை

அ. கொரிந்துவிலிருந்து தான் பெற்ற கடிதத்திலிருந்த கேள்விகளுக்கு பதிலாக பவுல் 1கொரிந்தியரின் பகுதிகளை எழுதினார். அவருடைய முகவுரையைக் கவனியுங்கள். "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து..." இந்த கடிதத்தில் வேறு காரியங்களையும் இதே தொடரோடு அறிமுகப்படுத்துகிறார். 1கொரிந்தியர் 7:1, விவாகம், 8:1, விக்கிரங்களுக்கு படைக்கப்பட்ட போஜனம், 16:1எருசலேமிலுள்ள தேவனுடைய ஜனங்களுக்காக சேர்க்கப்படும் தர்மப்பணம். கடிதத்தை எழுதும்போது, எபேசுவில் பவுல் மூன்று ஆண்டு தங்கியிருந்ததின் முடிவுக்கு சமீபமாகிக் கொண்டிருந்தார். (16:8-ஐபார்க்கவும்).

ஆ. 1கொரிந்தியர் 12-14 அதிகாரங்கள் இவைகளின் விவாதமாகும்.

1. பரிசுத்த ஆவியின் வரங்கள்.

2. அவைகள் எப்படி பயன்படுத்தப்படவேண்டும் (அன்பினால்).

3. ஆராதனை வேளையில் அவைகள் வெளிப்படுவதிற்கடுத்த விதிமுறைகள். ஆதி சபையின் ஆராதனை வேளையின் ஒரு முக்கியமான பங்காய் ஆவிக்குரிய வரங்களின் வெளிப்பாடு இருந்தது என்பதை இந்த விளக்கமான போதனை கூறுகிறது.

விவாகம், விவாகரத்து, உயிர்த்தெழுதல், பிரிவினைகள் பாலுணர்வில் ஒழுக்கமில்லை, கர்த்தரின் பந்தி ஆவியவை ஆவிக்குரிய வரங்களுக்கு சம்பந்தப்பட்ட போதனைகளில் மூன்றில் ஒரு பங்கு நீளமானவை மட்டுமே.

1. ஆவிக்குரிய வரங்களின் வெளிப்பாட்டை கிறிஸ்தவர்கள் நிதானித்து அறியவேண்டும் (12:1-3).

அ. வசனம் 1. "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" கொரிந்தியர்கள் முற்றிலுமாய் வரங்களைக் குறித்து அறியாமலிருந்தார்கள்என்று அர்த்தப்பட்ட பவுல் கூறவில்லை. அவர்கள் ஏற்கனவே ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த வெளிப்பாடுகள் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாகவும், பரிசுத்த ஆவியினிடத்திலிருந்து வந்தவைகளுமாகும். பவுலிடம் கொரிந்தியர்களில் கேள்வியானது, "பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டுக்கும்,பிசாசின் வெளிப்பாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நாங்கள் எப்படி அறிவது" என்பதே, இந்த வசனத்தில் பவுல் இதைக் குறித்துத்தான் பேசுகிறார்.

ஆ. வசனம்2. கிறிஸ்தவர்களாகுமுன் கொரிந்தியர்கள் புறஜாதிகளாயிருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல என்று இது சாதாரணமாக பொருள்படுகிறது. அவர்கள் "சோரம் போனார்கள்" என்று வேதம் சொல்லும்போது, ஊமையான (பேசமுடியாத) விக்கிரகங்களைப் பின்பற்ற அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டார்கள் என்று அர்த்தமாகும் தங்களுடைய விக்கிரக ஆராதனையைக் குறித்து எதுவும் செய்யமுடியாத உதவியற்ற,பெலனற்ற,ஆக்கினைக்குள்ளாகதீர்க்கப்பட்ட கைதிகளைப்போல இருந்தார்கள். ஏனென்றால்பேய்கள் அதைச் செய்யும்படி அவர்களை பலவந்தப்படுத்திக் கொண்டிருந்தன (1கொரிந்தியர்10:20-21ஐ பார்க்கவும்). பேய்களை ஆராதித்த அநேக புறஜாதிகள், அவைகளின் ஆளுகைக்குள்ளாகி, கட்டுக்கடங்காத உணர்ச்சி வசப்பட்டவைகளை பேசுவார்கள்.

ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கக்கூடாது

1கொரிந்தியர் 12:1-20, 27-29.

இ. வசனம் 3. இதன் காரணமாக, பரிசுத்த ஆவியின் ஆளுகையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களை வெளிப்படுத்தும் நபர்களுக்கும், பிசாசின் ஆளுகையில் வெளிப்படுத்தும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கொரிந்தியர்கள் அறிந்துக்கொள்ளவேண்டும் என்று பவுல் கரிசனைஉள்ளவராயிருக்கிறார். ஆகவே அவர் கூறுகிறார்.

1. "தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் (ஒரு ஆவிக்குரிய வரத்தை வெளிப்படுத்துகிறவன்) இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லப்பட்டான்".

2. "இயேசுவே ஆண்டவர்" என்று பரிசுத்த ஆவியினாலேயன்றி ஒருவனும் சொல்ல முடியாது.

இயேசுவை தன் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளகிறவனுடைய ஆவியானது. தேவனுடைய ஆவியினாலே இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலே மாறியிருக்கிறது. (மறுபடியும் பிறந்திருக்கிறது). அந்த நபருக்குள் பரிசுத்த ஆவியானவர் தங்குகிறார். இது நடக்கும்போது "இயேசுவே ஆண்டவர்" என்று அந்த விசவாசியால் சொல்ல முடிகிறது. "இயேசு சபிக்கப்பட்டவர்" என்று மறுபடியும் பிறந்தப்பிறகு அவன் சொல்லவே மாட்டான். இதன் மூலமாக ஒருவன் தேவனுடைய ஆவியினாலே பேசுகிறானா அல்லது பேய்களின் ஆவியினாலே பேசுகிறானா என்று உங்களால் சொல்ல முடியும்.

ஈ. இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்படுகளை இவ்விதமும் சோதித்துப்பார்க்கலாம்.

1. ஆவிகளைக் பகுத்தறியும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரம் (1கொரிந்தியர் 12:10).

ஆராதனையில் இருக்கும் ஒரு விசுவாசியிடம் பரிசுத்த ஆவியானவர் பேசி, ஆவிக்குரிய வரத்தின்இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடானது பரிசுத்த ஆவியினால் உண்டானதா அல்ல பிசாசினால் உண்டானதா என்று அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

2. ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஈவை வெளிப்படுத்தும் ஒரு நபரின் சன்மார்க்க குணாதிசயம். இயேசு சொல்லுகிறார் "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத்தேயு 15-16).

3. தனிப்பட்ட நபரின் வேத சம்பந்தமான அறிக்கைகள். இயேசு ஆண்டவர் என்றும், அவர் எப்போதுமே இருந்தார் என்றும் சொல்கிறாரா; பரலோகிலிருந்து மாம்சத்தில் பூமிக்கு வந்தார்கள் என்றும்; (1யோவான் 4:1-6; பாடுபட்டு, மனுகுலத்தின் பாவத்திற்காக தன் இரத்தத்தைச் சிந்தினார் என்றும்; அடக்கம்பண்ணப்பட்டு, மரித்தோரிலிருந்து மூன்றாம் நாளில் எழுந்தார் என்றும் சொல்கிறாரா? (லூக்கா24:27).

உ. ஊமையான விக்கிரகங்களால் பெரும்பாலான மக்கள் வழி விலக செய்யப்படும் அநேக நாடுகள் உலகில் உண்டு. அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, உண்மையில் அவர்கள் பேய்களை ஆராதிக்கிறார்கள் ஆகவே, அவர்களில் சிலர் பேய்களால் பீடிக்கப்பட்டு, அல்லது அவர்களின் ஆளுகைக்குள்ளாக, உணர்ச்சி வசப்பட்ட பேச்சுகளை வெளிப்படுத்தும் அளவிற்கு பாதிக்கப்படுகிறார்கள். ஆவிக்குரிய வரங்கள் தேவனுடைய ஆவியினால் வெளிப்படுத்தப்படுகிறதா அல்லது பேய்களின் ஆவியினால் வெளிப்படுத்தப்படுகிறதா என்று அறிந்துக் கொள்வதற்கு ஓர் சுலபமான வழியைத் தருகிறார்.

ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கக்கூடாது

1கொரிந்தியர் 12:1-20, 27-29.

2. ஆவிக்குரிய வரங்களின் வெளிப்பாட்டில் ஐக்கியம் உண்டு. (12:4-20,27).

அ. வசனம் 4-6. விசுவாசிகள் மூலமாய் வெளிப்படும், வித்தியாசமான வரங்கள், வித்தியாசமான ஊழிங்கள் மற்றும் வித்தியாசமான கிரியைகள் உண்டு என்று பவுல் கூறுகிறார். பரிசுத்த ஆவியின் பல விதமான வெளிப்பாடுகள் உண்டு.

ஆ. ஆகிலும் அது ஒரே ஆவிதான்இ ஒரே கர்த்தர் தான் வேறுபட்ட ஆவிக்குரிய வெளிப்பாடுகள் தான். ஆனால் எல்லா வெளிப்பாடுகளிலும் கிரியை செய்கிற ஒரே தேவன்தான். ஆவிக்குரிய வரங்களின் வெளிப்பாட்டில் ஐக்கியப்படுத்தும் காரணர்.

இ. "ஈவுகள்" என்ற பதத்திற்கு இரு பையின் வரங்கள் இலவசமாய், கிருபையாய் கொடுக்கப்பட்ட வரங்கள்; தகுதியின்றி பெற்ற தேவ தயவு என்று பொருள். "ஊழியம்" என்ற பதமானது மேஜை உழியம் போன்று கிறிஸ்தவ சமுதாயத்திற்கு செய்யப்படும் ஒரு மூப்பனுடைய வேலைக்கும் பயன்படுத்தப்படுகிறது. (உதவிக்காரர்- பிலிப்பியர் 1:1), "கிரியை" என்ற பதமானது கிரியை செய்துக் கொண்டிருக்கிற (தேவ) வல்லமை என்று அர்த்தம்.

ஈ. ஆகவே ஆவிக்குரிய வரங்கள்: 1 தகுதியின்றி பெற்ற தேவ தயவு 2) விசுவாசிகள் மூலமாய் இயற்கைக்கு அப்பாற்பட்டவிதத்தில் கிரியை செய்பவை

3) கிறிஸ்தவ சமுதாயத்தில் உள்ள மற்ற விசுவாசிகளுக்கு உதவி செய்ய உதவுபவை என்பதாகும். ஆகவே தான் "ஆவியினுடைய அநுக்கிரகம்அவனவனுடையபிரயோஜனத்திற்கென் றுஅளிக்கப்பட்டிருக்கிறது(எல்லா விசுவாசிகளுக்கும் (1 கொரிந்தியர் 12:7)

உ. வசனம் 8-11 விசுவாசிகள் மூலமாய் வெளிப்படும் எல்லா ஆவிக்குரிய வரங்களும் ஒரே பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படுகின்ற அவைகள் ஆவியின் மூலமாய்... அதே ஆவியின் வாயிலாய்...அதே ஆவியினால்.. அந்த ஒரே ஆவியினால்..." இவைகளை எல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்." ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டில் பரிசுத்த ஆவிதான் ஐக்கியப்படுத்தும் காரணர். தனது வரங்களை எந்த நபர்கள் மூலமாய் வெளிப்படுத்த வேண்டும் என்று அவரே தீர்மானிக்கிறார்.

ஊ. வசனம் 12-20,27 ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் ஐக்கிய காரணராக இருப்பதை, மனுஷ சரீரத்தையும் கிறிஸ்துவின் சரீரத்தையும் (எல்லா விசுவாசிகள்) பயன்படுத்தி விளக்குகிறார்.

1. "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது." (வசனம் 12)

2. "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாக தாகந் தீர்க்கப்பட்டோம்" (வசனம் 13).

3. "அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே" (வசனம் 20).

ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கக்கூடாது

1கொரிந்தியர் 12:1-20, 27-29.

4. "நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாயிருக்கிறோம். சரீரமோ ஒன்றாயிருக்கிறது. (வசனம் 27). அதே விதமாக அநேக ஆவியின் வரங்களுண்டு, ஆனால் ஒரே பரிசுத்த ஆவியானவர் அவைகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்துகிறார்!

3. ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டில், வித்தியாசங்கள் உண்டு (8-10, 28-29)

அ. ஆவியின் வரங்களை வெளிப்படுத்தும் வேத பகுதிகள் இவைகள் மட்டுமல்ல. அவைகள் ரோமர் 12:6-8 மற்றும் எபேசியர் 4:11 ஆகியவற்றிலும் கூட சொல்லப்பட்டிருக்கின்றன. இரண்டாம் முறை சொல்லப்பட்டவைகளை தவிர்ப்போமானால், மொத்தம் ஆவியின் வரங்கள் 20 இருக்கும். சபையில் அவைகளுக்கு உண்டான நோக்கத்தின் அடிப்படையில், அந்த வரங்கள் எளிமையான விளக்கத்தோடு கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1. சபைகள் ஸ்தாபித்து, விசுவாசிகளின் முதிர்ச்சிக்கான வரங்கள்.

அப்போஸ்தலர்: சபை கட்டப்படும் விசேஷித்த பணியில் அனுப்பட்டவன் இவன் தூதனும்,கிறிஸ்துவின்தனிப்பட்டபிரதிநிதியானவன்.

தீர்க்கதரிசி: தேவ செய்தியை தேவ ஜனங்களிடம் பேசுவான். பரிசுத்த ஆவியினால் பேசும்படி தீர்க்கதரிசியானவன் ஏவப்படும்போது செய்தி கொடுக்கப்படுகிறது. செய்தியானது நிகழ்காலத்தைபோ, எதிர்காலத்தைபோ குறித்ததாக இருக்கலாம்.

சுவிசேஷகர்: நற்செய்தி பறைசாற்றுகிறவன். அவிசுவாசிகளுக்கு சுவிசேஷ செய்தியை பறைசாற்றும்படியாகவும், புதிய சபைகளை ஸ்தாபிப்பதற்கு உதவும்படியாகவும் தேவனால் அனுப்பப்பட்டவன்.

மேய்ப்பர்-போதகர். உள்ளூர் சபை மக்களின் ஆவிக்குரிய தேவைகளை குறித்து கரிசனையுள்ள ஒரு மேய்ப்பர். தேவனுடைய வார்த்தையை தெளிவுப்படுத்தவும், விளக்கவும், உள்ளூர் கூட்ட விசுவாசிகளைக கட்டி எழுப்பவும், திராணி அளிக்கப்பட்டவர்.

2. சபையின் மற்ற தனிப்பட்ட அங்கத்தினாரால் விசுவாசிகளை பரிசுத்தப்படுத்தும்படியான வரங்கள்.

அறிவை உணர்த்தும் வசனம். தேவ ஞானத்தின் வெளிப்பாடு.

ஞானத்தைப் போதிக்கும் வசனம். தேவ அறிவின் அப்பிபாசத்தின் வெளிப்பாடு.

விசுவாசம்: தெய்வீக விசுவாசத்தின் பகிர்ந்து கொள்ளுதல்

சுகமளித்தல்: பரிசுத்த ஆவியினால் தீர்மானிக்கப்பட்டபடியான தெய்வீக சுகம்.

அற்புதமான வல்லமை: மனுஷ மற்றும் இயற்கையின் உலகுக்குள்ளான தெய்வீக நுழைவு.

தீர்க்கதரிசனம்: நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கான தேவனுடைய வார்த்தைகள்.

ஆவிகளைப்பகுத்தறிதல்: இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நல்ல மற்றும் தீய ஆவிகளை வித்தியாசப்படுத்துதல்.

ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கக்கூடாது

1கொரிந்தியர் 12:1-20, 27-29.

அன்னிய பாஷையில் பேசுதல்: ஆவிக்குரிய உண்மையை படிக்காத பாஷைகளில் பேசுதல்.

அன்னிய பாஷையின் வியாக்கியானம்: அன்னிய பாஷையில் பேசப்பட்டவைகளின் அர்த்தத்தை அல்லது சாராம்சத்தை கொடுப்பது.

3. ஊழியம் மற்றும் சந்திப்பு நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரங்கள்: அலுவலக விவகாரங்களை நிர்வகிப்பது மற்றும் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை அளிப்பது.

தலைமைத்துவம்: ஆவிக்குரிய தலைவர்கள் ஆத்துமாக்களுக்காக கரிசனை கொள்ள உதவுவது.

மற்றவர்களுக்கு உதவி செய்வது: மற்றவர்களுடைய பங்கை எடுத்துக் கொள்வது, அவர்கள் உதவிக்கு வருவது.

ஊழியம் செய்வது: பலவிதமான ஆவிக்குரிய ஊழியங்களுக்கு ஆயத்தப்படுத்துவது.

உற்சாகப்படுத்துவது:தேவனுக்காக, உந்துவது, சவால் விடுவது மற்றும் வேண்டுகோள் விடுப்பது.

மற்றவர்களின்தேவைக்கென்று கொடுப்பது: நீங்கள் பெற்றிருப்பதை மற்றவர்களோடு, குறிப்பாக தேவையுள்ளோரோடு பகிர்ந்து கொள்வது.

இரக்கம் காண்பிப்பது: மற்றவர்களுக்கு மனதுருக்கத்தோடு கிருபையினால் உதவுவது.

ஆ. இந்த வேதபகுதிகளிலே, பரிசுத்த ஆவியின் ஒரு சில வரங்களை பவுல் வெறுமனே குறிப்பிடுவதை, நாம் காணலாம். விசுவாசிகள் ஆராதனையின் போது கூடி வருகிறதைக் குறித்து பவுல் பேசும்போது, இதையே செய்கிறார். (1கொரிந்தியர் 26) பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்படக்கூடிய வரங்களின் ஒரு மாதிரியைத் தான் நமக்குத் தருகிறார். வித்தியாசப்பட்டவைகளை அவர் உதாரணமாக பயன்படுத்தியிருக்கக் கூடும்.

இ. சொல்லப்பட்ட ஒவ்வொரு வரமும், ஒருவேளை ஒரு குறிப்பிட்ட வரத்திற்கு பதிலாக, வரங்களின் பிரிவாக இருக்கக் கூடும். பல்வேறு விதமான சுகங்கள், உற்சாகப்படுத்த பல்வேறு வழிகள், அற்புதமான வல்லமை காண்பிக்கப்பட பல்வேறு வழிகள், ஊழியம் செய்ய பல்வேறு வழிகள், மற்றவர்களின் தேவைக்கு கொடுக்க பல்வேறு வழிகள் போன்றவை உள்ளன.

ஈ. ஒவ்வொரு வரமும் பரிசுத்த ஆவியின் வெளிப்படுத்துதலாய் இருக்கிறபடியால், அவை இயற்கைக்கு அப்பாற்பட்டவையாய் இருக்கின்றன. மற்றவர்களின் தேவையை கவனித்து, அதற்கு கொடுக்க முடியும் (யாக்கோபு 15-16) தெய்வீக வெளிப்பாட்டினால் இன்னொரு நபருக்கு ஒரு தேவை இருக்கிறது என்று ஒருவர் அறியும் போதோ அது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய வரத்தின்வெளிப்பாடாய் இருக்கிறது. ஒரு நபருடைய நடவடிக்கையை கவனித்து, அதன் மூலம்இயற்கைக்குஅப்பாற்பட்டவெளிப்படுத்துதல்க ளின் ஆதாரங்களை நாம் வேறுபடுத்தலாம். (மத்தேயு7:16)தெய்வீகவெளிப்படுத்துதனால்ஒருஇய ற்கைக்குஅப்பாற்பட்டவெளிப்பாட்டின்ஆதாரங்களை நாம்அறிந்துக்கொள்வதே, இயற்கைக்குஅப்பாற்பட்ட தாகும்.

உ. எபேசியர் 4:11இல் சொல்லப்பட்ட ஆவிக்குரிய வரங்கள், உண்மையில் இயேசு தமது (உலகளாவிய) சபையில் வைத்த ஆவிக்குரிய தலைவர்கள் தான். அவைசபைக்கு கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய தலைவர்களின் வரங்கள்.

ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்து கிறிஸ்தவர்கள் அறியாமலிருக்கக்கூடாது

1கொரிந்தியர் 12:1-20, 27-29.

அவை "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவுமே". (எபேசியர் 12-13).

ஊ. எத்தனை ஆவிக்குரிய வரங்கள் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரே அவற்றின் ஆதாரம் என்பதை நாம் நினைவு கூர வேண்டும். மனுஷனுடைய மனதிலோ, கற்பனையிலோ அவற்றின் தோற்றமில்லை. மனுஷர்கள் மூலமாய் பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளாய் அவை இருக்கின்றன. அவர் தொடர்பை தொடங்குகிறார்; நாம் கீழ்ப்படிகிறோம். நாம் பேச வேண்டிய வார்த்தைகளை அவர் பேசுகிறார். நாம் எவற்றை அறிந்துக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறரோ, அதை அவர் வெளிப்படுத்துகிறார். நம்மை உந்தித்தள்ளி, செயல்படுவதற்கு வேண்டிய விசுவாசத்தைத் தருகிறார். அப்பொழுது மட்டுமே, நாம் ஆவிக்குரிய வரத்தை வெளிப்படுத்துகிறோம்.

முடிவுரை

அ. ஆவிக்குரிய வரங்களின் வெளிப்பாடானது பரிசுத்த ஆவியினால் உண்டானதா அல்லது அசுத்த ஆவியினால் உண்டானதா என்று கிறிஸ்தவர்கள் நிதானிக்கவேண்டும். வேதத்தின் மூலமாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சில செயல்முறை சார்ந்த மற்றும் மதம் சார்ந்த சோதனைகளின்மூலம், அவர்கள் இதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

பரிசுத்த ஆவியின் ஒரு வரத்தின் மூலமாகவும் இந்த உறுதிப்பாட்டை பெறலாம். பலவிதமான ஆவிக்குரிய வரங்கள் இருந்தாலும் அவை யார் மூலம், எப்பொழுது வெளிப்படுத்தப்படவேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் தீர்மானிக்கிறரோ அந்த ஒரே ஆவியானவர்மூலம் அவை வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆ. ஆவியின் வரங்களின் வெளிப்பாடானது ஒவ்வொரு ஆராதனையின் பகுதியாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்பட்ட விசுவாசிகள் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தேவன் தமது ஜனங்களின் மத்தியில் செய்துகொண்டிருக்கிற காரியங்களின் பகுதியாக இருக்க விரும்புபவர்கள் ஆகியோரின் மத்தியில் அவை வெளிப்படும் (அப்போஸ்தலர் 2:1-4). அவைகள் இல்லாமலே நம்மால் கிறிஸ்தவர்களாய் இருக்கவும் முடியும், அவைகள் இல்லாத சபையையும் கொண்டிருக்க முடியும். ஆனால் அவைகள் நம்முடைய ஆராதனைகளில் இல்லாத பட்சத்தில், இயேசு, தம்முடைய ஜனங்களுக்காகவும், சபைக்காகவும் வைத்திருக்கும் அநேகவற்றை நாம் இழந்து விடுவோம்.

இ. பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டிற்காக காத்திருக்க இது ஒரு நல்ல நேரமாயிருக்கும். விசுவாசிகள் தேவனைத் தேடுவதற்கும், ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டில் பங்கடையும்படி தங்களுக்குள்ள விருப்பத்தைத் தெரிவிப்பதற்கும் கூட இது நல்ல நேரமாயிருக்கும்.

அன்பும், ஆவியின் வரங்களின் வெளிப்பாடும்

1 கொரிந்தியர் 13:1-3

முகவுரை

அ. 1கொரிந்தியர் 12-14 ஆனது, ஆவியின் வரங்களைக் குறித்த கலந்தாலோசனையாகும்.ஆவியின் வரங்களைக் குறித்து தமது ஜனங்கள் அறியாதிருக்க தேவன் விரும்பவில்லை. நம்முடைய ஆராதனைகளிலே ஆவியின் வரங்கள் பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்படுகின்றன. மற்ற விசுவாசிகள் பெலனடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதலடையும்படியாக அவர் இந்த வரங்களை விசுவாசிகள் மூலம் வெளிப்படுத்துகிறார். நம்முடைய கூட்டங்களுக்கு வருகிற அவிசுவாசிகள் இரட்சிக்கப்படும்படியாகவும் சில வரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆகவே ஆராதனைகளிலே ஆவியின் வரங்களை வெளிப்படுத்த விரும்புகிற ஒரு நபர் இவைகளை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அன்பும் மற்றவர்களைக் குறித்த கரிசனையுமே அவனது நோக்கமாக இருக்கட்டும்.

1. அன்பும் ஆவியின் வரங்களும் (13:1-3).

அ. 1கொரிந்தியர் 12:13-இல் பவுல் "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று கூறுகிறார். அவர் சொல்லுகிறதின் அர்த்தம், "ஆவிக்குரிய வரங்களை அப்பியாசப்படுத்த மிகச் சிறந்த வழியை நான் உங்களுக்கு விளக்கப்போகிறேன். "நீங்கள் ஒரு ஆவியின் வரத்தை வெளிப்படுத்தும், மற்றவர்கள் உதவி செய்யப்படுவதைப் பார்க்க நீங்கள் விரும்பவேண்டும்.

மற்ற விசுவாசிகள், பெலனடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதலடைவதை பார்க்க உங்களுக்கு வாஞ்சை இருக்கவேண்டும். அவிசுவாசிகள் இரட்சிக்கப்படுவதை பார்க்கவும் உங்களுக்கு வாஞ்சை இருக்கவேண்டும்.

ஆ. வசனம் 1-3 அன்போடுகூடிய ஆவியின் வரங்களுக்கும், அன்பற்ற ஆவியின் வரங்களுக்கும் உள்ள வேறுபாட்டை பவுல் நமக்கு காண்பிக்கிறார். ஆவியின் வரங்களுக்கு மதிப்பில்லையென்றோ, ஆவியின் வரங்களை விட அன்பு மேலானதென்றோ அவர் சொல்லவில்லை. அவர் சொல்வதெல்லாம், "அன்பு இல்லாத பட்சத்தில், மிகச் சிறந்த வரமும் தனது செயல்பாட்டையும் மதிப்பையும் இழந்துவிடும்", என்பதே.

இ. இந்த உண்மையை வெளிப்படுத்த, ஆவிக்குரிய ஊழியத்தின் ஆறு உதாரணங்களை பவுல் பயன்படுத்துகிறார்.

1. பாஷைகளை பேசும் வரம். அன்பு இல்லாவிட்டால், இந்த வரமானது சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருக்கும். அது கவனத்தை ஈர்க்கும்.ஆனால் இசையின் கூட்டிற்கு ஒன்றும் ஈயாது, கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்திற்கு ஈயாது.

2. தீர்க்கதரிசன வரங்களும் அறிவை உணர்த்தும் வசனமும் (எல்லா இரகசியங்களையும் அறிந்துக்கொள்வது), விசுவாச வரமும் (ஒவ்வொரு மலையாக அசைப்பது): அன்பில்லாவிட்டால், இந்த வரங்களில் பயன்படும் நபர் ஒன்றுமில்லை. கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அவர் பங்கும் ஒன்றுமில்லை. அவருடைய ஆவியின் வரங்களுக்காக, ஜனங்கள் எவ்வளவு தான் அவரை மெச்சிக்கொண்டாலும், அவர் ஒன்றுமில்லை.

அன்பும், ஆவியின் வரங்களின் வெளிப்பாடும்

1 கொரிந்தியர் 13:1-3

3. பணத்தையும், தனிப்பட்ட உடமைகளையும், சுவிசேஷ வேலைக்காக தியாகம் செய்யுங்கள், இரத்தசாட்சியாய் சரீரத்தை சுட்டெரிக்கப்படும்படியாக அர்ப்பணியுங்கள். அன்பு இல்லாவிட்டால், இந்த நபர்கள் தங்களுக்கென்று உண்மையில் ஒன்றையும் ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறதில்லை. அவர்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன் நிற்கும்போது, அவர்களுடைய கிரியைகள்எல்லாம்,மரம்புல்மற்றும்வைக்கோலாகமாறும்.அவர்கள்செய்தவற்றிற்குப்பலனைப்பெறமாட்டார்கள் (1கொரிந்தியர் 3:12).

ஈ. அநேக முறை, கிறிஸ்தவர்கள் ஆவியின் வரங்களை வெளிப்படுத்த முதன் முதலாக நினைக்கும்போது, சபையிலுள்ள மற்றவர்களால் “ஆவிக்குரியவன்” என்று பார்க்கும்படியான நோக்கமே அவர்களது விருப்பமாயிருக்கிறது. ஆனால் தேவைகளுள்ள திரளான ஜனங்களையும், அந்த தேவைகள் சந்திக்கப்பட ஒரு வழியும் இல்லாததையும் அவர்கள் பார்க்கும் போதோ, ஒரு மாற்றம் உண்டாகிறது. அவர்கள் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதை உணர்கிறார்கள். மேலும்,அநேகர்,விக்கிரகங்களைவழிபடுகிறவர்களாகவும், பிசாசின் ஆளுகை மற்றும் ஆதிக்கத்திற்குள்ளாகவும் இருக்கிறார்கள். இந்த ஜனங்கள் விடுவிக்கப்படவேண்டிய அவசியத்தையும் அவர்கள் உணருகிறார்கள். சபையிலுள்ள மற்றவர்களால் “ஆவிக்குரியவன்” என்று பார்க்கப்பட உள்ள அவர்களது விருப்பமானது, அன்பு மற்றும்மற்றவர்களைக்குறித்த சரிசனையாக மாறிவிடுகிறது. ஆவியின் வரங்களை வெளிப்படுத்த உள்ள அவர்களது விருப்பத்தின் பின்னால், அன்பே அவர்களது நோக்கமாகிறது.

2. அன்பின் வழி (13:4-8அ)

அ. வசனம் 4 “அன்பு” என்ற பதமானது, மற்றவர்களின் நலனைக் குறித்த தன்னலமற்ற அக்கறை என்று பொருள்படும். தன்னுடைய ஒரே பேரான குமாரனை நிந்தையின் சிலுவையிலே பலியாகக் கொடுத்த மனுஷவர்க்கத்தின் மேலுள்ள தேவனுடைய அன்பைப்போன்றது அது. (யோவான் 3:16). மற்றவர்கள் உங்களுக்கு தங்கள் அன்பை காண்பிக்காவிட்டாலும் “அதிகமாக நேசிப்பது” தான் அதன் அர்த்தம்.

ஆ. வசனம் 1-3-இல் பவுல் சொல்லும் அன்பை அவர் இப்போது விளக்குகிறார். அன்பு பொறுமையும், தயவுமுள்ளது. அன்பு பொருமைப்படாது, தன்னைப்புகழாது, அது பெருமை அடையாது, இறுமாப்பு அடையாது மற்றும் தற்பொழிவை நாடாது. அன்பு எளிதில் சினமடையாது, தீங்குகளை நினைவில் வைக்காது. அநியாயத்தில் அது சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். அது எப்பொழுதும் பாதுகாக்கும், நம்பும், விசுவாசிக்கும், சகிக்கும்.

இ. வசனம் 2 “அன்பு ஒருக்காலும் ஒழியாது” அது ஒருநாளும் முடிவுக்கு வராது. அது எப்பொழுதும் தேவைப்படும். அது என்றுமே உறுதியான நடத்தையாக இருக்கும். அன்போ ஆவியின் வரமல்ல. அது ஆவியின் கனி. பரிசுத்த ஆவியோடு உள்ள தனது நடையில் ஒரு கிறிஸ்தவன் முதிர்ச்சியடையும் போது, அது வளரும். ஒவ்வொருஆவியின் வரத்திற்குப் பின்னாலும். ஒரு கிறிஸ்தவன் செய்யும் எல்லாவற்றிற்குப் பின்னாலும், கட்டுப்படுத்தும் நோக்கமாக அது மாறும் வரைக்கும் அது வளர வேண்டும்.

ஈ. தனிப்பட்ட நபர்கள், ஆராதனைகளிலே பாஷைகளை வியாக்கியானம் செய்வதை நான் நினைவு கூறுகிறேன். சில சந்தர்ப்பங்களில் வியாக்கியானம் சரியல்ல என்றும், தங்களிடம் சரியான வியாக்கியானம் உண்டென்றும் ஒரு நபர் சொல்வார். சில சமயங்களில் அவர்கள் சரியாய் சொல்வார்கள், சில சமயங்களில் தவறாய்ச் சொல்வார்கள்.

அன்பும், ஆவியின் வரங்களின் வெளிப்பாடும்

1 கொரிந்தியர் 13:1-3

உ. ஆனால் அவையெல்லாவற்றிலும் நான் கண்டது அளவற்ற நிலையேயாகும். வரங்களின் வெளிப்பாட்டில், பெருமை, தற்புகழ்ச்சி மற்றும் பொறுமை அடங்கி இருந்தது. மற்ற விசுவாசிகள் பெலனடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதல் அடைவதைக் குறித்து அவர்கள் கொண்ட அக்கறையைப் பார்க்கிலும், அவர்கள் ஆவிக்குரிய நிலையைக் குறித்து, சபையிலுள்ள மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியே அதிக கரிசனை உடையவர்களாய் இருந்தார்கள். அவிசுவாசிகள் கிறிஸ்துவைக் கண்டுக் கொள்வதைப்பற்றிஅவர்கள்கரிசனைக் கொள்ளவில்லை.

3. ஆவியின் வரங்கள் ஓய்ந்த பின்னும் அன்பு இருக்கும் (13:8-13).

அ. ஆவிக்குரிய வரங்களான தீர்க்கதரிசனம், பாஷைகளை பேசுதல் மற்றும் அறிவை உணர்த்தும் வசனம் ஆகியவை ஒரு நாளில் முடிவுக்கு வரும். கிறிஸ்தவர்கள் இவ்விதத்தில்பெலப்படுத்தப்பட, உற்சாகப்படுத்தப்பட மற்றும் ஆறுதல்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்காது. இவை கிறிஸ்தவர்களுக்கு இனி தேவைப்படாது. இதே விதமாகத்தான் மற்ற எல்லா ஆவியின் வரங்களைக் குறித்தும் பவுல் கூறுகிறார் என்பதை நாம் திட்டமாக அறிந்துக்கொள்ளலாம்.

ஆ. ஆவியின் வரங்களெல்லாம். தேவ ஞானத்தின் சிறு பகுதிகள் மட்டுமே; தேவ வல்லமையின் வெளிப்பாட்டின் ஒரு சிறு பகுதிமட்டுமே,விசுவாசிகள்

மூலம் விசேஷ தேவைகளுள்ள மற்ற விசுவாசிகளுக்கு உதவுவதற்காக, ஆராதனைகளிலே அவை வெளிப்படுகின்றன. தற்கால உலகில் இவ்விதம் தான் இது நமக்கு இருக்கும்.

இ. வசனம் 10-12 "நிறைவானது வரும்போதோ" இது மாறும். இது "இயேசு வரும்போது" என்று பொருள்படும். அவர் வரும்போது, ஆவிக்குரிய வரங்களின் மூலம் உள்ள குறைவான (பாதியான) அறிவு முடிவிற்கு வரும். இப்பொழுது குறைவாகவே நாம் அறிவோம். ஆனால் இயேசு வரும்போது எல்லாவற்றையும் நாம் முழுமையாக அறிவோம். நாம் தேவனால் முழுமையாக அறியப்படுவது போல, நாமும் அப்பொழுது அறிவோம். இயேசு வரும்போது, முழுமையாக அறிந்துக்கொள்வதின் பூரண நிலையானது நம் எல்லாராலும் உணர்ந்துகொள்ளப்படும்.

ஈ. இந்த உண்மைக்கு பவுல் இரண்டு உதாரணங்களை தருகிறார்.

1. அவர் குழந்தையாய் இருந்தப்போது, குழந்தையைப் போல பேசினார், சிந்தித்தார், பகுத்தறிந்தார். ஆனால் அவர் மனிதனானபோதோ, தன் குழந்தைத்தனமான வழிகளை தனக்கு பின்னாக வைத்தார். அதே விதமாக, ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டின் மூலமாக, குறைவாய் அறிந்திருக்கிறார். பரிபூரணம் வரும்போதோ, பூரணமாய் அறிந்துக்கொள்வார்.

2. இப்பொழுது நாம் உலோக கண்ணாடியில் பார்ப்பதுபோலப் பார்க்கிறார். அது, நம்முடைய சாயலின் குறைவான, நிறைவற்ற நிழலாகும். ஆனால் கிறிஸ்து வரும்போது அது முகமுகமாய் பார்ப்பது போலிருக்கும். நம்முடைய பரிபூரண சாயலை நாம் பார்ப்போம். எல்லா காரியங்களையும் முழு அறிவோடு நாம் பார்ப்போம்.

அன்பும், ஆவியின் வரங்களின் வெளிப்பாடும்

1 கொரிந்தியர் 13:1-3

உ. தன்னுடைய விவாதத்தை தொகுத்து பவுல் சொல்கிறார் "ஆவியின் வரங்களுக்கான தேவையின் முடிவிற்குப் பின் "விசுவாசம், நம்பிக்கை, மற்றும் அன்பு நிலைத்திருக்கும்". ஆனால் இம்மூன்றிலும் அன்பே பெரியது. அது தேவனுடைய தார்மீக குணநலன்களில் ஒன்று. அது நம்முடையபதிலும் ஒன்றாக இருக்கவேண்டும்'.

முடிவுரை

அ. நீங்கள் ஒவ்வொருவரும் மூன்று காரியங்களைச் செய்யும்படி நான் வேண்டிக் கொள்கிறேன்.

1. ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களை வெளிப்படுத்தும்படி, பரிசுத்த ஆவியினால்ஞானஸ்நானம் பெறுங்கள்.

2. ஆவியின் வரங்களை வெளிப்படுத்தும்படி, பரிசுத்த ஆவியினால் பயன்படுத்தப்பட, ஆர்வத்தோடும், ஆவலோடும் வாஞ்சியுங்கள்.

3. ஆவியின் வரங்களை வெளிப்படுத்த உள்ள உங்கள் ஆசையினைக் கட்டுப்படுத்தும் நோக்கமாக, மற்ற விசுவாசிகள் மேலும், அவிசுவாசியின் மேலுமுள்ள உங்கள் அன்பு இருக்கட்டும்.

ஆ. மற்ற விசுவாசிகள் பெலப்படுத்தப்படவும், உற்சாகப்படுத்தப்படவும், ஆறுதல்படுத்தப்படவும் தேவன், ஆவியின் வரங்களை நம்மூலம் வெளிப்படுத்தும்படி, நாம் எழும்பி, தேவனை கேட்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதன்மூலம் ஒருவேளை ஒரு அவிசுவாசி, உண்மையாகவே தேவன் நமது மத்தியில் இருக்கிறார் என்று உணர்ந்து, அவரை பணிந்து, வணங்கக்கூடும்'.

ஆராதனையில் தீர்க்கதரிசனமும் வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளும்

1 கொரிந்தியர் 14:1-25

முகவுரை

அ. பவுல் எபேசுவில் இருந்தபோது, கொரிந்து விசுவாசிகள் தங்களது ஆராதனைகளின் போது ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டில் பிரச்சனையை சந்தித்தார்கள். அவர்கள் பவுலினிடத்தில் ஒரு தூதுவரை இவ்விதம் சொல்லி அனுப்பினார்கள். ஒரே நேரத்தில் ஒருவருக்கு மேலான நபர் நின்று அந்நிய பாஷைகள் மற்றும் தீர்க்கதரிசன வரங்களை வெளிப்படுத்துகிறார்கள். அந்நிய பாஷைகளின் வரத்தின் வெளிப்பாடானது, வியாக்கியானம் செய்யப்படுவதில்லை. நாம் என்ன செய்ய வேண்டும்? இவ்விரண்டு வரங்களில் எது பெரிது? வியாக்கியம் இல்லாமல் அந்நிய பாஷைகளின் வரத்தை வெளிப்படுத்துவது சரிதானா? ஆவியின் வரங்களின் பயன் என்ன?

1. ஆராதனையிலே வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளை விட தீர்க்கதரிசனமே பெரியது (14: 1-13).

அ. வசனம் 1. ஆராதனையிலே தீர்க்கதரிசனமாகிய ஆவியின் வரத்தை வெளிப்படுத்தும்படி ஆவலாய் வாஞ்சிக்கும்படி பவுல் கொரிந்தியர்களுக்கு கூறுகிறார். தீர்க்கதரிசனமாகிய ஆவியின் வரமானது, தேவனிடத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்ட ஒரு தெய்வீக வெளிப்பாடாகும். நிகழ்காலத்தையோ அல்லது வருங்காலத்தையோ பற்றிய வெளிப்பாடு அது. ஆராதனைக்கு கூடி வந்துள்ள விசுவாசிகளை பெலப்படுத்தி, உற்சாகப்படுத்தி, ஆறுதல்படுத்தும் ஒருசெய்தியாகவும் அது இருக்கும்.

ஆ. ஆராதனையிலே வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளையும், தீர்க்கதரிசனத்தையும் ஒப்பிட்டு, தான் வசனம் 1 இல் கொடுத்துள்ள கூற்றின் காரணத்தை விளக்க பவுல் முற்படுகிறார்.

1. தீர்க்கதரிசனம் - ஜனங்கள் பெலப்பட்டு, உற்சாகப்படுத்தப்பட்டு, அறுதலையடையும்படி அவர்களிடத்தில் பேசுகிறது. சபையிலுள்ள (சரீரம்) மற்றவர்கள் பக்தி விருத்தி அடைகிறார்கள்.

2. வியாக்கியானமில்லாத அந்நிய பாஷைகள் - மற்ற விசுவாசிகளை அது பெலப்படுத்தாது, உற்சாகப்படுத்தாது மற்றும் ஆறுதல்படுத்தாது; ஆராதனையில் எவராலும் அது புரிந்துக்கொள்ளப்படாது; அது ஒரு மறைவான இரகசியமாகவே இருக்கும்; பேசுகிற தனி நபர் மட்டும் பக்தி விருத்தி அடைவார்.

3. வசனம் 5. “அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; தீர்க்கதரிசனமும், அந்நிய பாஷைகளும் வியாக்கியானம் செய்யப்படும்போது, ஒரு ஆராதனையிலே சம மதிப்பு கொண்டுள்ளன. ஏனென்றால் அவை இரண்டுமே கூடியிருக்கிற விசுவாசிகளை பக்தி விருத்தி அடையச்செய்கின்றன. அடிப்படை காரணமே மற்ற விசுவாசிகள் பக்தி விருத்தி அடைவதாகும்.

ஈ. வசனம் 7-11 வாத்தியங்கள் மற்றும் வெளிநாட்டு பாஷைகள் ஆகியவற்றின் உதாரணங்களைக் கொண்டு, ஏன் வியாக்கியானம் பண்ணாத பட்சத்தில் அந்நிய பாஷைகள் வெளிப்படுத்தப்படுவதை தான் விரும்பவில்லை என்பதை பவுல் விளக்குகிறார்.

ஆராதனையில் தீர்க்கதரிசனமும் வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளும்

1 கொரிந்தியர் 14:1-25

1. புல்லாங்குழல் அல்லது சுரமண்டலத்தை நோக்கமின்றி ஒரு குழந்தை வாசிப்பதும், ஆனால் அதில் விளங்கக்கூடிய இராகத்தை அமைக்கக்கூடாமல் இருப்பது.

2. எந்த குறிப்பிட்ட செய்தியை ராணுவ வீரர்களுக்கு தெரிவிக்க வேண்டுமோ அதற்குரிய இசையை வாசிக்காமல் வேறு விதத்தில் எக்காளத்தை ஊதுகிற எக்காள வாத்தியகாரன்.

3. மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் வெளிநாட்டு பாஷையில் பேசும் ஒரு நபர். வியாக்கியானம் இல்லாமல் சபையில் யாராலும் அந்நிய பாஷைகள் புரிந்து கொள்ளப்படுவதில்லை. அதன் விளைவாக யாரும் பக்தி விருத்தி அடைவதில்லை.

உ. வசனம் 12 "சபைக்கு பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக, வரங்களில் தேறுங்கள்" தீர்க்கதரிசனமும், வியாக்கியானம் உள்ள அந்நிய பாஷைகளும் சபையை (சரீரம்) பக்தி விருத்தியடையச் செய்யும். இதனால் தான் பவுல் தொடர்ந்து சொல்லுகிறார் "அந்நிய பாஷையிலே பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்" (வசனம் 13).

2. ஆராதனையிலே ஆவியிலே ஜெபிப்பதையும், பாடுவதையும் விட தீர்க்கதரிசனம் (14:14-19)

அ. வசனம் 14 ஆராதனையிலே மற்ற விசுவாசிகளை பக்தி விருத்தியடையச் செய்யும் ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டின் சார்பில் பவுல் இன்னமும் விவாதம் செய்கிறார். இந்த விவாதத்தில் (வசனம் 14-19), ஆவியில் (அறியாத பாஷையில்) ஜெபிப்பதையும், பாடுவதையும், கருத்தில் (அறிந்த பாஷையில்) ஜெபிப்பதையும், பாடுவதையும் ஒப்பிடுகிறார்.

ஆ. "என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்". ஒரு விசுவாசி தனது ஆவியிலே ஜெபித்து, பாடும்போது, அவன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டபோது பெற்றுக்கொண்ட கற்றறியாத பாஷையிலே அவ்விதம் செய்கிறான் (அப்போஸ்தலர் 2:4; 10:46; 19:6). இந்த தொடர்பு தேவனால் மட்டும் புரிந்துகொள்ளப்படுகிறது. அந்த நபர், தான் சொல்லிக்கொண்டிருப்பதை புரிந்து கொள்வதில்லை அவனுடைய கருத்து பயனற்றதாயிருக்கும். மற்ற விசுவாசிகளின் கருத்துக்களும் பயனற்றதாயிருக்கும் அவர்கள் அதை புரிந்துக் கொள்ளுகிறதுமில்லை, பக்திவிருத்தியடைகிறதுமில்லை.

இ. வசனம் 15. கொரிந்து சபையிலுள்ள எந்த விசுவாசியைப் பார்க்கிலும், தான் ஒரு வேளை அதிகமாக தனது ஆவியில் பாடி, ஜெபிப்பதை, பவுல் நமக்கு வெளிப்படுத்துகிறார். ஆனால் ஆராதனை வேளையிலோ, வியாக்கியானம் செய்யப்படும் என்று தனக்கு நிச்சயமிருக்கும்போது மட்டுமே அவர் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார் அல்லது நவமான பாஷைகளின் வரத்தை பயன்படுத்துகிறார். (வசனம் 19; 14:39 மற்றும் அப்போஸ்தலர் 13:1 ஆகியவற்றையும் பார்க்கவும். இது அங்குள்ள சரீரத்தின் அங்கத்தினருக்கு பிரயோஜனமாயிருக்கும். ஆனாலும், விசுவாசிகள் தங்கள் ஆவிகளிலே பாடி, ஜெபிப்பதற்கு நல்ல காரணங்கள் உண்டு.

ஆராதனையில் தீர்க்கதரிசனமும் வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளும்

1 கொரிந்தியர் 14:1-25

1. நாம் பெலவீனப்பட்ட நிலையில் இருக்கிறோம். (ரோமர்8:26-27) காரியத்தின் கடைத்தொகையில், ஒரு குறைவான நிழலை, மங்கலான, பனிபடர்ந்த பார்வையை நாம் பார்க்கிறோம். இப்பொழுது குறைவாகவே அறிகிறோம். (1கொரிந்தியர் 13:9,12). ஆகவே ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். அவர் காரியத்தின் கடைத்தொகையை அறிந்திருக்கிறார். அவருக்கு பிதாவின் கருத்து உண்டு. நாம் நமது ஆவியிலே ஜெபிக்கும்போது, பிதாவின் பரிபூரண சித்தத்தின்படி அவர் நமக்காக பரிந்து பேசுகிறார்.

2. ஆவியிலே ஜெபிப்பது ஒரு ஆவிக்குரிய போராயுதம் (எபேசியர் 6:18) வானமண்டலத்திலும் அந்தகார லோகத்திலுமுள்ள வல்லமைகளோடும், துரைத்தனங்களோடும் நாம் போராட்டத்தில் இருக்கிறோம் (எபேசியர் 6:12). ஆகவே நம்முடைய ஆவிக்குரிய எதிரிகளோடு (சாத்தானும் அவனது பிசாசுகளும்) போராடும் போது நாம் ஆவிக்குரிய போராயுதங்களை பயன்படுத்த வேண்டும்.

3. ஆவியிலே விண்ணப்பம் பண்ணுவது, சுவிசேஷ செய்தியை பயமில்லாமலும், மிகுந்த தைரியத்துடனும் எடுத்துச்சொல்ல தெய்வீக சாத்தியத்தைக் தருகிறது (எபேசியர் 6:19-20).

4. ஆவியிலே விண்ணப்பம் பண்ணுவதும், ஜெபிப்பதும், தேவனைத் துதித்து அவருக்கு நன்றி சொல்லும் வழிகளாகும் (1கொரிந்தியர் 14:16-17).

5. நாம் ஆவியிலே ஜெபித்து, பாடும்போது, நமது தனிப்பட்ட கருத்துக்களோ, பாரபட்சங்களோ, நாம் தேவனோடு கொண்டுள்ள தொடர்பிலே தலையிடுகிறதில்லை. ஏனென்றால், ஆவியிலே ஜெபிப்பதும், பாடுவதும், விசுவாசத்தை உறுதிப்படுத்துகின்றன (யூதா 1:20). நாம் நமது ஆவியிலே ஜெபித்து, பாடும்போது பக்தி விருத்தியடைகிறோம். நாம் தாம்மீக ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் போதிக்கப்பட்டு முன்னேறுகிறோம்; நாம் தெளிவுபடுத்தப்பட்டு, உறுதிப்படுத்துகிறோம். நாம் விசுவாசத்தின் மேல், ஒவ்வொரு மட்டமாக கட்டுகிறோம்.

ஈ. நான் எனது ஆவியிலே ஜெபிக்கும்போதா, அல்லது பாடும்போதா, சாதாரணமாக, ஒரு சூழ்நிலையைக் குறித்த கவலையைக் குறித்தோ அல்லது போற்றி, நன்றி சொல்ல வேண்டிய காரியத்தைக் குறித்தோ அறிந்த பாஷையில் தேனிடத்தில் பேசுவேன். பின்னர் அறிந்த பாஷையில் நான் எனது பரம பிதாவிடம் சொன்னதைக் குறித்து எனது ஆவியில் ஜெபிக்க அல்லது பாட ஆரம்பிப்பேன். ஆகவே நமது ஆவிகளில் ஜெபிக்கவோ, பாடவோ, நல்ல காரணங்கள் உண்டு. ஆனாலும், அவிசுவாசிகள் இருப்பார்களானால் ஆராதனையிலே நமது ஆவிகளிலே ஜெபிக்கும்போதும் பாடும்போதும், நாம் ஜாக்கிரதையை கடைப்பிடிக்கவேண்டும்.

உ. ஆவியிலேயல்லாமல், ஜெபிப்பதையும், பாடுவதையும் இது எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. எப்பொழுது எங்கேயெல்லாம் அவிசுவாசிகள் இல்லையோ அங்கே நாம் அதை அடிக்கடி செய்வோம். தனிப்பட்ட தியானத்திலும், ஜெபக்கூட்டங்களில் நாம் இருக்கும்பொழுதெல்லாம் நமது ஆவியிலே ஜெபித்து, பாடுவோம்!

3. வியாக்கியானம் இல்லா அந்நிய பாஷைகள் அவிசுவாசிகளுக்கும், தீர்க்கதரிசனம் விசுவாசிகளுக்கும் அடையாளமாயிருக்கிறது (14:20-25).

ஆராதனையில் தீர்க்கதரிசனமும் வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளும்

1 கொரிந்தியர் 14:1-25

அ. வசனம் 21. பொல்லாங்கானவற்றிற்கு பிள்ளைகளாயிருங்கள் அதாவது சிறுபிள்ளை போலிருங்கள். "பிள்ளைகள், பொல்லாதவர்கள் அல்ல; தாங்கள் செய்யும் காரியங்களுக்கு பொல்லாத ஆசைகளும், தவறான நோக்கங்களும் உடையவர்களும் அல்ல. அதே விதமாக, ஆராதனை வேளையிலே ஆவியின் வரங்களை வெளிப்படுத்தும்போது, பிள்ளைகளைப் போல இருக்கும்படி, கொரிந்தியர்களுக்கு பவுல் சவால் விடுகிறார். மற்றவர்கள் பெலனடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதலடைவதைப் பார்க்கும்படி ஆவியின் வரங்களை வெளிப்படுத்துங்கள். தன்னலமான காரணங்களோடும் அல்லது தவறான நோக்கங்களேடும் ஆவியின் வரங்களை வெளிப்படுத்தாதிருங்கள்.

ஆ. ஆவியின் வரங்களான தீர்க்கதரிசனம் மற்றும் வியாக்கியானம் இல்லாத பாஷைகளின் விஷயத்தில், சிறுபிள்ளைகளைப்போல சிந்திக்காமல், தேறின பெரியவர்களைப்போல சிந்திக்க ஆரம்பிக்கும்படி, பவுல் கொரிந்தியர்களுக்கு சவால் விடுகிறார். இந்த இரண்டு வெளிப்பாட்டுகளுக்கும் அவிசுவாசிகள் மேல் என்ன விளைவு கொள்ளுகிறது என்பதை அவர் விளக்குகிறார் (வசனம் 22:25).

இ. வசனம் 22. "அந்நிய பாஷைகள் (வியாக்கியானம் இல்லாமல்) விசுவாசிகளுக்கு அடையாளமயிருக்கிறது." இந்த வாக்கியம் 21ஆம் வசனத்தை விளக்குகிறது.

ஏசாயா 28:11-12-ஐ 21ஆம் வசனத்தில் பவுல் மேற்கோள் காட்டுகிறார். தேவன் தமது தீர்த்தரிசி மூலமாய் இஸ்ரவேலிடம் இவ்வாறு கூறுகிறார். "புரிந்துக்கொள்ள முடியாத அசீரியனின் அந்நிய பாஷையானது அவிசுவாசியான இஸ்ரவேலுக்கு நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது என்பதற்கான அடையாளம்".

ஈ. ஆராதனை வேளைகளிலே அந்நிய பாஷைகள் வியாக்கியானம் பண்ணப்படாமல் இருக்கும்போது, எந்த புரிந்துக்கொள்ளுதலும் இல்லாமல் இருக்கிறது. இந்த ஆவியின் வரத்தின் வெளிப்பாட்டின் மூலம், தேவன் விசுவாசிகளை பெலப்படுத்தி உற்சாகப்படுத்தி, ஆறுதல்படுத்துவதை க் அவிசுவாசிகள் காண முடியாது. ஆகவே அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்திற்கு கொண்டு வரப்படுவதில்லை. அதற்கு பதிலாக "இந்த கொரிந்தியர்கள் பைத்தியக்காரர்கள்" என்று சிந்திக்கிறார்கள். பவுல் இப்பொழுது மேற்கோள்காட்டிய பழைய ஏற்பாட்டின் பகுதியிலே, இஸ்ரவேலரைப்போல, இந்தக் கூட்டங்களில் கலந்துக்கொண்ட அவிசுவாசிகளும் நித்திய நியாயத்தீர்ப்புக்கென நியமிக்கப்படுகிறார்கள். வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷையானது, அவிசுவாசிகள் சுவிசேஷத்தைப் பெறுவதற்கு உண்மையிலேயே ஒரு தடையாய் இருக்கக் கூடும்.

உ. வசனம் 22. "தீர்க்கதரிசனமோ விசுவாசிகளுக்கு உரியது" இந்த முழு அதிகாரத்தின் தலைப்பு இதுவே. அந்நிய பாஷைகளில் பேசி, பிறகு அது வியாக்கியானம் பண்ணப்படாமல் இருப்பதைவிட, விசுவாசிகள் தீர்க்கதரிசனமாகிய ஆவியின் வரத்தை வெளிப்படுத்துவதையே பவுல் விரும்புகிறார். தீர்க்கதரிசனமானது மற்ற விசுவாசிகளை பெலப்படுத்தி உற்சாகப்படுத்தி, ஆறுதல்படுத்துகிறது. தீர்க்கதரிசனமாகிய ஆவியின் வரத்தின் மூலமாக, விசுவாசிகள் ஒருவரையொருவர் பெலப்படுத்தி, உற்சாகப்படுத்தி, ஆறுதல் படுத்துவதை அங்குள்ள அவிசுவாசிகள் பார்க்கும்போது, தாங்கள் பாவிகள் என்று உணர்ந்து கொள்வார்கள். விசுவாசிகள் மத்தியில் தேவன் கிரியை செய்கிறார் என்று உணர்ந்து, தாழ விழுந்து அவரைப் பணிந்துகொள்வார்கள்.

ஆராதனையில் தீர்க்கதரிசனமும் வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளும்

1 கொரிந்தியர் 14:1-25

ஊ. அநேக சபைகளிலே ஆராதனையின் சமயத்தில், விசுவாசிகள் அந்நிய பாஷைகளில் ஜெபித்துப்பாடுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் அவ்விதம் செய்யும்போது, தேவனை துதித்து ஸ்தோத்தரிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அங்கு அவிசுவாசிகள் இருந்தால், என்ன நினைப்பார்கள்? கொரிந்து சபைகளுக்கு விஜயம் செய்த விருந்தாளிகளைப் போல, அவர்களும், "இந்த கிறிஸ்தவர்கள் பைத்தியக்காரர்கள்!"என்று தான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். விருந்தாளிகள் இருக்கும்போது, நீங்கள் ஆவியின் வரங்களை வெளிப்படுத்துவீர்களானால், அது தீர்க்கதரிசனமோ அல்லது அறிந்த பாஷையில் வெளிப்படுத்தப்படும் ஒரு வரமாகவோ இருக்கட்டும். அல்லது நீங்கள் அந்நிய பாஷைகளின் வரத்தை வெளிப்படுத்தும்போது, அந்நிய பாஷைகளை வியாக்கியானம் பண்ணுகிற ஒருவர்இருக்கிறாராஎன்றுநிச்சயித்துக்கொள்ளுங்கள். அல்லது வியாக்கியானத்தை உங்களுக்கு தேவன் தரும்படி கேளுங்கள்!.

எ. நமது சபைகளுக்கு வரும் அவிசுவாசிகளின் இரட்சிப்பும், உணர்த்தப்படலுமே நமது தலையாய நோக்கமாக இருக்கவேண்டும் "சிறு பிள்ளைகளைப்போல சிந்திப்பதை நிறுத்தி, பெரியவர்களைப் போல சிந்திக்க தொடங்குங்கள்".

முடிவுரை

அ. கொரிந்து விசுவாசிகளுக்கு எழுதின தன் நிருபத்தின் வாயிலாக, பெந்தேகொஸ்தே விசுவாசிகளின் கூட்டத்திற்கு பவுல் அப்போஸ்தலர் சவால் விடுகிறார்.

அவரது சவால் நான்குவிதமானது.

1. மற்ற விசுவாசிகள் பெலனடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதலடையும்படி, ஆராதனை வேளையில் தீர்க்கதரிசன வரத்தை வெளிப்படுத்துங்கள்.

2. மற்ற விசுவாசிகள் பெலனடைந்து, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதடையும்படி, ஆராதனையின்போது நீங்கள் அந்நிய பாஷைகளின் வரத்தை வெளிப்படுத்தும்போது, அந்த அந்நிய பாஷைகளின் வியாக்கியானத்திற்காக காத்திருங்கள்.

3. வயது வந்த கிறிஸ்தவர்களைப் போல சிந்தியுங்கள். மற்ற விசுவாசிகளின் பக்தி விருத்தியும், அவிசுவாசிகளின் இரட்சிப்புமே உங்கள் ஆராதனையில் முக்கிய நோக்கங்களாக இருக்கட்டும்.

4. அவிசுவாசிகள் இல்லாத பட்சத்தில் உங்கள்ஆராதனைகளிலும், உங்கள் தனிப்பட்ட தியானங்களிலும், உங்கள் வீடுகளிலோ அல்லது ஆராதனையின் மைய இடத்திலோ நீங்கள் சிறிய குழுக்களாக கூடும்போதும், உங்கள் ஆவியிலே ஜெபித்து, பாடுங்கள்.

கிரமமான ஆராதனை
1 கொரிந்தியர் 14:26-40

முகவுரை

அ. பவுல் 1கொரிந்தியர் 14:1-25-இல் தொடங்கின கிரமமான ஆராதனையைக் குறித்த அவருடைய விவாதத்தின் தொடர்ச்சி இது. கிரமமான ஆராதனையின் அந்தப் பகுதியிலே அவர்,

1. வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷைகளை விட தீர்க்கதரிசனமும்

2. ஆராதனை சமயங்களில் நமது ஆவியில் ஜெபிப்பதையும் பாடுவதையும் விட தீர்க்கதரிசனமும்,

3. வியாக்கியானம் இல்லாத அந்நிய பாஷையானது அவிசுவாசிகளுக்கும், தீர்க்கதரிசனமானது விசுவாசிகளுக்கும் அடையாளமாயிருக்கிறது.

வேதத்தின் இந்த பகுதியிலே 1. அந்நிய பாஷைகளின் கிரமமான வெளிப்படுத்துதலும், தீர்க்கதரிசனமும், 2. ஸ்திரீகளின் ஒழுங்கான நடத்தையும், மற்றும் 3. ஆராதனையின் சமயத்திலே எல்லாவற்றையும் கிரமமாக செய்யும்படியான நமக்கு கொடுக்கப்பட்ட தேவ கட்டளை, ஆகியவற்றைக் குறித்து பவுல் விவாதிக்கிறார்.

1. அந்நிய பாஷைகள் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகிய ஆவியின் வரங்கள் கிரமமான முறையில் வெளிப்படுத்தப்படவேண்டும் (14:26-33அ).

அ. வசனம் 26. "நீங்கள் கூடி வந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான். ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷை பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான்". மற்ற விசுவாசிகளுக்கு ஊழியம் செய்யும்படியான சந்தர்ப்பமானது, கூடியுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்படவேண்டும்.

ஆ. வசனம் 26. இந்த ஆவியின் வரங்களின் பட்டியலானது ஒரு மாதிரி மட்டுமே. ஆராதனையின் சமயத்தில் வெளிப்படவேண்டிய ஆவியின் வரங்களின் உதாரணங்களாக, ஒரு உற்சாகப்படுத்தும்வார்த்தையையோ,உதவிகளையோ , அற்புதங்களையோ அல்லது வேறு எந்த ஆவியின் வரத்தையோ பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக மட்டுமே எல்லா ஆவியின்வரங்களும்வெளிப்படுத்தப்படவேண்டும்.மற்றவிசுவாசிகள் கட்டியெழுப்பப்பட,பக்திவிருத்தியடைய 1கொரிந்தியர் 14:1-25-இல் உள்ளது போல, ஆராதனையில் கலந்துள்ள மற்ற விசுவாசிகளை பெலப்படுத்தும் உற்சாகப்படுத்தும், ஆறுதல்படுத்தும் ஆவியின் வரங்களை வெளிப்படுத்துவதைக் குறித்தே பவுல் முக்கிய கரிசனை கொண்டுள்ளார். (1கொரிந்தியர்14:3, 5, 12 ,17-ஐ பார்க்கவும்).

இ. வசனம் 27-31ஆனது தங்கள் ஆராதனைகளில் கொரிந்தியர்கள் சந்தித்துக் கொண்டிருந்த குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கான பதிலாகும். எல்லாரும்ஒரேநேரத்தில் தீர்க்கதரிசனம் சொல்அந்நியபாஷைகளில்பேசிக்கொண்டிருந்தார்கள். ஆகவே பவுல் குறிப்பிட்ட போதனைகளைக் கொடுக்கிறார்.

1. அந்நிய பாஷைகள்- ஒரு ஆராதனையில் இரண்டு அல்லதுமூன்றுபேர்; ஒவ்வொருவர் அந்நிய பாஷையில் பேசின பின்பு, அது வியாக்கியானத்தால் தொடரப்படவேண்டும்; வியாக்கியானம்செய்பவர்யாரும்இல்லாவிட்டால்,அந்தகுறிப்பிட்ட ஆராதனையில் அந்நிய பாஷையின்வரத்தை வெளிப்படுத்தவேண்டாம் தேசங்களின்நடுவிலேயோழாய்ப்போகப் பண்ணுவேன் (எசே 29:12).

கிரமமான ஆராதனை

1 கொரிந்தியர் 14:26-40

2. தீர்க்கதரிசனம்-ஒரு ஆராதனையில் இரண்டு அல்லது மூன்று பேர்; ஒவ்வொருவரும் தங்கள் முறைப்படி; ஆராதனையிலுள்ள மற்றவர்கள் தீர்க்கதரிசனம் சொல்பவர் மூலம் என்ன சொல்லப்படுகிறது என்பதை ஜாக்கிரதையாய் எடைபோட்டுபார்க்க (சீர்தூக்கி பார்க்க,நிதானிக்க) வேண்டும். அதை குறித்து அவர்கள் சிந்தித்து, "இது எனக்கு பொருந்துவதா, அல்லது வேறொருவருக்கா அல்லது சபையாகிய சரீரத்திற்கா?" என்று கேட்கவேண்டும். அந்நிய பாஷைகள் மற்றும் அதின் வியாக்கியானத்தின் மூலமோ அல்லது தீர்க்கதரிசனத்தின் மூலமோ பெலப்படுத்தப்பட, உற்சாகப்படுத்தப்பட அல்லது ஆறுதல்படுத்தப்படவேண்டிய தனி நபரையோ அல்லது குழுவையோ பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவார்.

ஈ. வசனம் 32. "தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே". ஆராதனைகளிலே வெளிப்படுத்தப்படும் ஆவியின் வரங்களான அந்நிய பாஷைகளில் பேசுவதோ, தீர்க்கதரிசனம் சொல்லுவதோ, வெறும் கட்டுக்கடங்காதஉணர்ச்சியின் வெளிப்பாடுகளல்ல. அதை வெளிப்படுத்தும் நபரால் இந்த வரங்களின் வெளிப்பாட்டை அடக்க முடியும். இந்த ஆவியின் வரங்களை வெளிப்படுத்துபவர்கள் ஒழுங்கு உள்ளவர்களாகவும்,ஆராதனையின்சமயத்தில்பொறுப்புள்ளவர்களாய்நடந்துக்கொள்பவர்களாய்இருக்கவும்தேவன்எதிர்ப்பார்க்கிறார்.

உ. "தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்". (வசனம் 33) ஆகவே ஒரு ஆராதனைக்கு இந்த ஆவியின் வரங்களின் வெளிப்பாடானது, குழப்பத்தை அல்ல, சமாதானத்தை கொண்டு வரவேண்டும்.

2. ஸ்திரீகள் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளவேண்டும். (14:33-36).

அ. வசனம் 33. எல்லா சபைகளில் நடப்பதை கொரிந்தியர்களையும் செய்யவைக்கும்படி பவுல் முயற்சி செய்கிறார். அவர் கொடுக்கிறபோதனைகள், அவர் நிறுவின எல்லா சபைகளுக்கும் ஒன்றுதான்.

ஆ. வசனம் 33-35. கொரிந்து சபையிலே இன்னொரு விதமான குழப்பம் இருந்தது. மற்ற விசுவாசிகளிடத்தில் தகாத விதமாய் ஸ்திரீகள் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய சத்தமான உரையாடல், ஆராதனையின் போது குழப்பத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. ஆகவே தான் பவுல் இவ்வாறு கூறுகிறார், "அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்" (வசனம் 35).

இ. வசனம் 35. "ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே". "ஆராதனையின் போது சத்தமாக கேள்வி கேட்பது ஸ்திரீகளுக்கு அயோக்கியமாய் இருக்குமே" என்று தான் பவுல் கூறுகிறார்.

ஈ. ஸ்திரீகள் ஜெபித்து, பாடி, ஆவியின் வரங்களை வெளிப்படுத்துவதையோ, ஆராதனைக்கென்று தங்கள் பங்கைத் தருவதையோ பவுல் தடுக்க முற்படவில்லை. அவர்கள் இதைச் செய்யும்படியாகத் தான் விரும்பினார்.எதிர்ப்பார்த்தார்.(1கொரிந்தியர்11:5).

உ. வசனம் 36 "தேவ வசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?" பவுல் கேலியாக பேசுகிறார். இந்த இரண்டு கேள்விகளின் மூலமாக, மற்ற எந்த சபைகளைப் பார்க்கிலும் அவர்கள் வித்தியாசமாக நடந்துக்கொள்வதாக கொரிந்தியர்களிலும் அவர் கூறுகிறார்.

கிரமமான ஆராதனை
1 கொரிந்தியர் 14:26-40

ஆராதனையிலே குழப்பத்திற்கு இடங்கொடுப்பதின் மூலம், தங்களுக்கு ஏதோ கர்த்தரிடத்திலிருந்து விசேஷ கட்டளை வந்தது போல அவர்கள் நடந்துகொண்டார்கள்.

ஊ. ஸ்திரீகளைக் குறித்த இந்த கடிந்துக்கொள்ளுதலானது, ஆராதனையிலேயுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் இன்று பொருந்தும்; புருஷர்கள், ஸ்திரீகள் மற்றும் குழந்தைகள். மற்ற விசுவாசிகளிடத்தில் பேசி, சபையிலே குழப்பத்தை உண்டு பண்ணுகிறவர்கள், தங்கள் வெட்டிப்பேச்சை ஆராதனை முடியும்மட்டும் நிறுத்தி வைக்க வேண்டும்!

எ. ஒரு சிறிய சபையிலே நாங்கள் அப்பொழுதான் போதக பணியை ஏற்றிருந்தோம். ஆராதனையிலே, வாலிபர்கள் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆராதனை முடியும்மட்டும் தங்கள் வெட்டிப்பேச்சை நிறுத்தி வைக்கும்படி அவர்களுக்கு போதிக்கப்பட்டபோது, அவர்களில் அநேக குடும்பங்கள் சபையை விட்டு வெளியேறினர். அவர்கள் வெளியேறினப்பின்பு, ஆராதனையின் போது, ஆவியின் வரங்கள் வெளிப்படுவதன் மூலம், விசுவாசிகள் பக்தி விருத்தியடைவது சாத்தியமாயிற்று.

3. எல்லாம் கிரமமாய் செய்யப்படவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார் (14:37-40).

அ. வசனம் 37. தாங்கள் சொல்லிக்கொள்வதுபோல, உண்மையிலேயே கொரிந்தியர்கள் ஆவிக்குரிய விதத்தில் வரங்கள் பெற்றவர்களாய் இருப்பார்களானால், பவுலின் போதனைகள் உண்மையில் கர்த்தருடைய கட்டளையே என்று ஏற்றுக்கொள்ளுவார்கள்.

ஆ. வசனம் 38. "ஒருவன் அறியாதவனாயிருந்தால், அவன் அறியாதவனாயிருக்கட்டும்" பவுலின் போதனைகளை ஒரு விசுவாசி அசட்டை செய்வனானால், அவன் கீழ்ப்படியாதவனாயிருக்கிறான்; சபையின் மற்றவர்களால் அசட்டைப் பண்ணப்பட வேண்டியவனாய் இருக்கிறார். பவுலின் ஆலோசனை கர்த்தரிடத்திலிருந்து வருகிறபடியால், கீழ்ப்படியாத விசுவாசியும் கர்த்தரால் அசட்டைப்பண்ணப்படுவான்.

இ. வசனம் 39. அந்நிய பாஷைகளைப் பேசுவதும், தீர்க்கதரிசனம் சொல்லுவதுமாகிய ஆவியின் வரங்களின் வெளிப்பாட்டைக் குறித்த, கொரிந்துவிலுள்ள பிரச்சனைக்கு பவுலின் விடை இவ்வாறாகும். 1. தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள். மற்றும் 2. அந்நிய பாஷைகள் பேசப்படுவதை அனுமதியுங்கள் (அவைகள் வியாக்கியானமும் செய்யப்படுமானால்).

ஈ. வசனம் 40. "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது". 14:27-31-இல் சொல்லப்பட்டவைகளால் ஆவியின் வெளிப்பாடானது அடக்கி ஆளப்படவேண்டும். ஆராதனையின்போது, விசுவாசிகள் பேசி, குழப்பத்தை உண்டுப்பண்ணும் பழக்கமானது நிறுத்தப்படவேண்டும். சபையிலே செய்யப்படும் எல்லாவற்றிற்கும் இந்த கொள்கையானது பொருந்தும். குழப்பத்தின் மூலகாரணனே சாத்தான் தான்!.

கிரமமான ஆராதனை

1 கொரிந்தியர் 14:26-40

உ. பவுலின் இந்தப் போதனைகளை பெந்தேகொஸ்தே விசுவாசிகளின் ஒவ்வொரு சபையும் கவனிக்க வேண்டும். அவைகளை அவர்கள் கடைப்பிடிக்காமலிருந்தால், உடனடியாக சூழ்நிலையை அவர்கள் சரிப்படுத்த வேண்டும். 1. ஆராதனையிலிருந்து குழப்பம் விலக்கப்படாவிட்டால், மற்றும் 2. நல்லொழுக்கமும், கிரமுமான விதத்தில் ஆவியின் வரங்கள் வெளிப்படுத்தப்படாவிட்டால், விசுவாசிகள் பெலப்படுத்தப்பட்டு, உற்சாகப்படுத்தப்பட்டு, ஆறுதல் படுத்தப்பட முடியாது.

முடிவுரை

அ. “கிரமமான ஆராதனை” என்ற இந்த பாடமானது ஒவ்வொரு பெந்தேகொஸ்தே விசுவாசிக்கும் சவாலாக மாறட்டும்.

1. ஆராதனையின் போது, குழப்பத்தை உண்டுப்பண்ணுகிறவர்கள், தங்கள் செய்கையிலிருந்து ஓயட்டும்.

2. அந்நிய பாஷையான ஆவியின்வரத்தை வெளிப்படுத்துபவர்கள், அவைகளை தாங்களே வியாக்கியானம் செய்ய திராணியுள்ளவர்களாகும்படி ஜெபிக்கவேண்டும். அல்லது அந்நிய பாஷைகளைவியாக்கியானம் செய்யும் வரத்தை வெளிப்படுத்தும் யாராவது ஒரு நபர் இரக்கிறரா என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள்.

3. தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள்.

4. உங்களை நீங்களே அடக்கி கொண்டு, ஆவியின் வரங்களை கிரமமான முறையில் வெளிப்படுத்துங்கள்.

ஆ. இசை வாசிக்கப்படும்போது, விசுவாசிகள் ஆவியின் வரங்களை வெளிப்படுத்த நேரம்கொடுங்கள்.

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்
1 கொரிந்தியர் 15:12-23, 35-53

முகவுரை

அ. மரித்த விசுவாசிகளின் சடலங்களின் உயிர்த்தெழுதலைக் குறித்து அநேக கேள்விகள் கேட்டு, பவுலுக்கு கொரிந்தியர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தனர் (இன்று அநேகருக்குள்ள கேள்விகளும் இதுதான்.

1. "இயேசுவுக்குள் உள்ளவர்களுக்கு உண்மையாகவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டா?"

2. "அவர்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும்போது அவர்களுக்கு எவ்விதமான சரீரம் இருக்கும்?"

3."மரித்தோர்எவ்விதம்எழுப்பப்படுகிறார்கள்?" இந்த மூன்று கேள்விகளுக்கு 1கொரிந்தியர் 15:12-53-இல் பவுல் பதிலளிக்கிறார்.

1. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டு (15:12-23).

அ. வசனம் 12. "மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லை" என்று சில கொரிந்தியர்கள் கூறும் அளவிற்கு சென்றனர். இந்தக் காரியத்தைக் குறித்த தனது போதனையின் வாதத்தை பவுல் இவ்விதம் கூறுகிறார். "மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால்.

1."கிறிஸ்துவும்எழுந்திருக்கவில்லையே"(வசனம் 13).

2. "கிறிஸ்துவை பிரசங்கிப்பதும் விருதா" (வசனம் 14).

3. "கிறிஸ்துவிலுள்ள விசுவாசமும் விருதா" (வசனம் 14,17).

4. "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று" சொல்லுவது பொய்ச்சாட்சியாகும் (வசனம் 15).

5. "நாம் இன்னும் நமது பாவத்தில் இருக்கிறோம்" (வசனம்17).

6. "நாம் இன்னும் பாவத்தில் குற்ற உணர்வையும், ஆக்கினையையும் சுமந்துக்கொண்டிருப்போம்" (வசனம் 17).

7. கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் கெட்டுப்போய், மீண்டும் உயிர்த்தெழும்பும் நம்பிக்கை அற்றவர்களாயிருப்பார்கள் (வசனம் 18).

8. எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (வசனம் 19).

ஆ. "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்தார்! என்று தொடர்ச்சியாக பவுல் கூறுகிறார். அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின் இயேசுவின் தரிசனத்தைக் கண்கூடாக பார்த்தவர்களின் செய்திகளை பவுலிடம் மற்ற கிறிஸ்தவர்கள் சொன்னார்கள்.தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப் பண்ணுவேன் (எசே 29:12).

அவர் பேதுருவுக்கும், பன்னிருவருக்கும் (அப்போஸ்தலருக்கும்), ஒரே நேரத்தில் ஐந்நூறுக்கு அதிகமான விசுவாசிகளுக்கும், மற்றும் யாக்கோபுக்கும் தரிசனமானார். மரித்தோரிலிருந்து எழுந்தப்பின்பு, தனக்கு இயேசு தரிசனமானார் என்றும் பவுல் கூறுகிறார்" (1கொரிந்தியர் 15:3,5-8).

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்
1 கொரிந்தியர் 15:12-23, 35-53

இ. வசனம்23. இயேசுவை விசுவாசிக்கும் யாவரும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். கொலோசெயர் 1:18-இல் பவுல் இவ்விதம் கூறி அதை உறுதிப்படுத்துகிறார். "இயேசுவே மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். எல்லாவற்றிலும் ஆதியுமானவர். எல்லாவற்றிலும் முதல்வரானாவர்" நாம் அவரது உயிர்த்தெழுதலில் அவருக்குப் பின் உயிர்ப்பிக்கப்படுவோம். முதலில் கிறிஸ்து இயேசு, பின்னர் அவரது சீஷர்கள். முதலில் சபையின் தலையானவர், பின்பு சபையிலுள்ள ஒவ்வொரு மறுபடியும் பிறந்த விசுவாசி

ஈ. ஒரு போதகராயிருந்து நான் அநேக அவிசுவாசிகளை அடக்கம் செய்திருக்கிறேன். அவர்கள் குடும்பத்தாரோடு பேசியிருக்கிறேன். அவர்களைக் குறித்த சில விறுவிறுப்பான காரியங்களை நான் கவனித்திருக்கிறேன்.

1. மரித்தோரின் உயிர்த்தெழுதலை அவர்கள் விசுவாசியாதபடியினால் அவர்களுக்கு மரணத்தைப் பற்றிய ஒரு பெரிய பயம் உண்டு.

2. எப்பொழுதும் கடந்த காலத்தைப் பற்றியே பேசுகிறார்கள். அவர்களுக்கு மரித்தோரின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாததால், எதிர்காலத்தைக் குறித்து அவர்கள் பேசுவதேயில்லை.

4. மறுஜென்மத்தைக் குறித்து நம்பிக்கை உள்ளவர்கள் கூட, மரணத்தைப் பற்றி பயம் கொண்டிருக்கிறார்கள். கடைசி முடிவான உண்மையை நாங்கள் அடையும் அளவுக்கு நல்லவர்களாக இருக்கமுடியாது. மேலும் தாங்கள் எந்த உருவத்தில் மறுஜென்மமடைவார்கள் என்றும் அவர்கள் அறியார்கள். மறுபக்கத்தில், கிறிஸ்தவர்களோ மரணத்தைக் குறித்து அஞ்சுவதில்லை. எதிர்காலத்தைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. கிறிஸ்துவுக்குள் உள்ளவர்களுக்கு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டு என்பதை அறிந்திருக்கிறார்கள்.

2. கிறிஸ்துவுக்குள் உள்ளவர்களின் சரீரம் மகிமையடைந்த சரீரங்களாய் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும் (15:35-50).

அ. வசனம் 36-41. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்த தனது தர்க்கத்தை அப்போஸ்தலர் முடித்தவுடன், கொரிந்து விசுவாசிகளின் இரண்டாவது கேள்வியை அவர் தாக்குகிறார். "மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே (கல்லறையிலிருந்து) வருவார்களென்று ஒருவன்" கேட்கக்கூடும். செடியின் வாழ்க்கை (வசனம் 36-38), மாம்சமுடைய ஜீவன்கள் (வசனம்39) மற்றும் வானத்திற்குரிய மேனிகள் (வசனம் 40-51) ஆகிய உதாரணங்களைக் கொடுத்து உயிர்த்தெழுந்த சரீரத்தின் சுபாவத்தைக் குறித்த விவாதத்தை அவர் தொடருகிறார்.

1. ஒரு விதையை நீங்கள் விதைக்கும்போது, விதைக்கப்பட்ட விதையிலும், முளையின் மேனியானது வித்தியாசமாயிருக்கிறது.

2. மனுஷர்கள், மிருகங்கள், பறவைகள் மற்றும் மச்சங்களின் மாம்சங்களில் வித்தியாசங்கள் உண்டு.

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்
1 கொரிந்தியர் 15:12-23, 35-53

3. வானத்துக்குரிய மேனிகளின் மகிமைக்கும், பூமிக்குரிய மேனிகளின் மகிமைக்கும் கூட வித்தியாசம் உண்டு. உண்மையில் வானத்திற்குரிய மேனிகளின் மகிமையும் (சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்) வித்தியாசப்படுகின்றன.

ஆ. வசனம் 42-44 மரித்த விசுவாசிகளின் சரீரங்களுக்கும் அப்படியே இருக்கும். ஒரு விசுவாசியின் சரீரம் மரிக்கும்போது, அது அழிவுள்ளதாய், கனவீனமானதாய், பலவீனமுள்ளதாய், ஜென்மசரீரமாய் இருக்கும். அது உயிரோடு எழுப்பப்படும்போதோ அது அழிவில்லாததாய், மகிமையுள்ளதாய் பலமுள்ளதாய், ஆவிக்குரியதாய் இருக்கிறது. ஆவிக்குரியதாய் என்பது.....அல்லது நமது தற்போதுள்ள ஜென்மசரீரத்திற்கு ஒப்பாக உருவாக்கப்பட்ட சரீரம் என்று அது பொருள்படும். ஆனாலும் அது முற்றிலும் வேறுப்பட்டது. பழைய சரீரத்திற்கும், புதிய சரீரத்திற்கும் தொடர்ச்சியுண்டு. ஆனாலும் ஏற்படுகிற ஒரு பெரிய மாற்றமுண்டு.

இ. இயேசுவின் உயிர்த்தெழுதலானது, அவரது சரீரத்தின் உயிர்த்தெழுதலாகும். அவர் தமது சீஷர்களுக்கு தரிசனமாகி "நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள். என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" என்று சொன்னார். (லூக்கா 24:39). கல்லறையில் வைக்கப்பட்ட சரீரத்துக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் சரீரத்துக்கும் ஒரு தொடர்ச்சி இருந்தது. ஆனாலும் ஒரு பெரிய மாற்றம் உண்டானது. சரீரம் மகிமைபடைந்தது!.

ஈ. வசனம் 50. "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை" தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்வதற்கென்று, தேவனுடைய பிள்ளைகள், புதிதாய் உருவேறப்படுத்தப்பட்ட, மகிமையுள்ள சரீரங்கள் வேண்டும் என்று பவுல் அர்த்தப்படுத்துகிறார். அவர்களுடைய சரீரங்கள், கிறிஸ்துவின் மகிமையடைந்த சரீரத்தைப் போலாக வேண்டும்"

உ. வசனம் 49. "மண்ணானவனுடைய (ஆதாம்) சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய (இயேசு) சாயலையும் அணிந்துக்கொள்வோம்". தம்முடைய அநந்த ஞானத்தில் யார் தமது குமாரனை தங்கள் ஆண்டவரும்,இரட்சகமாய்ஏற்றுக்கொள்வார்களென்று தேவன் அறிந்திருந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய (உயிர்த்தெழுந்த) சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார் (ரோமர் 8:29).

3. கடைசி எக்காள தொனியிலே மரித்த விசுவாசிகளின் சரீரங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையில் எழுப்பப்படும் (15:51-53).

அ. வசனம் 51. உயிர்த்தெழுந்த விசுவாசிகளின் சரீரங்களைக் குறித்த தனது கலந்துரையாடலை பவுல் முடித்துவிட்டார். இப்பொழுது மரித்தவர்கள் எவ்வாறு எழுந்திருப்பார்கள் என்று கொரிந்து விசுவாசிகளின் மூன்றாவது கேள்விக்கு, விளக்கம் தருகிறார்". கேளுங்கள் இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். மரித்தவர்கள் எப்படி எழுந்திருப்பார்கள் என்ற செய்தி அதுவரை மறைக்கப்பட்டிருந்தது. இப்பொழுதோ அது கிறிஸ்துவாலும் அவரது அப்போஸ்தலர்களாலும் உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆ. சில விவரங்களை கொடுக்க பவுல் பின்னர் தொடருகிறார்.

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல்
1 கொரிந்தியர் 15:12-23, 35-53

1. "நாம் எல்லோரும் நித்திரையடைவதில்லை" சில விசுவாசிகள் பூரணத்தையும் கல்லறைகளையும் அனுபவிக்கமாட்டார்.

2. "நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்". உயிரோடிருந்தாலும், கல்லறையிலிருந்தாலும், எல்லா விசுவாசிகளும், இயேசு திரும்ப வரும்போது மகிமையான சரீரங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

3. "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே" பகுக்கமுடியாத கால துண்டுக்குள்ளே, நாம் பொருளை எவ்வளவு விரைவில் நோட்டமிட முடியுமோ, அதில் எல்லா விசுவாசிகளின் சரீரங்களும் மகிமைபடையும்.

4. "கடைசி எக்காளம் தொனிக்கும்போது" கிறிஸ்து, மத்திய ஆகாயத்தில் தேவ ஜனங்களை சந்தித்து, அவர்கள் எடுத்துக்கொள்ளப்படும் போது, தொனிக்கும் எக்காளம் இது (1தெசலோனிக்கேயர் 4:15-17).

இ. வேதத்திலே எக்காளமானது, கொண்டாட்டம், வெற்றி ஆகியவற்றோடு அடிக்கடி தொடர்புடுத்தப்படுகிறது. யூபிலி ஆண்டையும், (லேவியராகம் 25:9) மற்றும் எக்காள பண்டிகை (லேவியராகமம் 23:24). ஆகியவற்றை அறிவிக்க அது பயன்படுத்தப்பட்டது. வனாந்தரத்திலுள்ள இஸ்ரவேலர், எல்லாரும் ஒன்று கூட வேண்டியபோதோ அல்லது வேறொரு பயணத்தை தொடங்க வேண்டியபோதோ எக்காளத்தை ஊதினார்கள் (எண்ணாகமம் 10:18).

ஈ. கடைசி எக்காளம் தொனிக்கும்போது, "இயேசு.....தேவனுடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலிப்பியர் 3:21).

உ. நமது மரித்த சரீரங்கள் உயிர்த்தெழ செய்வது பரிசுத்த ஆவியானவர் தான். "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிப்பிப்பார்" (ரோமர் 8:11).

முடிவுரை

அ. விசுவாசிகளின் மரித்த சரீரங்களின் உயிர்த்தெழுதலைக் குறித்த பவுலின் கலந்துரையாடலில் மூன்று உண்மைகள் நமக்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

1. கிறிஸ்துவுக்குள்ளவர்களுக்கு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் உண்டு.

2. கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளின் சரீரங்கள், மகிமையுள்ள சரீரங்களாய் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும்.

3. விசுவாசிகளின் மரித்த சரீரங்கள் கடைசி எக்காள தொனியின் போது, பரிசுத்த ஆவியின் வல்லமையால் எழுப்பப்படும்.

ஆ. இந்த செய்தி, ஒரு விசுவாசியின் அடக்கத்தின்போது பிரசங்கிக்கப்படுமானால், முக்கிய கருத்துக்களை மரித்தவரின் வாழ்க்கைக்கு சம்பந்தப்படுத்துங்கள்.

இ. மரண பயத்தை அனுபவித்தவர்கள், கடந்துபோன தங்களுக்கு அன்பானவருக்காக துக்கப்படுபவர்கள்.